பல்கலைக்கழக மானியக்குழு (UGC) அங்கீகாரம் பெற்ற மாதஇதழ்
New Centurian Ungal Noolagam ISSN 2394-7535-117

நியூ செஞ்சுரியின்

# உங்கள் நூலகம்

மாத இதழ்

New Centurian Ungal Noolagam (Tamil English - Bilingual Monthly)



| மலர் : 17<br>Vol : 17 | இதழ் : 11<br>Issue : 11 | www.ncbhpublisher.in | பிப்ரவரி 2025<br>February 2025 | விலை<br>Price | ₹ 45/- | ஆண்டு சந்தா<br>Annual Subscription | ₹ 540/- |
|---|---|---|---|---|---|---|---|





## சர்வதேச புத்தகக் கண்காட்சியில் என்சிபிஹெச்
- ப.கு.ராஜன்

## சுப்பிரமணிய சிவா தனித்தமிழ் இயக்க தொடக்க முன்னோடியா?
- டாக்டர் சு.நரேந்திரன்

## என்றும் நமக்குத் தேவைப்படும் நூல்
- க. பழனித்துரை


13.1.2025 அன்று தமிழ் வளர்ச்சித் துறை மற்றும் நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் சார்பில் தயாரான அண்ணல் அம்பேத்கர் ஆக்கங்களின் முதல் 10 தொகுதிகளை மாண்புமிகு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமைச் செயலகத்தில் வெளியிட்டார். இதில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம் இ.ஆ.ப., தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் வே.ராஜாராமன். இ.ஆ.ப., தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ந.அருள், புலவர் செந்தலை ந.கவுதமன், பேராசிரியர் வீ. அரசு, பேராசிரியர் முனைவர் மு. வளர்மதி, கல்லூரிக் கல்வி இயக்ககத்தின் மேனாள் துணை இயக்குநர் அ. மதிவாணன் மற்றும் நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் மேலாண்மை இயக்குநர் க. சந்தானம் ஆகியோர் கலந்துகொண்டனர்.





# நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் புதிய வெளியீடுகள்




₹ 360/-




₹ 400/-




₹ 170/-




கற்றது கைம்மண்ணளவு
கல்லாதது உலகளவு

**நியூ செஞ்சுரியின்**

# உங்கள் நூலகம்

**மாத இதழ்**

*திருவள்ளுவராண்டு 2055*

*மலர் - 17 இதழ் - 11 - பிப்ரவரி 2025*

ஆசிரியர்

**த.ஸ்டாலின் குணசேகரன்**

ஆசிரியர் குழு

க.சந்தானம்
பேராசிரியர் ஆ.சிவசுப்பிரமணியன்
முனைவர் ச.சுபாஷ் சந்திரபோஸ்
முனைவர் ந.முத்துமோகன்
முனைவர் மு.இராமசுவாமி
முனைவர் நா.இராமச்சந்திரன்
முனைவர் பா.ஆனந்தகுமார்
முனைவர் ஞா.ஸ்டீபன்
ப.கு.ராஜன்
முனைவர் இரா.அறவேந்தன்
முனைவர் இரா.காமராசு
முனைவர் உ.அலிபாவா

இதழ் வடிவமைப்பு

*கா. குணசேகரன்*

நியூ செஞ்சுரி வாசகர் சங்கம்
பதிவு எண் : 21/2005/ 11/2/2005
16 (142). ஜானி ஜான்கான் ரோடு.
இராயப்பேட்டை. சென்னை - 600 014
ungalnoolagam@gmail.com
இணைய தள முகவரி: www.ncbhpublisher.in

**தனி இதழ் ₹ 45.00. ஆண்டு சந்தா ₹ 540.00**
**மாணவர்களுக்கு ₹ 500.00**
**ஆயுள் சந்தா ₹ 5400.00**
**அயல்நாடு (ஆண்டு சந்தா) ₹ 4050.00**

*சந்தா தொகையை*
**New Century Reader's Sangam**
**Central Bank of India**
**Ambattur Branch. Chennai - 600 050**
**A/c.No. 1035249018**
**IFSC Code : CBIN0282161**
*என்ற வங்கிக் கணக்கில் செலுத்தலாம்.*

உங்கள் நூலகம் பற்றிய விமர்சனக் கடிதங்கள்,
உங்கள் நூலகத்திற்கான படைப்புகள், கட்டுரைகள்,
நூல் விமர்சனங்கள், மதிப்புரைக்கான நூல்கள்
ஆகியவற்றைக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்புமாறு வேண்டுகிறோம்.

**ஆசிரியர்**
**உங்கள் நூலகம்**
**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், (பி) லிட்.,**
**41-பி. சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்.**
**அம்பத்தூர். சென்னை - 600 050.**
**தொலைபேசி எண் : 044-26251968, 26258410**


## உள்ளே...


1. இந்திய அரசமைப்புச் சட்டம் ஒரு மக்கள் ஆவணம் — ஆசிரியர் குழு .......... 04
2. சர்வதேச புத்தகக் கண்காட்சியில் என்சிபிஹெச் — ப.கு.ராஜன் .......... 07
3. கவிதை என்னும் கலை — பாவண்ணன் .......... 11
4. சுப்பிரமணிய சிவா தனித்தமிழ் இயக்க தொடக்க முன்னோடியா? — டாக்டர் சு.நரேந்திரன் .......... 14
5. தமிழ் நாட்டுப்புறக் கலையறிஞர் கலைமாமணி டாக்டர் கே.ஏ. குணசேகரன் — முனைவர் சு.மாதவன் .......... 18
6. என்றும் நமக்குத் தேவைப்படும் நூல் — க. பழனித்துரை .......... 21
7. நாட்டார் மரபைத் தழுவிய படைப்பே சிலப்பதிகாரம் — முனைவர் சே. கரும்பாயிரம் .......... 25
8. பழங்குடிக் குழுக்களின் உரிமைகளை மீட்டெடுப்பதற்கான கைவிளக்கு — முனைவர் மு. ஏழுமலை .......... 31
9. தமிழ் ஒப்பிலக்கிய வரலாற்றில் பேராசிரியர் பா.ஆனந்தகுமாரின் தடம் — முனைவர் மு.சங்கர் .......... 35
10. புதுக்கோட்டை மண் மக்கள் வரலாறு — சி.பாலையா .......... 41
11. பாக்களால் வரைந்த பாரதி வரலாறு — அ. அன்பரசன் .......... 45
12. மனிதர்களின் மேன்மையைப் பேசும் புனைகதைகள் — மதுரை சரவணன் .......... 49
13. மானுடவியல் குறித்த முக்கியமான ஆவணம் — து. லோகபிரியா .......... 53
14. சு.சமுத்திரம் புதினங்களில் பொதுவுடைமைச் சிந்தனைகள் — ம.ஹரிகிருஷ்ணன் .......... 56
15. தமிழில் 'தாய்' நாவல் மொழிபெயர்ப்புகளும் அதற்குப் பிந்தைய தமிழ் நாவல் போக்குகளும் — கா.தங்கதுரை .......... 61
16. குடிநீராக விளங்கிய தாமிரபரணி தண்ணீர் — மீ. பார்வதி .......... 66
17. A Study on the Repercussion of Ecological.... — Ms K. Maheshini .......... 69

தலையங்கம்




# இந்திய அரசமைப்புச் சட்டம்

## ஒரு மக்கள் ஆவணம்

ஆகஸ்ட் 15... இந்திய சுதந்திர தினம். இந்தத் தேதியை முடிவு செய்தவர்கள் ஆங்கிலேய ஆட்சியாளர்கள்.

ஜனவரி 26... குடியரசு தினம். இந்தத் தேதியைத் தீர்மானித்தவர்கள் சுதந்திர இந்தியாவின் ஆட்சி பீடத்தை அலங்கரித்த நம் தேசத்தலைவர்கள். ‘இந்திய அரசமைப்புச் சட்டம்’ பிரகடனப்படுத்தப்பட்ட தேதி... நடைமுறைக்கு வந்த நாள் ஜனவரி 26, 1950.

இந்தத் தேதியில் சிறப்புமிக்க இச்சட்டத்தை அமல்படுத்தவும்... அதனை குடியரசு நாளாக அறிவிக்கவும்... ஒரு வலிமையான வரலாற்றுக் காரணம் இருந்தது.

1929 டிசம்பர் மாதத்தில் காங்கிரஸ் மாநாடு லாகூரில் கூடியது. அம்மாநாட்டில் ‘ஒத்துழையாமை இயக்கம்’ நடத்தத் தீர்மானம்

நிறைவேற்றப்பட்டது. அம்மாநாட்டின் நிறைவாக அன்றைய அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டித் தலைவராக விளங்கிய ஜவகர்லால் நேரு நள்ளிரவில் மூவர்ணக் கதர்க் கொடியை ஏற்றி வைத்து ‘இது சுதந்திரக் கொடி’ என்று பிரகடனப்படுத்தினார். இனி ஆண்டுதோறும் ஜனவரி 26ஆம் தேதியன்று ‘சுயராஜ்ய தினம்’ கொண்டாடப்பட வேண்டுமென்று காங்கிரஸ் மாநாட்டில் முடிவெடுக்கப்பட்டுள்ளதாக அறிவித்தார்.

முடிவெடுத்தவாறு 1930ஆம் ஆண்டு ஜனவரி 26இல் ‘சுயராஜ்ய தினம்’ முதன் முதலாக நாடெங்கும் கொண்டாடப்பட்டது.

அதன் பிறகு சுதந்திரம் கிடைக்கின்ற வரை 17 ஆண்டுகள் அதே ஜனவரி 26இல் ஆண்டுதோறும் ‘சுயராஜ்ய தினம்’ கொண்டாடப்பட்டது.

அதன் விளைவாக விடுதலைப் போராட்ட வீரர்கள் பிரிட்டிஷ் காவலர்களால், ராணுவத்தினரால் சொல்லொணாத் துன்பத்திற்கு ஆளாகி பல்லாயிரக் கணக்கில் சிறைக்குள் அடைக்கப்பட்டனர்; வார்த்தைகளில் வர்ணிக்க முடியாத சித்ரவதைக்கு ஆளாக்கப்பட்டனர்.

‘சுயராஜ்ய தினம்’ கொண்டாடிய காரணத்திற்காக தியாகம் செய்த விடுதலை வீரர்களை நினைவூட்டவும், அவர்களுக்கு மரியாதை செய்கிற விதத்திலும் சுதந்திர இந்தியாவின் தலைவர்கள் ‘ஜனவரி 26’ஆம் தேதியை குடியரசு நாளாக அறிவித்தனர்.

இதற்கு மூலமாக விளங்குகிற ‘இந்திய அரசமைப்புச் சட்டம்’ உருவான வரலாற்றையும் அச்சட்டத்தின் முக்கிய அம்சங்களையும் ஓரளவேனும் கல்வியறிவுள்ள அனைத்துக் குடிமக்களும் அறிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும்.

நம் நாடு சுதந்திரம் பெறுவதற்கு முன்பு விடுதலைபெற்ற உலகின் முக்கிய நாடுகள் சிலவற்றின் அரசியல் அமைப்புச் சட்டங்கள், ஐ.நா. சபையின் மனித உரிமைப் பிரகடனம் உள்ளிட்ட பல உலகளாவிய சட்ட ஆவணங்கள் நம் நாட்டுச் சட்ட உருவாக்கத்திற்கு முன்பு அலசி ஆராயப்பட்டுள்ளன.

அரசமைப்புச் சட்டம் உருவாக்கப்பட 296 தேர்வு செய்யப்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட அரசியல் நிர்ணயசபை ஏற்படுத்தப்பட்டது. அதன் தலைவராக டாக்டர் ராஜேந்திரபிரசாத் தேர்வு செய்யப்பட்டார். இவரே முதல் குடியரசுத் தலைவரானார். அன்றைய பிரதமர் ஜவகர்லால் நேரு.

சட்டவரைவுக்குழுத் தலைவராக அண்ணல் டாக்டர் அம்பேத்கர் விளங்கினார். வரைவுச் சட்டத்தின்மீது 7635 திருத்தங்கள் அரசியல் நிர்ணயசபையில் கொண்டுவரப்பட்டன. 2473 திருத்தங்கள் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு 20க்கும் மேற்பட்ட நாள்கள் தொடர்ந்து தீவிரமாக விளக்கம்–விவாதம்–கருத்துப்பரிமாற்றம் நடைபெற்ற பின்னர் சட்டம் இறுதி வடிவம் பெற்றது. அரசமைப்புச் சட்ட உருவாக்கத்தில் டாக்டர் அம்பேத்கரின் பங்களிப்பு முத்திரை பதிக்கத்தக்கதாகும்.

1976ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட 42ஆவது சட்டத் திருத்தத்தின் வாயிலாக அரசமைப்புச் சட்டத்தின் முகப்புரையில் இந்திய நாடு ‘மதச்சார்பற்ற நாடு’ என்றும் ‘சோசலிச நாடு’ என்றும் வரையறுக்கும் விதத்தில் இந்த இரண்டு சொற்றொடர்களும் சேர்க்கப்பட்டன.

இதுவரை 104 திருத்தங்கள் அரசமைப்புச் சட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இன்றைய சமூக மற்றும் அரசியல் சூழலில் அரசமைப்புச் சட்டத்தின் வரலாறும் அச்சட்டத்தின் அடிப்படைக் கூறுகளும் அச்சட்டம் வரையறுத்துள்ள குடிமக்கள் உரிமைகள் மற்றும் கடமைகள் பற்றிய அடிப்படை அறிவும் அவை பற்றிய விழிப்புணர்வும் அனைத்துக் குடிமக்களுக்கும் அவசியப்படுகிறது.

அரசமைப்புச் சட்டத்தைப் பாதுகாக்க வேண்டும். அதற்கு அச்சட்டம் பற்றிய அடிப்படைப் புரிதலை மக்கள்மயமாக்க வேண்டும். தமிழில் இச்சட்டம் பற்றியான பல நூல்கள் பல கோணங்களில் வெளிவர வேண்டியது இன்றைய காலத்தின் தேவையாகும்.

‘அரசமைப்புச் சட்டம் மேன்மையானதாக இருந்தாலும் அதைச் செயல்படுத்துபவர்கள் மோசமானவர்களாக இருந்தால் சட்டமும் மோசமானதாகிவிடும். எதிர்காலத்தில் அரசியல் கட்சிகள் எவ்வாறு இருக்கும் என்று இப்போது எதுவும் சொல்ல முடியாது. சாதி மத பேதங்களே நம்முடைய எதிரிகள். நாட்டிற்கும் மேலானதாக மதத்தை அரசியல் கட்சிகள் தூக்கிப் பிடிக்குமேயானால் நமது சுதந்திரம் இரண்டாவது முறையாக இன்னலுக்கு ஆளாகும்’ என்ற அண்ணல் அம்பேத்கரின் அக்கால மணிவாசகம் இன்று ஆழ்ந்து சிந்திக்கத்தக்கதாகும்.

**ஆசிரியர் குழு**

# மார்க்சிய லெனினியம் புதிய வெளியீடுகள்


## உலகத் தொழிலாளர்களே, ஒன்றுசேருங்கள்!

மார்க்சியம் கற்போம், மார்க்சிடம் கற்போம்

மார்க்சின் மூலதனம் – சிறு நூல்கள் தொடராக




₹ 80/-




₹ 65/-




₹ 60/-

**தமிழ்ச் சூழலுக்கு ஏற்ற சொற்கள், துணைத் தலைப்புகள், கூடுதல் விளக்கங்கள்**
**கலைச்சொல் விளக்கப் பட்டியல், பெயர்க் குறிப்பு அகராதி**

லெனினியம் கற்போம், லெனினிடம் கற்போம்!




₹ 100/-

**தமிழ்ச்சூழலுக்கு ஏற்ற அரசியல் சொற்கள், எளிய இக்காலத் தமிழ்நடை, கூடுதல் விளக்கங்கள், பெயர் விளக்கக் குறிப்பு**




₹ 20/-




# சர்வதேச புத்தகக் கண்காட்சியில் என்சிபிஹெச்

தமிழ்நாடு அரசு ஒழுங்கமைத்து நடத்தி வரும் சர்வதேச புத்தகக் கண்காட்சி, 'தமிழிலிருந்து உலகிற்கு - உலகிலிருந்து தமிழிற்கு' என்ற முழக்கத்தின் கீழ் தமிழ் நூல்களை உலக மொழிகளிலும் ஏனைய இந்திய மொழிகளுக்கும் கொண்டு செல்வது, உலக மொழிகளில் வந்துள்ள சிறப்பான நூல்களை தமிழிற்கு கொண்டு வருவது என்ற நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டது.

கடந்த 2023 ஆம் ஆண்டு ஜனவரியில் நடைபெற்ற நிகழ்விலும் 2024 ஆம் ஆண்டு ஜனவரி நிகழ்விலும் என்.சி.பி.ஹெச் நிறுவனம் கலந்துகொண்டது. அது போல 2025 ஜனவரி 16-18 நாட்களில் சென்னையில் நடைபெற்ற சர்வதேச புத்தக் கண்காட்சியிலும் என்.சி.பி.ஹெச் கலந்துகொண்டது. நிறுவனத்தின் சார்பாக ப.கு. ராஜன் முழுநேரமும் கலந்துகொண்டார். தோழர் அருண்நாத் அந்த வளாகத்தில் இருந்த என்.சி.பி.ஹெச் – சிறார் இலக்கிய அரங்கை (மொத்தம் அனுமதிக்கப்பட்ட மூன்று அரங்குகளில் என்.சி.பி.ஹெச் அரங்கும் ஒன்று) கவனித்துக் கொண்டதோடு பல்வேறு பேச்சுவார்த்தைகளிலும் கலந்துகொண்டார். என்.சி.பி.ஹெச் நிறுவனத் தலைவர் தோழர்.ஸ்டாலின் குணசேகரன், பொது மேலாளர் தோழர்.சண்முகநாதன் ஆகியோரும் நிறைவு விழாக்களில் கலந்துகொண்டனர். தோழர். ஸ்டாலின் குணசேகரன் விழாவின் உயர்மட்ட ஆலோசனைக் குழு உறுப்பினர் என்பது குறிப்பிடத்தக்கது.




**ப.கு.ராஜன்**

2023 ஆம் ஆண்டு, என்.சி.பி.ஹெச் சார்பாக ஆறு புரிந்துணர் ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின. தமிழக அரசு இரண்டு நூல்களுக்கு மொழிமாற்ற உதவித் தொகை வழங்கியது. அதன்படி சி.எஸ். சுப்பிரமணியம், கே.முருகேசன் ஆகியோர் எழுதிய 'சிங்காரவேலர் – வாழ்வும் பணியும்' நூலும் சு.தமிழ்ச் செல்வி எழுதிய 'அளம்' எனும் நாவலும் மலையாள மொழியில் மொழிபெயர்க்கப்பட்டு வந்தது. எழுத்தாளர் சு.தமிழ்ச்செல்வியின் நாவலான 'அளம்' மலையாளத்தில் மொழிபெயர்க்கப்பட்டு 'லவணம்' என்ற பெயரில் வெளிவந்தது. கண்காட்சியின் நிறைவு விழாவில் பங்கேற்ற முதல்வர் அவர்களிடம் கையளிக்கப்பட்ட முப்பது நூல்களில் அளம் – லவணம் ஒன்று என்பது சிறப்பு. 'சிங்காரவேலர் – வாழ்வும் பணியும் இன்னும் ஓரிரு மாதங்களில் வெளிவரும் எனத் தெரிகின்றது.

1925 ஆம் ஆண்டில் கான்பூர் நகரில் நடந்த இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முதல் மாநாட்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட கட்சியின் பெருந்தலைவரான (Chairman) சிங்காரவேலர் குறித்த நூல் கட்சியின் 100 ஆவது ஆண்டில்தான் முதன்முறையாக தமிழ், ஆங்கிலம் அல்லாத வேறு மொழியில் வருகிறது என்பது துரதிர்ஷ்டமானது என்றாலும் இப்போதாவது வருகிறதே என நாம் மகிழ்ச்சி கொள்ளவேண்டியுள்ளது.

அதுபோல 'அளம்-லவணம்' நாவல் குறித்து மலையாளப் பதிப்பகமான சாய்கதம் நிறுவனத்தின் நிர்வாக மேலாளர் சங்கீதா மாத்யூ பகிர்ந்துகொண்ட செய்தியும் முக்கியமானது. 2000 ஆண்டுகளுக்கும் மேலாக தமிழகத்தில் இருந்துதான் 'உப்பு' மலையாள தேசத்திற்குச் சென்றுள்ளது. சங்க இலக்கியங்களில் உமணர்கள் கழுதைப் பொதியோடு (மேற்குத் தொடர்ச்சி) மலைகளைக் கடந்து சென்றதற்கு குறிப்புகள் இருப்பதாகக் கூறப்படுகின்றது. கேரளத்தின் நிலவியலும் வானியலும் உப்பு உற்பத்திக்கு ஏற்றது அல்ல. மூன்று வேளை உணவிலும் உப்பு இடம்பெற்றிருந்தாலும் மலையாள மக்கள், உப்பு எங்கிருந்து வருகின்றது. அதில் ஈடுபடும் மக்களின் 'பாடு' – கடின உழைப்பு (கடிணத்வானம்) என்பதை அறியார். உப்பு வயல் குறித்த இலக்கியம் மலையாளத்திற்குப் புதிது. அண்டை மாநிலமும் மொழி, கலாச்சாரம், பண்பாடு உள்ளிட்ட சகல அம்சங்களிலும் நெருக்கமான மக்களுக்கே தமிழகத்தின் முக்கியமான வாழ்வியல் இலக்கிய மொழிபெயர்ப்பு மூலம்தான் அறிமுகம் ஆகின்றது. இது மொழிபெயர்ப்பு இலக்கியத்தின் முக்கியத்துவத்திற்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டாக அமைந்தது.




2024 ஆம் ஆண்டு நடைபெற்ற நிகழ்வில் முறையான காப்புரிமைக் கையேடு, நூல்கள் பற்றிய விவரக் குறிப்புகள் ஆகியவற்றோடு கலந்துகொண்டோம். பத்து புரிந்துணர் ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின. சிங்காரவேலர் வாழ்க்கை வரலாறு மராத்தி, குஜராத்தி மொழிகளில் மொழிமாற்றம் செய்யவும், பொன்னீலன் அவர்களின் 'கரிசல்' நாவல் மலையாளம், மராத்தி, குஜராத்தி, அரபி, துருக்கிய மொழிகளிலும் எழுத்தாளர் சு.தமிழ்ச்செல்வி எழுதிய 'அளம்' நாவல் மராத்தி, குஜராத்தி ஆகிய மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட புரிந்துணர் ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின. வைக்கம் முகம்மது பஷீர், ஸ்ரீநாராயண குரு ஆகியோர் பற்றிய நூல்கள் மலையாளத்திலிருந்தும் துருக்கிய இடதுசாரி எழுத்தாளரான ஒயா பைதர் எழுதிய 'லாஸ்ட் வேர்ல்டு' எனும் நூல் துருக்கிய மொழியிலிருந்தும் தமிழிற்கு மொழிபெயர்கப்படவும் புரிந்துணர் ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின. தழ்நாடு அரசின் நிதி நல்கை நான்கு நூல்களுக்கு கிடைத்தது. ஆனால் பணிகள் இன்னும் தொடக்க நிலையிலேயே உள்ளன.

2023 ஆம் ஆண்டில் 24 நாடுகள் பங்கு பெற்றன. சுமார் 300 புரிந்துணர் ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின. 2024

ஆம் ஆண்டு சுமார் 40 நாடுகள் பங்கு பெற்றன; சுமார் 700 ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின. இந்த ஆண்டு 60 க்கும் மேற்பட்ட நாடுகள் பங்குபெற்றன. சுமார் 1200 ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளன. புரிந்துணர் ஒப்பந்தங்கள் எல்லாம் நிதி நல்கையாக மாறிவிடாது; நிதி நல்கை வழங்கப்படுவதாலேயே நூல் மொழிமாற்றம் செய்யப்பட்டு விடாது என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டியுள்ளது. இடைவிடாத பெருமுயற்சியில்தான் சிறிய பயன்களும் கிட்டும் எனத் தெரிகின்றது. அந்தப் புரிதலோடு பணியைத் தொடர வேண்டியுள்ளது.

இத்தோடு இந்த ஆண்டு முன்பு மூன்றாம் உலக நாடுகள் என்று அழைக்கப்பட்ட இப்போது முக்கண்ட நாடுகள் (Tricontinental) என அழைக்கப்படும் லத்தின் அமெரிக்க, ஆப்பிரிக்க, ஆசிய நாடுகள் அதிகமாக பங்குபெற்றது சிறப்பு. இந்த நாடுகளிலும் பல ஐரோப்பிய நாடுகளிலும் இருந்து வந்துள்ள பதிப்பகங்கள் இடதுசாரி, மதச்சார்பற்ற, ஜனநாயகக் கருத்துகள் கொண்ட நூல்களின் கொண்டு கொடுத்தலுக்குத் தயாராக இருப்பது நம்பிக்கையளிக்கும் செய்தியாகும்.

செர்பிய நாட்டின் பிரதிநிதி 'டிட்டோவின் மொழிபெயர்ப்பாளர்' என்ற நூலை தமிழில் கொண்டுவர முன்மொழிந்துள்ளார். நூலாசிரியரான இவான் இவாஞ்ஜி செர்பிய மொழியின் முதன்மையான எழுத்தாளராகக் கருதப்படுபவர். அவர் ஹிட்லரின் ஆஸ்விட்ஸ், புச்சன்வால்ட் வதை முகாம்களில் இருந்து உயிர் பிழைத்தவர். தன் தாய் தந்தையரை இந்த வதைமுகாம்களில் இழந்தவர். 95 வயதான இவர் சமீபத்தில்தான் மறைந்தார். அவர் பல ஆண்டுகள் மார்ஷல் டிட்டோவின் மொழிபெயர்ப்பாளராக இருந்தவர். அவர் பல நாவல்களை எழுதியிருந்தாலும் 'டிட்டோவின் மொழிபெயர்ப்பாளர்' என்ற பெயரில் டிட்டோ காலம் குறித்தும் தனது அனுபவங்கள் குறித்தும் எழுதியுள்ள நூல் பொருத்தமாக இருக்கும் எனப் பேச்சுவார்த்தையில் கருதினோம். அதற்கான மொழிபெயர்ப்பிற்கு செர்பிய அரசு நிதிநல்கையும் அளிக்கத் தயாராக உள்ளது. காப்புரிமை குறித்து பேச்சுவார்த்தை நடந்து வருகின்றது. அதுபோல போர்ச்சுகீசிய நிறுவனமான லேயா, பிரேஸிலிய எழுத்தாளர், இடமார் வீய்ரா ஜூனியர் (Brazilian author Itamar Vieira Junior) எழுதி சர்வதேச அளவில் பெரும் விற்பனை கண்ட 'வளைந்த கலப்பை' (TORTO ARADO -Crooked Plow) நூலை ஆங்கிலம் வழி தமிழ் மொழிபெயர்ப்பிற்கு பரிந்துரைத்துள்ளது.

வியட்நாம் நாட்டின் பதிப்பகமான தைய்ஹா புக்ஸ், வியட்நாம் போராட்டத்தில் ஹோசிமின்



அவர்களுக்கு அடுத்த நிலையில் இருந்த ராணுவத் தலைவரான ஜெனரல் கியாப் குறித்த நூலை ஆங்கிலம், தமிழில் வெளியிட பரிந்துரைத்துள்ளது.

மலேசிய நாட்டின் செலாங்கோர் மாநில நூலகங்களின் பொறுப்பாளர்கள் NCBH நூல்களை வாங்குவதற்கான சாத்தியப்பாடுகள் குறித்து ஆர்வம் காட்டியுள்ளதோடு அவர்கள் மாநிலத்தில் நடக்கும் புத்தகக் கண்காட்சியில் NCBH பங்குபெற அழைப்பு விடுப்பதாகவும் கூறியுள்ளனர்.

ஆப்பிரிக்க நாடுகளான கென்யா, தான்சானியா, நைஜீரியா ஆகியவை என்.சி.பி.ஹெச் நிறுவனத்தின் சிறார் நூல்களை மிகவும் விதந்தோதினர். மொழிபெயர்ப்பு உரிமைகள் ஒருபுறமிருக்க ஆங்கில நூல்களை கொள்முதல் செய்வது, அவர்களுக்குத் தேவையான ஆங்கில நூல்களை என்.சி.பி.ஹெச் சின் அச்சகத்தில் அச்சிடுவது ஆகியவற்றிலும் ஆர்வம் காட்டியுள்ளனர். அரசின் நோக்கத்திற்கும் மேலான சில பயன்கள் விளைவதற்கான சாத்தியங்கள் இருக்கின்றன எனத் தெரிய வந்தது. கிடைத்துள்ள தொடர்புகளையும் வாய்ப்புகளையும் முறையாக தொடர்ந்து பயன்படுத்துவது நீண்டகால நோக்கில் மிகுந்த பயனளிப்பதாக இருக்கும்.

இந்த ஆண்டில் பதினைந்திற்கும் மேற்பட்ட பதிப்பகங்கள், இலக்கிய முகமைகளுடன் என்.சி.பிஹெச் நிறுவனம் பேச்சு வார்த்தை



நடத்தியது. ஆறு புரிந்துணர் ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளன.

நிகழ்வில் பங்கேற்ற ஏனைய மொழிப் பதிப்பகங்களில் பலவும் தங்கள் நூல்களை தமிழ்ப் பதிப்புரிமையை விற்பனை செய்யவே வந்திருந்தனர் என்பதாலும் வந்தவர்களில் பெரும்பான்மையினர் புனைவிலக்கியங்களை மட்டும் பதிப்பிப்பவர்கள் என்பதாலும் என்.சி.பி.ஹெச் நிறுவனத்தின் மரபார்ந்த பலமான அல்புனைவு (Non – Fiction) நூல்களை அதிகம் கொண்டு செல்வதற்கு வாய்ப்புகள் குறைவாக உள்ள நிலையில் இவை நல்ல தொடக்கம் என்றுதான் கூறவேண்டும்.

அரசு, தமிழகத்தின் தொல் வரலாறு, இலக்கிய வரலாறு, பொருளாதாரம், சமூகவியல் ஆகியவை குறித்து நூல்கள் வெளியிடும் வெளிநாட்டுப் பதிப்பகங்கள், அவை குறித்து ஆய்வு நடத்தும் பல்கலைக் கழகங்கள், அவற்றின் பதிப்பகங்கள் ஆகியவற்றின் பங்கேற்பை அதிகரிக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்பது நமது வேண்டுகோள். அத்தோடு அறிவியல் தொழில்நுட்ப நூல்களை தமிழுக்குக் கொண்டு வருவதற்கு முன்னுரிமை வழங்க வேண்டும். உலகிலிருந்து தமிழுக்கு வரவேண்டியதில் அறிவியல் நூல்கள் அதிகம் இருப்பது தமிழ் நவீன மொழியாவதற்கு இன்றியமையாதது என்பதை அதிகம் வலியுறுத்த வேண்டியதில்லை.

இந்த நூல்களுக்கான காப்புரிமைத் தொகைகளும் அவற்றின் அச்சு எண்ணிக்கைகளும் அரசின் உதவியின்றிச் செய்வதை மிகக் கடினம் என ஆக்கியுள்ளன. எனவே அரசின் நிதி நல்கையில் ஒரு பகுதியை இதற்கென ஒதுக்க வேண்டும் என்பதும் நமது வேண்டுகோள். இவை 'தமிழிலிருந்து உலகிற்கு – உலகிலிருந்து தமிழிற்கு' எனும் அருமையான நோக்கத்திற்கு இன்னும் வலு சேர்க்கும் என நம்புகின்றோம்.

●


**கட்டுரையாளர்: எழுத்தாளர், மார்க்சிய ஆய்வாளர்.**



18.01.2025 அன்று சென்னை அம்பத்தூர் நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத் தலைமை அலுவலகத்தில் தோழர் ஜீவானந்தம் அவர்களின் நினைவு நாளையொட்டி புகழஞ்சலி செலுத்தப்பட்டது. அப்போது என்சிபிஎச் நிறுவனத் தலைவர் ஸ்டாலின் குணசேகரன் அவர்கள் ஜீவாவின் நினைவுகளை எடுத்துரைத்தார். இதில் என்சிபிஎச் மேலாண்மை இயக்குநர் க.சந்தானம் மற்றும் தலைமை அலுவலகப் பணியாளர்கள் அனைவரும் கலந்துகொண்டனர்.



# கவிதை என்னும் கலை



பாவண்ணன்

நல்லாசிரியர்கள் எல்லாக் காலங்களிலும் தம் மாணவர்களை எவ்விதமான எதிர்பார்ப்பும் இன்றி தத்தம் துறைகளில் திறமை மிக்கவர்களாக மிளிர்வதற்குத் துணையாக இருக்கிறார்கள். அதே நல்லாசிரியர்கள் எல்லாக் காலங்களிலும் அந்த மாணவர்களால் நன்றியுடன் நினைக்கப்படுகிறார்கள்.

இது இக்கட்டுரைக்காக எழுதப்படும் புகழ்ச்சொல் அல்ல, கல்வி தொடங்கிய காலத்திலிருந்தே நிலவிவரும் பேருண்மை. துரோணர் காலத்திலிருந்து நம்மை இம்மண்ணில் ஆளாக்கி நிறுத்தியிருக்கும் ஆசிரியர்களை நினைத்துக்கொள்ளும் சீடர்கள் தொடர்பான எடுத்துக்காட்டுகளைச் சொல்லிக்கொண்டே செல்லலாம்.

உ.வே.சா. அவர்கள் மீனாட்சிசுந்தரம் பிள்ளையிடம் தமிழ் கற்றார். மீனாட்சிசுந்தரம் பிள்ளையைத் தம் ஆசிரியர் என அவரே மீண்டும் மீண்டும் எழுதி நிறுவினார். அவரைப் பற்றி உ.வே.சா. எழுதிய வாழ்க்கை வரலாறு அந்த வகைமையில் ஒரு செவ்வியல் படைப்பு.




"கவிதை
எழுதுவதைவிட
கவிதையைக்
கற்பிப்பது
மிகப்பெரிய
கலை."

**மலைப் பிஞ்சு,**
**அரசுப் பள்ளி மாணவர்களின் முதல் ஹைக்கூ**
**அகநி வெளியீடு - வந்தவாசி - விலை: ரூ.80/-**

பாலமுருகன் என்கிற செந்தில் பாலா ஒரு பள்ளியாசிரியர். நீண்ட ஆசிரியர் மரபில் சமகாலத்து எடுத்துக்காட்டாக வாழ்கிறார். செஞ்சியில் உள்ள இராஜா தேசிங்கு அரசு ஆண்கள் மேனிலைப்பள்ளியில் பணிபுரியும் அவர், தம்மிடம் படிக்கும் மாணவர்களை எழுதவைக்கும் முயற்சியில் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறார்.

இன்றைய தமிழகப் பள்ளிகளில் படைப்பூக்கமுள்ள மாணவ மாணவிகளைக் கண்டறிவதற்கும் அவர்களுடைய திறமைகளை வெளிக்கொணர்வதற்கும் பல வழிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மாணவ மாணவிகளுக்காக அரசு வெளியிடும் தேன்சிட்டு, ஊஞ்சல் போன்ற இதழ்கள் அவர்களின் படைப்பூக்கத்தை வளர்த்துக்கொள்ள உதவியாக இருக்கின்றன. இத்தருணத்தைப் பயன்படுத்திக்கொண்ட செந்தில் பாலா தம்மிடம் கல்வி கற்கும் மாணவ மாணவிகளிடம் கவிதை ஆர்வத்தை உருவாக்குகிறார். அவரே ஒரு கவிஞராக இருப்பதால் கவிதைகளில் தோயும் ஆர்வத்தை பிள்ளைகளிடம் முதலில் உருவாக்குகிறார். பிறகு, கவிதைகளை வாசிக்கவைக்கிறார். அதன் கட்டுமானத்தைப் புரியவைக்கிறார். பிறகு, அதன் ரகசியக்கதவுகளைத் திறந்து உலவும் ஆற்றலை வளர்த்துக்கொள்ளும் பயிற்சியையும் அளிக்கிறார்.

தண்ணீர் நிறைந்த ஏரிக்குள் இடுப்பளவு ஆழத்தில் நின்றுகொண்டு தம் இரு கைகளிலும் தன் மகனை ஏந்தி நீச்சல் பழக உதவியாக இருக்கும் ஒரு தந்தையைப்போல தம் மாணவர்கள் கவிதையை வாசிக்கவும் எழுதவும் தேவையான பயிற்சியை வழங்குகிறார் அவர். அப்பயிற்சியின் விளைவாக கவிதைகளை எழுதத் தொடங்கிய சில மாணவ மாணவிகள் நல்ல கற்பனை வளத்தோடு எழுதும் பக்குவத்தை அடைகிறார்கள். தம் எண்ணங்களையும் கற்பனைகளையும் வெளிப்படுத்த அவர்களுக்கு ஹைக்கூ வடிவம் எளிய வடிகாலாக அமைந்துவிட்டது. விசைகொண்டு எழுந்த அவர்கள் ஏராளமாக எழுதிக் குவித்துவிடுகிறார்கள்.

அனைவருடைய பாராட்டுகளையும் பெற்ற அம்மாணவக் கவிஞர்களின் கவிதைகளிலிருந்து சிறந்த அனுபவத்தைத் தரும் கவிதைகளை மட்டும் தேர்ந்தெடுத்து ஒரு தொகைநூலாக சமீபத்தில் உருவாக்கியிருக்கிறார் செந்தில் பாலா. கவிஞர் முருகேஷ் ஊக்க உரையை எழுதி அவர்கள் மீது வெளிச்சம் விழச் செய்திருக்கிறார். அகநி பதிப்பகம் அந்தச் சின்னஞ்சிறு தொகுதியை அழகாக வடிவமைத்து வெளியிட்டுள்ளது.

எல்லாப் பணிகளும் பாராட்டுக்குரியவை. இந்த மாணவ அணியிலிருந்து ஒரு சிலரேனும் எதிர்காலத்தில் குறிப்பிடத்தக்க ஆளுமையாக வளர்ந்தெழலாம். அப்போது அவர்கள் செந்தில் பாலாவின் பணியை நன்றியுடன் நினைத்துக்கொள்வார்கள்.

**விழுந்ததும் காற்றில்**
**பறந்ததும் காற்றில்**
**இலை**

ராகுல் என்னும் மாணவர் எழுதிய கவிதை இது. காற்று இலைக்குச் செய்தது தீமையா, நன்மையா என்பதை ஒருபோதும் பகுத்தறிய முடியாது. அது இயற்கையின் மாபெரும் புதிர். அப்புதிரை சின்னஞ்சிறு காட்சி வழியாக உணர்த்தும் கற்பனைக்கு அம்மாணவரின் மனம் இடம் கொடுத்திருக்கிறது. கிட்டத்தட்ட தேவதேவனின் கவிதைக்கு அருகில் வந்து நிற்கும் இச்சித்திரம் இத்தொகுதியின் மிக முக்கியமான அடையாளம்.

**மேகம் கருத்தது**
**பூக்கள் மகிழ்ந்தது**
**மழை பெய்யவில்லை**

தமிழரசன் என்னும் மாணவர் எழுதிய கவிதை இது. மேகம் கருத்தால் மின்னலடித்து மழை பொழியும் என்பது ஒரு நம்பிக்கை. மழை பொழிந்தால் அதன் ஈரம் பட்டு மின்னும் இதழ்களோடு அசையும் பூக்களைப் பார்க்கும்போது நம்மையறியாமல் நம் முகம் மலரும். இவ்விரண்டு சித்திரங்களுமே காட்சிப்பொருளாகின்றன. ஆனால் இவ்விரண்டுக்கும் காரணமென நம்பப்படுகிற மழை மட்டும் பொழியவில்லை. மழை இல்லாமலேயே இவ்விரண்டும் நிகழ்ந்துவிடுகின்றன. இதுவும் இயற்கையின் மாபெரும் புதிர்களில் ஒன்று. சிறுவனின் கண்களுக்கு அப்புதிர் தென்பட்டிருப்பது பெரும்பேறு.

**பிச்சைக்காரன் எதிர்காலத்தைச் சேமிப்பான்**
**பணக்காரன்**
**இறந்தகாலத்தைச் சேமிப்பான்**

ஆசிப் என்னும் மாணவரின் கவிதை இது. ஒரு பொன்மொழியின் சாயலை இக்கவிதை கொண்டிருந்தாலும் அச்சொற்களின் நயம் இக்கவிதையை மீண்டும் மீண்டும் அசைபோட வைக்கிறது.

**குருவி வந்தது**
**கீ கீ எனக் கத்தியது**
**நான் எழுந்தவுடன் பறந்தது**

பாவேந்தன் என்னும் மாணவரின் கவிதை இது. குரல் கொடுத்துக்கொண்டே இருந்த குருவி, அக்குரலைக் கேட்டு ஒரு ஆள் வந்ததும் பறந்து போவது எதற்காக என்பதும் புரிந்துகொள்ள முடியாத புதிர்களில் ஒன்று. அப்படியென்றால் குருவியின் அழைப்புக்கு பொருள் என்ன, எதை நாடி அது குரல் கொடுத்தபடி இருக்கிறது என்கிற கேள்விகளுக்கெல்லாம் விடையே இல்லை. சரியான புள்ளியில் கவிதை மையம் கொண்டிருக்கிறது.

**கவிதை எழுத**
**காகிதம் தேவையில்லை**
**கனவு போதும்**

நவின்குமார் என்னும் மாணவர் எழுதிய கவிதை இது. மிகப்பெரிய விடையை மிக எளிதாக அவனுடைய இளம்மனம் கண்டறிந்துவிட்டது. ஒரு மாபெரும் புதையலைக் கண்டெடுப்பதைப்போல அனைவருக்கும் உரிய ஓர் ஆப்த வாக்கியத்தை அம்மாணவர் கண்டுபிடித்துவிட்டார்.

மாணவர்களை முதலில் கவனிப்பவர்களாக தகவமைத்து, வாசிப்புப்பயிற்சியின் வழியாக கவிதை என்னும் மாய உலகத்தை அறிமுகப்படுத்தி, பிறகு படிப்படியாக அந்த உலகத்தின் மீது ஈர்ப்பை ஏற்படுத்தி, மெல்ல மெல்ல அந்த உலகத்தில் உலா வருகிறவர்களாக மாற்றுவது என்பது மாபெரும் கலை. கவிதை எழுதுவதைவிட கவிதையைக் கற்பிப்பது மிகப்பெரிய கலை. சவால் நிறைந்த அந்த வேலையை மட்டற்ற மகிழ்ச்சியோடு செய்திருக்கிறார் நம் கவிஞர் செந்தில் பாலா. அவர் நம் பாராட்டுக்குரியவர்.

●

**கட்டுரையாளர்: எழுத்தாளர்**


**புத்தகங்கள் அச்சிட**
**அற்புதத் தீர்வு**
**குறைந்த செலவு**
**அதிகபட்ச தரம்**


அதிகபட்ச தரத்தில் மிகக்குறைந்த செலவில் புத்தகங்கள் அச்சிடுவதற்கு ப்ரிண்ட் ஆன் டிமாண்ட் (PRINT ON DEMAND) முறை ஒரு வரப்பிரசாதமாகும். ப்ரிண்ட் ஆன் டிமாண்ட் முறையில் நேர்த்தியான தாள், அச்சு மற்றும் பைண்டிங்குடன் மிகக்குறைந்த விலையில், தரமாக அச்சிட்டுத் தருவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம்.

**REAL IMPACT SOLUTIONS, CHENNAI**

தொடர்பு கொள்ள

**98412 93503**

# சுப்பிரமணிய சிவா தனித்தமிழ் இயக்க தொடக்க முன்னோடியா?



"ஹிஸ் எக்ஸெல்லென்ஸி கவர்னர்" "யூவர் மெஜஸ்டிக் ஒபீடியண்டு ஸெர்வண்டு" என்ற வார்த்தைகளெல்லாம் சுதேசமித்திரனில் பிரசுரிக்கப்படுகின்றன. தமிழ் ஜனங்களுக்கு சுதேசமித்திரன் அறிவைப் பரப்புகின்றதா? அல்லது ஆங்கில பாஷையைப் பரப்புகின்றதா?



டாக்டர் சு.நரேந்திரன்

சுப்பிரமணிய சிவா இந்திய விடுதலை இயக்கப் போராளி; வ.உ.சிதம்பரனாரின் இனிய நண்பர்; 'ஞானபாநு' என்ற இதழின் ஆசிரியர். அவர் சமஸ்கிருத மொழியில் ஓரளவு பயிற்சியும் பெருமளவு பற்றுதலும் உடையவர். அதுபோலவே ஆங்கில மொழியிலும் ஓரளவு பயிற்சி பெற்றிருந்தார். ஆயினும் தம் தாய்மொழியான தமிழுக்கிருந்த இடங்களில் சமஸ்கிருதமும் ஆங்கிலமும் ஆதிக்கம் செலுத்துவதனை அவர் விரும்பாதவரானார். அந்த இரு மொழிகளின் ஆதிக்கங்களிலிருந்தும் தமிழ்மொழிக்கு விடுதலை தேடவும் பாடுபட்டார்.

சுப்பிரமணிய சிவா தனித்தமிழ் ஆர்வம் கொண்டு தன் 'ஞானபாநு' இதழில் பின்வரும் விளம்பரத்தை வெளியிட்டார். "உங்களால் தனித்தமிழில் எழுதமுடியுமா? முடியுமானால் முந்துங்கள். சமஸ்கிருதம் முதலிய அந்நிய பாஷைச் சொற்களில் ஒன்றும் கலவாது தனித்தமிழில் நமது, 'ஞானபாநு'வில் எட்டுப் பக்கத்திற்குக் குறையாது வரும்படியாக தமிழ் பாஷையின் சிறப்பைப் பற்றியாவது திருவள்ளுவ நாயனாரின் சரித்திரத்தையாவது எழுதுவோருக்கு, ரூபா ஐந்து இனாமளிப்பதாகத் தமிழபிமானியொருவர் முன் வந்திருக்கிறார்.

சமஸ்கிருதச் சொல்லாகிய கஜம் திரிந்து தமிழில் கயம் என்றாகியிருப்பது போன்ற திரிபுச் சொற்களும் உபயோகப்படுத்தலாகாது. சுருக்கத்தில், எந்த பாஷையின் சொற்களுக்கும் சம்பந்தமில்லாத தனித்தமிழ்ச் சொற்களே உபயோகிக்கப்பட வேண்டும்.

வியாசங்கள் வருகிற ஆவணி மாதம் 15ஆம் தேதிக்குள் நமது 'ஞானபாநு' காரியஸ்தலத்திற்கு அனுப்பிக் கொடுக்கப்பட வேண்டுமென்று தெரிவிக்கப்படுகிறது. வெகுமதிக்குரித்தாகிய வியாசமானது நமது பத்திரிகையில் பிரசுரிக்கப்படும். இவ்விஷயத்தைப் பற்றி மற்ற விவரங்கள் ஏதேனும் வேண்டுவோர் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதித் தெரிந்து கொள்க. இவ்விளம்பரம் 1915 சூலை மாத ஞானபாநு இதழில் வெளியிடப்பெற்றது.

இதே விளம்பரத்தை 'சுதேசமித்திர'னில் வெளியிடுமாறு சிவா வேண்டுகோள் விடுத்தார். இவ்விளம்பரத்தை வெளியிட சுதேசமித்திரன் உரிமையாளர் கட்டணம் கேட்டு மடல் எழுதினார். சுதேசமித்திரன் மீது சிவா கருத்துப் போர் தொடுத்தார். ஐந்து ரூபா விளம்பரத்தை, சுதேசமித்திரனில் வெளியிடுமாறு சிவா விடுத்த வேண்டுகோளை, சுதேசமித்திரன் உரிமையாளர் குறிப்பிட்டு எழுதிய கடிதம் வருமாறு – Dear SIr, தங்கள் லெட்டருடன் அடக்கம் செய்தனுப்பியுள்ள மாட்டரையெமது பேரில் பிரசுரம் செய்ய தினப் பதிப்புக்கு 5 ரூபாயும் குறைந்த சார்ஜாகும். மேற்படி சார்ஜை அனுப்பிவித்தால் விளம்பரம் உடனே பிரசுரம் செய்யப்படும்.

**இப்படிக்கு,**
**T.S.Viswanathan**

சிவா இந்தக் கடிதத்தை வைத்தே தமது தாக்குதலைத் தொடுத்தார். முதலில் மேற்காணும் கடிதத்தில் இருந்த 'லெட்டர்', 'மாட்டர்', 'பேபர்', சார்ஜ் எனும் ஆங்கிலச் சொற்களைத் தமிழ்ப்படுத்தி அக்கடிதம் பின்வருமாறு அமைதல் வேண்டும் என்பதைக் குறிப்புரையுடன் 'ஞானபாநு'வில் வெளியிட்டார். "ஆங்கிலம் தெரியாத தமிழர் நமது வாசகர்களில் அநேகர் இருப்பாராகையால் அவர்கள் இக்கடிதத்தைத் தெளிவாகப் படித்து அறிந்து கொள்ளும் பொருட்டும், இந்தக் கடிதத்தை ஆங்கிலம் கலவாத தமிழில் எழுதுதல் சுலபமென்று சுதேசமித்திரன் பத்திராதிபர் தெரிந்துகொள்ளும் பொருட்டும் நாம் அக்கடிதத்தை ஆங்கிலம் கலவாத தமிழில் எழுதுகிறோம். அது பின்வருமாறு:

அன்பார்ந்த ஐயா, தங்கள் கடிதத்துடன் அடக்கம் செய்தனுப்பியுள்ள விஷயத்தைப் பொது பத்திரிகையில் பிரசுரம் செய்ய தினப் பதிப்புக்கு மாதம் 1-க்கு 8 ரூபாயும் வாரம் மும்முறைப் பதிப்புக்கு 5 ரூபாயும் குறைந்த விகிதமாகும். மேற்படி விகிதத்தை அனுப்பிவித்தால் விளம்பரம் உடனே பிரசுரம் செய்யப்படும்.

**இப்படிக்கு**
**டி.எஸ்.விஸ்வநாதன் சொந்தக்காரர்**

இதைத் தொடர்ந்து 8-8-1915இல் பின்வரும் மடலை எழுதினார்:

"ஐயா"

தங்களுடைய 6/8/15 கடிதம் வரப்பெற்றோம். அடக்கம் செய்து அனுப்பப்பட்டிருந்த 'இனாம் ரூபாய் ஐந்து' என்ற விஷயம் எமக்கு எவ்வகையினும் லாபம் கொடுக்கக் கூடியதன்று. பிற பாஷைச் சொற்களைக் கலவாமல் தனித்தமிழில் எழுதுவோருக்கு இனாம் கொடுப்பதால் நம்மவரைத் தமிழ்ப் பாஷையிலேயே எழுதும்படி தூண்டலாம் என்பதே எமது நோக்கம். இதைத் தாங்கள் ஊதியத் தரத்தக்கதோர் விளம்பரம் எனக் கருதி, தங்களுடைய பத்திரிகையில் பிரசுரிப்பதற்குக் கூலி கேட்டது எமக்கு ஆச்சர்யமாயிருக்கிறது. 'சுதேசமித்திரன்' சுய பாஷைக்கு மித்திரனாயிருக்கும் என்றே இதுகாறும் நினைத்திருந்தோம். இப்பொழுது தங்களுடைய கடிதத்தின் மூலமாக எமக்கு இவ்விஷயத்தில் ஒரு பெரும் சந்தேகம் ஏற்பட்டுவிட்டது.

தமிழ் பாஷையைத் தனிப்பாஷையென்று தமிழ்ப் பண்டிதர்களில் பலரும் மண்டையுடைத்துக் கொள்கிறார்கள். இப்பொழுதோ, தமிழர்களுக்குள் பெரும்பான்மையாக வழங்கி வரும் மிக்க பத்திரிகைகளும் தமிழ் பாஷையைச் சித்திரவதை செய்கின்றன. இது மிகவும் விசனிக்கத்தக்கது. தங்களுடைய பத்திரிகைக்கு தான் தமிழ்நாட்டில் ஆயிரக்கணக்கான சந்தாதாரர்கள் இருக்கிறார்கள். ஆகையால் தமிழ் பாஷையை ஆதரித்துக் காப்பதற்குத் தாங்களும் தங்களுடைய பத்திரிகைகளுமே முயற்சிக்க வேண்டும். ஆகையால் மேற்படி 'இனாம் ரூபாய் ஐந்து' விளம்பரத்தைத் தங்களுக்கு இஷ்டமிருந்தால் தங்களுடைய பத்திரிகையில் பிரசுரிக்கவும்.

**தங்கள் உண்மையுள்ள,**
**சுப்பிரமணிய சிவம் பத்திராதிபர்**

இம்மடலுக்குப் பிறகும் சுதேசமித்திரன் சிவாவின் விளம்பரத்தை வெளியிடவில்லை. இதே போல், இந்துநேசன் என்ற இதழும் வெளியிட மறுத்தது. இதனைக் கண்டித்துத் தம் 'ஞானபாநு' இதழில் சிவா எழுதியதாவது,

நாம் இவ்விஷயத்தைக் குறித்து விளம்பரங்கள் பிரசுரிக்கும்படி பல பத்திரிகைகளுக்கும் எழுதிக் கேட்டுக்கொண்டோம். நமது வேண்டுகோளுக்கிணங்கி சில பத்திரிகைகள் பிரிசுரித்தன. ஆனால் நமது சென்னையில் நடைபெறும் இரண்டு தினசரிப் பத்திரிகைகளும் இவ்விளம்பரத்தைப் பிரசுரிக்க மறுத்துவிட்டன. 'பன்மை எழுவாய்க்கும் பயனிலை ஒருமையாகப் பிரசுரிக்கப் படித்திருக்கும் பத்திரிகை நமது நாட்டில் அறிவின்மையையே விருத்தி செய்யும் என்பதில் சந்தேகம் என்ன? அந்நியச் சொற்களைக் கேட்பாரில்லாமல் பிரயோகித்துத் தமிழிலக்கியத்தையும் ஒருமைப் பன்மை கூடத் தெரியாது கண்டவாறெல்லாம் எழுதித் தமிழிலக்கணத்தையும் சித்திரவதை செய்கின்றன. 'இந்து நேசன்' எங்ஙனம் நமது விளம்பரத்தைப் பிரசுரம் செய்யும்?

"சுதேசமித்திரனோ ஐரோப்பிய நடையைப் பின்பற்றி உலாவும் பத்திரிகையன்றோ? தனித்தமிழ் எழுதினாலும் சரியே, கலப்புத் தமிழ் எழுதினாலும் சரியே, அதற்கு வேண்டியது பணம்தான் போலும்."

"ஹிஸ் எக்ஸெல்லென்ஸி கவர்னர்" "யூவர் மெஜஸ்டிக் ஒபீடியண்டு ஸெர்வண்டு" என்ற வார்த்தைகளெல்லாம் சுதேசமித்திரனில் பிரசுரிக்கப்படுகின்றன. தமிழ் ஜனங்களுக்குச் சுதேசமித்திரன் அறிவைப் பரப்புகின்றதா? அல்லது ஆங்கில பாஷையைப் பரப்புகின்றதா?

"இந்த இரண்டு பத்திரிகைகளும் அழகிய பெயர்களையுடைத்தாயிருந்தும் அப்பெயர்கட்கொவ்வும் செயல்களைச் செய்யாமை மிகவும் விசனிக்கத்தக்கது. ஸ்வய பாஷையை ஆதரியாத பத்திரிகைகள் ஸ்வய தேசத்தை எங்ஙனம் முன்னேற்றத்திற்குக் கொண்டுவரப் போகின்றனவோ? தெரியவில்லை. ஆனால் நம்மவர்கட்கும் இவ்விரண்டு பத்திரிகையைத் தவிர வேறு தினசரிப் பத்திரிகைகள் இல்லையே! தட்டிச்சொல்ல ஆளில்லா விட்டால் தம்பி சண்டப் பிரசண்டன் தானே!" என்றெழுதினார். சுப்பிரமணிய சிவாவின் விளம்பரமும், மடலும், இந்துநேசன், சுதேசமித்திரன் ஆகியவற்றைக் கண்டித்து எழுதிய குறிப்பும் அவரது தமிழ்ப் பற்றை மட்டுமின்றித் தனித்தமிழ் ஆர்வத்தையும் தெளிவுபடுத்துகின்றன.

சுப்பிரமணிய சிவா தம் தனித்தமிழ் முயற்சியினை ஓர் இயக்கமாகவே கருதியிருந்தார் என்பது மேலும் சில சான்றுகளால் தெளிவாகிறது. இக்கருத்துப் போரில் வ.உ.சிதம்பரனாரும் கலந்துகொண்டு சுதேசமித்திரனின் கலப்புத் தமிழுக்கு எதிராக பாரதி என்ற மாத இதழில் கட்டுரை எழுதினார். இவரைத் தொடர்ந்து பரலி சு.நெல்லையப்பர் நடத்திய 'லோகோபகாரி' இதழும் இந்தக் கருத்துப் போரில் 'ஞானபாநு' வின் சார்பில் பங்கு கொண்டது.

சிவாவும் ஞானபாநுவில் சுதேசமித்திரனுக்குப் பதிலளித்துக்கொண்டு தன் கருத்தை வலியுறுத்திக்கொண்டே இருந்தார். சுதேசமித்திரனுடைய நடையும் தன்மையும் இப்பொழுது நல்வழியில் சீர்திருத்தப்பட வேண்டும். அப்படிச் செய்யாமல் முயலுக்கு மூன்றே கால் என்ற பழமொழிப்படி ஒரு பிடிவாதமாக, சுதேசமித்திரன் தன்னுடைய பிற பாஷா நடையையும் தன்மையையுமே அனுசரித்து வருமானால் அது செய்ய வேண்டிய வேலை செய்து முடித்தாய் விட்டதென்றும் இனிமேல் அதற்கு நமது நாட்டில் வேலை இல்லை என்றும் நாம் விசனத்துடன் வெளியிட வேண்டியிருக்கின்றது."

1915 அக்டோபர் ஞானபாநு இதழில் கட்சிக் கட்டுப்பாட்டை விடவும் கன்னித் தமிழ் மொழியின் வளர்ச்சியே பெரிதாகக் கருதிய அந்நாளைய தேசபக்தர் எல்.எஸ்.சுப்பராய அய்யர் சிவாவின் தனித்தமிழ் முயற்சிக்கு ஆதரவளித்து எழுதிய 'தமிழின் தற்காலநிலை' என்ற கட்டுரையை சிவா வெளியிட்டார். அக்கட்டுரையின் ஒரு பகுதி வருமாறு:

என்னைப் பற்றியே சொல்கிறேன். என் நாட்டுப் பாஷையும் வீட்டுப் பாஷையும் தமிழ்; பெற்றதும் பாலூட்டி வளர்த்ததும் தமிழ்; எல்லாமே தமிழ்; ஆயினும் என்ன? பாஷா பரிமாணத்தைச் சொல்லி அவமானித்துக்கென்ன குறை? சமஸ்கிருதம் தெரியாது, ஆங்கிலமோ சொற்பந்தான் தெரியும்; எனினும் வழங்கும் போது பத்துக்கு சமஸ்கிருதம் 3; இங்கிலீஷ் 2, துலுக்கு 1; மற்றவை 1; எனக்கு அப்படித்தான் வழக்கம்." பிறமொழிக் கலப்புக் குறித்து, "ஆதியிலிருந்தே பூர்வீக ஆசிரியர்களுடைய சகவாசம் வந்தது முதலே தமிழுக்குச் சமஸ்கிருதம் முதல் சத்துருவாயிற்று. அது 'தேவபாஷை', 'தெய்வ பாஷை' என்று பூஜிக்கப்பட்டதால் தமிழர்களால் ஆவலோடு ஏற்றுக் கொள்ளப்பட்டது. பிறகு நவாபு தர்பாரில் இராஜபக்திக்காகவும் பயத்துக்காகவும் இந்துஸ்தானியும் தடையிலாது ஏற்று வழங்கப்பட்டது. தற்காலம் இராஜாங்க பாஷையாகிய ஆங்கிலமோ ஏகச் சக்ராதிபத்யம் பூண்டு மற்ற எல்லா பாஷைகளையும் ஆளுங்கால், அதன் சொந்தக்காரரைக் கப்பம் செலுத்திக் கைகட்டித் தூர நின்று மரியாதை செய்ய ஏவி எங்கும் செல்லுகிறது. இவ்விதம் மீறியுள்ள

அந்நிய சத்துருக்களால் தாக்கப்பட்டும் போதாமல், உட்கலகக்காரர்களாகிய தெலுங்கு, கன்னடம் முதலியவைகளால் பாதிக்கப்பட்டும் குலஸ்திரியான தமிழ்மாது பொறுமையோடு அடங்கி நிற்கிறாள். ஆனால் இந்தப் பொறுமை துராகிருதமாக நுழைந்த சத்துருக்களுக்கு இடமேயின்றி அனுபவ பாத்யத்தையும் கொடுத்து, தான் ஏமாந்து நிற்கவும் இடம் உண்டாக்குகிறது. அந்தோ! காலத்தின் போக்குக்கும் குணத்துக்கும் சன்மானம் என்னே! அந்தோ! கோடிக்கணக்கான பிள்ளைகளைப் பெற்ற தமிழ்மாது தன் பிள்ளைகளால் தானறியப்படாமல் போனதன்றி பிற சொற்களைப் பார்த்துத் தன் பெயராலே அழைக்கும் மதியற்ற குழந்தைகளைப் பெற்ற விபரீதம் என்னே! இக்கொடுமையை மாந்தர் சகிப்பரோ?

1915 அக்டோபர் 1, 6, 15 நாளிட்ட சுதேசமித்திரன் இதழ்களில் பாரதபுத்திரன் என்பவர் ஞானபாநுவிற்கு மறுமொழி எழுதினார். அதற்கு மறுமொழியாக, 'நாமும் சுதேசமித்திரனும்' எனும் கட்டுரை வெளிவந்தது. அதில் "ஆங்கிலச் சொற்கள் கலவாத தமிழ் எழுத வேண்டுமென்றும் எப்பொழுதும் கூறிவருகின்றோமேயொழிய சமஸ்கிருதச் சொற்களையும் கலவாத தனித்தமிழ் எழுதவேண்டுமென்று நாம் ஒருபொழுதும் கூறினதில்லை" என்று சிவா குறித்தார். இக்கருத்தை ஒட்டி சிவாவின் எழுத்துக்களைக் கூர்ந்து பார்க்கும் போது தனித்தமிழ் கொள்கையைக் குறித்து எழுதிய இடங்களிலெல்லாம் ஆங்கிலச் சொற்களைத் தமிழ்நடையில் களைவதே வலியுறுத்தப்பட்டுள்ளது. சமஸ்கிருதச் சொற்களை அல்ல. இதைப் பார்க்கும் போது சிவாவின் தனித்தமிழ்க் கொள்கை நிறைவெய்தியாக அமையவில்லை. ஆனால் மறைமலை அடிகளாரின் தனித்தமிழ் இயக்கம் 1916இல் சமஸ்கிருதச் சொல் ஆதிக்கத்தைத் தமிழ்நாட்டில் முற்றிலுமாக எதிர்த்தது என்பதும் இங்கு நினைவிற்குரியது.

சிவாவின் தனித்தமிழ் முயற்சிகளைக் குறித்து டாக்டர் கா.சிவத்தம்பி தமது 'தனித்தமிழ் இயக்கத்தில் அரசியற் பின்னணி' எனும் நூலில் கூறுவதாவது: தனித்தமிழ் மக்களிடையே பிரச்சாரம் செய்யும் ஓர் இயக்கம் 1916க்கு முன்னரே (1915 ஜூலையிலேயே) நிலவியது என்பதற்கு (இனாம் ஐந்து ரூபா கடிதம்) இக்கடிதம் சான்று தருகிறது. ஞானபாநுவில் நடத்தப் பெற்ற இவ்வியக்கம் இதழுடன் நின்றுவிட்ட ஒரு விஷயமல்ல என்பதும் தெரிய வருகின்றது. சுப்பிரமணிய சிவா அவர்கள் தனித்தமிழில் எழுதுவதனை ஓர் இயக்கமாகவே நடத்தி வந்தாரென்பது தெரிய வருகிறது.

திரு.வி.க. முதலானோர் தமிழ்மொழி பயன்படுத்தப்படுவது பற்றி இயக்கம் நடத்தியதை விமர்சனம் செய்துவிட்டு, மறைமலை அடிகளின் தனித்தமிழ் இயக்கம் 1916இல் தோன்றியது என்றும் சிவாவின் தனித்தமிழ் இயக்கம் 1915இல் தோன்றியது என்றும் சுட்டிக் காட்டுகிறார் சிவத்தம்பி.

மறைமலை அடிகளின் தனித்தமிழ் இயக்கத்தில் சமஸ்கிருதச் சொற்களின் களையெடுப்பு வலியுறுத்தப்பட்டது. இக்கொள்கை சிவாவின் தனித்தமிழ் இயக்கத்தில் கால் கொள்ளவில்லை. சிவாவின் எழுத்தில் சமஸ்கிருதச் சொற்களின் விழுக்காடு மிக அதிகம்.

## போராட்டத்திற்குத் தீர்வு என்ன ?

தனித்தமிழ் நடையில் இந்த இருவேறு நிலைப்பாடுகளைப் பற்றிய தீர்வுக்கான தமிழரசுக் கழகத் தலைவர் ம.பொ.சியின் ஆய்வுரையை டாக்டர்.கா.சிவத்தம்பி மேற்கோளாகக் காட்டியுள்ளார். "பரிதிமாற் கலைஞர், மறைமலையடிகள் போன்ற பெரும் புலவர்கள் பண்டிதர்களானோர் படிப்பதற்காக அவர்கள் ஈடுபட்டிருந்த மொழித்துறை பற்றியே அந்நாளில் நூற்கள் இயற்றினர். சாதாரண பொதுமக்களோடு அவர்கள் எந்த வகையிலும் தொடர்பு கொண்டவர்களாகவிருக்கவில்லை. ஆகவே வடமொழிச் சொல் கலவாத தனித்தமிழில் எழுதுவதைக் கொள்கையாகக் கொண்டிருந்தனர். அதனால் நாட்டுக்கு நஷ்டம் ஏற்படவில்லை. ஆகவே வ.வே.சு.ஐயர், பாரதியார், சுப்பிரமணிய சிவம் ஆகிய தேசியத் தலைவர்கள் நிலை இதற்கு முற்றிலும் வேறுபட்டதாகும். அவர்கள் சாதாரணப் பொது மக்களோடு தொடர்புகொண்டு அவர்களிடையே தேசபக்தியை, ஏகாதிபத்திய எதிர்ப்புணர்ச்சியை பரப்புவதற்காகவே பத்திரிகை நடத்தினார்கள், நூல் எழுதினார்கள் ஆகவே, வழக்கில் வந்துவிட்ட வடமொழிச் சொற்கள் கலவாத தனித்தமிழில் எழுதுவதையோ பேசுவதையோ அவர்கள் விரும்புவதில்லை. அதனால் அவர்களுடைய தனித்தமிழ்க் கொள்கை ஆங்கில ஆதிக்கத்துக்கு மட்டுமே எதிராக இருந்தது. மறைமலை அடிகள், சிவா ஆகியோரின் தனித்தமிழ் நடை கொள்கையைத் தீர்மானித்து அவர்களுடைய அரசியல் நோக்கே என்ற கண்ணோட்டத்தில் டாக்டர் கா.சிவத்தம்பி ஆய்ந்துள்ளார்.

## முடிவுரை

இக்கருத்துப்போர் இயக்க நிலையில் மறைமலையடிகள் தனித்தமிழ் இயக்கம் தொடங்க, முன்னோடியாக அமைந்தது எனலாம்.

●

**கட்டுரையாளர்: எழுத்தாளர்,**
**சென்னை டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழக சிறப்புநிலைப் பேராசிரியர்**

## தமிழ் நாட்டுப்புறக் கலையறிஞர் கலைமாமணி
# டாக்டர் கே.ஏ. குணசேகரன்
## நினைவலைகளும் கனவலைகளும்



முனைவர் சு.மாதவன்




கே.ஏ.ஜி.யின் நாட்டுப்புற இசை மேடை 1990களில் அவர் பாடிய அம்மா பாவாட சட்டை கிழிஞ்சு போச்சுதே, ஆக்காட்டி ஆக்காட்டி, முக்காமொழம் நெல்லுப் பயிரு முப்பது கஜம் தண்ணிக் கெணறு.

ஆடு வயித்துக்கு மேஞ்சிருக்கு பசும்மாடும் வயித்துக்கு மேஞ்சிருக்கு, வந்தனமுன்னா வந்தனம் வந்த சனங்கள்லாம் குந்தணும், மனுசங்கடா.... நாங்க மனுசங்கடா....

என்ற சில பாடல்களைப் பாடி, கைத்தட்டல்களும் பேரும் புகழும் பெறாத தமிழ்நாட்டு, நாட்டுப்புற இசைக் கலைஞர்களே இல்லை எனலாம்.

அந்த அளவிற்கு நாட்டுப்புற இசைக்கலைகளுக்கான முத்திரையாகவும் நாட்டுப்புற இசைக் கலைஞர்களுக்கான வித்தாகவும் விளங்கிய மாபெரும் நாட்டுப்புற இசைக்கலை மேதை கே.ஏ.ஜி. ஆவார்.

இத்தகைய தமிழ்நாடு நாட்டுப்புறக் கலையியல் வரலாற்றை, கே.ஏ.ஜிக்கு முன்பு, கே.ஏ.ஜி.காலம், கே.ஏ.ஜி.க்குப் பின்பு என மூன்று கூறுகளாகப் பிரித்துக் காண்பது பொருத்தமானதாகும்.

கே.ஏ.ஜி.க்கு முன்பு பல்வேறு ஆளுமைகள் குறிப்பிடத்தக்க தொடக்கநிலைப் பங்களிப்புகளை வழங்கியுள்ளனர். கே.ஏ.ஜி.க்குப் பின்பும் குறிப்பிடத்தக்க பல ஆளுமைகள் இத்துறையில் ஏராளமான பங்களிப்புகளை ஆற்றிவருகின்றனர்.

கே.ஏ.ஜி.யின் சமகாலத்தில் அறிஞர்கள் சரஸ்வதி வேணுகோபால், ஆ. சிவசுப்பிரமணியன், தொ. பரமசிவம், ஆறு இராமநாதன், சு.சண்முக சுந்தரம், தே.ஞானசேகரன், கு.முருகேசன் உள்ளிட்ட பல குறிப்பிடத்தக்க ஆளுமைகளைப் பட்டியலிட முடியும். இந்த முப்பெரும் காலத்தில் இசைக்கலை, நிகழ்த்துக்கலை, நாடகக்கலை, ஆய்வுக் கலை எனும் நாற்பெரும் குப்புகள் தனித்தனியேயும் இருகலை, முக்கலை வல்லமைகளோடும் பணிபுரிந்தவர்களும் உண்டு. இதில் நான்கு கலைகளிலும் வல்லவராகத் திகழ்ந்த ஒரேயொரு ஆளுமை கே.ஏ.ஜி. எனில், அது மிகையில்லை. அதிலும் இயக்கத்தத்துவக் கொள்கை சார்போடு இயங்கிய கல்வியாளர் கே.ஏ.ஜி. ஒருவரே என்பது இன்று எண்ணத்தக்க உண்மையாகும். பொதுத்தளத்தில் தன்னை நிலைநிறுத்திக் கொள்ள சமூகக் கொள்கை கொண்ட மாபெரும் கலையியல் ஆளுமை கே.ஏ.ஜி. ஆவார்.

பொதுவுடைமை இயக்கம், திராவிட இயக்கம், தலித் இயக்கம் என எந்த இடத்திலும் கலைப்பணியையும் இணைத்துக்கொண்டே பயணித்தவர். இத்தகைய பொதுத்தன்மை கலந்த தனித்தன்மையோடு இன்றுவரை வேறுயாரும் உருவாகி நிலைகொள்ளவில்லை என்பது தமிழ்நாட்டு, நாட்டுப்புறக் கலையியல் வரலாறு சொல்லும் செய்தியாகும்.

இவ்வாறான நோக்குநிலையில் நாட்டுப் புறப்பாடல் ஆட்டம், இசைக்கருவிகள், மேடையேற்றம், நாடகம், நாடக இயக்கம், நாடகம் நடித்தல், திரைப்பட இசைப்பாட்டுப்பாடி நடித்தல், ஆய்வு நூல்களைப்படைத்தல் என்பவற்றோடு, முதல் பறையிசைக் கருவியை மேடையேற்றுநர் முதன்முதலில் நாட்டுப்புறப்பெண் பாட்டுக் கலைஞர்களை மேடை ஏற்றுநர்

**முதல் நாட்டுப்புற தன்னானே பாடல்களை மேடையேற்றுநர்**

**முதல் நாட்டுப்புற மரபிசை நிகழ்த்துக்கலைகளை மேடை ஏற்றுநர்**

**முதல் தலித் தன்வரலாற்றாசிரியர்**

**முதல் தலித் உரையாசிரியர் (சங்க இலக்கியம்)**

**முதல் தலித்தியல் அரங்கின் தந்தை**

**முதல் தலித் நாடகத்தின் தந்தை**

**தமிழக நாட்டுப்புற இசையை உலகரங்கில் கொண்டு என்ற முதல் கலைஞர்.**

**முதன்முதலில் நாட்டுப்புற ஆட்ட அடவுகளை ஆய்வு செய்தவர்.**

**தமிழகத்தில் முதன்முதலாக நாட்டுப்புற ஆட்டக் கலைப் பண்பாட்டை, ஆய்வை மேற்கொண்ட ஆய்வாளர். (இராமநாதபுர மாவட்டம்)**

என்றவாறு பல்வேறு முதல் முன்னெடுப்புகளைச் செய்த மாபெரும் ஆளுமை கே.ஏ.ஜி. என்பதை யாவரும் அறிவர்.

> “சடங்குகளில், திருவிழாக்களில் நடந்த ஆட்டங்களை அதன் தன்மை மாறாமல் ஆனால் எல்லோரும் மதிக்கும் மாண்புறு நிகழ்த்துக் கலைகளாக உலகில் பரப்பியவர்.”

சாவுக்கு அடிக்கப்பட்டு வந்த பறையிசைக் கலையை உரிய ஆட்ட அடவுச் சீரமைப்போடு முதன்முதலில் மேடையேற்றிய வரலாற்றுப் பெருமை கே.ஏ.ஜி.யைச் சாரும்.

அதேபோல, கரகாட்டக் கலைஞர்களின் உடை சீரமைப்பை உருவாக்கி மேடைக் கலையாக்கினார் கே.ஏ.ஜி.

பொதுவுடைமை இயக்கங்கள், தலித் இயக்கங்கள், பொது மக்கள் அமைத்த மேடைகள், தமிழ்ச் சங்கங்கள் அமைத்த மேடைகள், உலக நாடுகளில் மேடைகள், உலகச் செம்மொழி மாநாடு, சென்னை சங்கமம், அரசின் விழிப்புணர்வு இயக்க மேடைகள் என எல்லா மேடைகளுக்கும் தன் பாடல்களால் பொலிவும் வலிவும் விழிப்புணர்வும் புரட்சியுணர்வும் ஊட்டியவர் கே.ஏ.ஜி.

இத்தனை மேடைகளிலும் கே.ஏ.ஜி.யால் வளர்க்கப்பட்ட இசைக்கலையும் நிகழ்த்துக்கலைகளும், இசைக் கலைஞர்களும் பரிணமித்த மேடை என்றால் சென்னை சங்கம மேடையாகும்.

சென்னை சங்கமம் மேடைகளுக்கு நூற்றுக்கணக்கான கலைஞர்களை உருவாக்கித் தந்த வரலாற்றுச் சிறப்பு கே.ஏ.ஜிக்கு உண்டு.

கலைஞர்களை நாட்டுப்புறவியல், சேரிப்புறவியல், மானிடவியல், நாட்டுப்புறக் கலையியல், நாட்டுப்புற இசையியல், நாடகவியல், சமூக நாடகவியல், தலித் அரங்கியல், அரங்கக் கலையியல், நாடகப் பனுவல் ஆக்கம், நாடக மேடை ஆக்கம், நாடக இயக்கம், நாடக இசை ஆக்கம், மேடை இசைப்பாடல் ஆக்கம், தன் வரலாறு, கவிதை, சிறுகதை, சங்க இலக்கிய உரையாக்கம் எனத் தமிழின் பன்முக ஆளுமையாக

மிளிர்ந்து இத்துறைகளின் பொருண்மைகளில் 34 நூல்களைத் தமிழ் ஆய்வுலகுக்கும், தமிழ்ச் சமூகத்திற்குமாகப் படைத்தளித்த பேராளுமைப் பேராசிரியர் கே.ஏ.ஜி.

தன் கலையியல் ஆளுமைகளால் தமிழக கலைமாமணி விருது, புதுச்சேரி கலைமாமணி விருது, தமிழ்க் கலைச்செம்மல், மக்கள் கலைக் காவலர், தமிழ் இசைக் குரிசில், நாட்டுப்புற அரங்கக்கலை ஆளுமை விருது (அமெரிக்கா), சிறந்த நூலாசிரியர் விருது எனப் பல்வேறு விருதுகளோடு, தன்னானே பாடல்கள், மண்ணில் பாடல்கள், மனுசங்கடா பாடல்கள் இசைத் தட்டு, திரைப்பட நடிப்பாளுமை பங்கெடுப்பு என கே.ஏ.ஜி.யின் வாழ்வியல் பங்களிப்பு மகத்தானதாகும்.

கே.ஏ.ஜியின் 'பலியாடுகள்' என்னும் நாடகமானது நூற்றுக்கணக்கான மேடையேற்றம் கண்டது என்பது சமகால வரலாறு. இவரின் இசைக்குரல், தமிழகம், அயல்நாடுகள் என ஆயிரக்கணக்கான மேடைகளில் ஒலித்தது. இன்றும் அவரின் கலை நினைவலைகளைத் திசையெட்டும் சுமந்துகொண்டுள்ளன.

நூற்றுக்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகள், நூற்றி ஐம்பதிற்கும் மேற்பட்ட நூல் அணிந்துரைகள், பன்னாட்டுச் சொற்பொழிவுகள், சிந்தனைகள் ஆய்வுலகில் எண்ணிப்பார்க்கப்படுகிறது என அவரது ஆய்வு; 2010இல் நடந்த உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டுப் பாடலான கலைஞரின் "செம்மொழியான தமிழ் மொழியாம்'' என்ற பாடலில் 'அதுவே' என்ற தேற்றேகாரச் சொல்லை ஏற்றேகாரச் சொல்லாக மாற்றி அத்தனைக் கலைஞர்களின் கூட்டு இசை மலர்வில் அந்தப் பாடலின் உயிர்ப்புக்கே உயிர்ப்பு தந்தவர் கே.ஏ.ஜி. எனலாம்.

இவ்வாறு பள்ளிக்கூடத்தில் பாட்டு மாணவனாக நின்று தமிழ் வணக்கப் பாடல் பாடிய கே.ஏ.ஜி. கல்லூரிப் பருவம் தொடங்கிய போது இசைக்கச்சேரி குழுக்களில் நாட்டுப்புறப் பாடல் பாடத் துவங்கியவர். அவரது கணீரெனும் மண்வாசனை மாறாத இசைக்குரலைப் பொதுவுடைமை இயக்கத்தினர் வரவேற்றனர்.

இயக்க மேடைகளில் நாட்டுப்புறப் பாடல்கள் நள்ளிரவுகளிலும் முழங்கி ஒலித்தன. பொதுவுடைமை இயக்கத்தில் மலர்ந்து சமூகத்தின் பொதுத்தளத்தில் வளர்ந்து, தலித் இயக்கத்தில் மிளிர்ந்து, திராவிட இயக்க மேடைகளில் ஒளிர்ந்தவர் என்பது அவருக்கே உரிய பன்மைத்துவத் தனித்துவப் பண்பாகும்.

வயலோரங்களில் தேங்கிக் கிடந்த நாட்டுப்புற இசையையும், இசைக் கலைஞர்களையும் தமிழ்நாடெங்கும் மதிப்போடு உலவச் செய்த மேடைக் கலையறிஞர். ஒதுக்கப்பட்ட வயலோர நாட்டுப்புற இசைக்கருவிகளை மரபுத்தன்மை மாறாமல் மேடைகளில் ஒலிக்கச் செய்தவர். அவ்வாறே தன்னானே இசைக் கலைஞர்களை மேடைகளில் உயர்த்தி மதிப்புறு கலைஞர்களாக்கியவர். சடங்குகளில், திருவிழாக்களில் நடந்த ஆட்டங்களை அதன் தன்மை மாறாமல் ஆனால், எல்லோரும் மதிக்கும் மாண்புறு நிகழ்த்துக் கலைகளாக உலகில் பரப்பியவர். தன்னானே கலைக்குழுவை உருவாக்கியவர்.

உலக நாடுகள் எங்கும் மரபுக்கலைகளைக் கொண்டு சேர்த்தவர் கே.ஏ.ஜி. இன்று தமிழினத்தின் மரபுக் கலைப் பண்பாட்டைப் பரப்பிய பணி இவருடையது.

இத்தகைய தமிழ்க் கலை ஆளுமையான 'கலைமாமணி டாக்டர் கே.ஏ.குணசேகரன்' அவர்களின் வரலாற்றுப் பங்களிப்பை உலகறியச் செய்யும் வகையிலும் அவருக்கு முந்தைய, பிந்தைய, இன்றைய கலைஞர்களால் மேடையேற்றப்பட்ட கலைக் கருவிகளை ஆவணப்படுத்தி காட்சிப்படுத்தும் விதமாகவும், கீழடி அருங்காட்சியகம்போல, பொருநை அருங்காட்சியகம்போல, தமிழக நாட்டுப்புறக் கலையறிஞர் கலைமாமணி டாக்டர் கே.ஏ. குணசேரகன் நினைவு மணிமண்டபம், 'நாட்டுபுறக் கலை அருங்காட்சியகம்' ஒன்றை அவர் பிறந்த மாவட்டமான சிவகங்கை மண்ணில் அமைத்திட வேண்டுமென தமிழ்நாட்டுக் கலை அறிஞர்கள், கலைஞர்கள், ஆய்வறிஞர்கள், எழுத்தாளர்கள், கவிஞர்கள், நாடகக் கலைஞர்கள் அனைவர் சார்பிலும் தமிழக அரசிடம் வேண்டிக் கோருகிறோம்.

அத்தோடு, கே.ஏ.ஜி.யின் தங்கை முனைவர் கே.ஏ.ஜோதிராணியின் முன்னெடுப்பில், உருவாக்கப்பட்டுள்ள, 'கே.ஏ.குணசேகரன் நினைவுக் கலை அறக்கட்டளை' யின் வாயிலாக அவரது நினைவாய் கலைஞர்களுக்குப் பயிற்சி அளிக்கவும் விருதுகள் வழங்கிப் பாராட்டவும் தமிழ்நாடு அரசு உதவிடவும் வேண்டுகிறோம்.

மேலும், கே.ஏ.ஜி., உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் இயக்குநராய் உயரக் காரணமான 'திராவிட வழிகாட்டி அரசு' அவரது நூல்கள் அனைத்தையும் நாட்டுடைமையாக்கி அவரது கலைச்செயல் சிந்தனைகள் நடைமுறைக்கு வந்து எந்நாளும் நின்றுநிலவத் துணைபுரிய வேண்டும் என்பது நாட்டுப்புறக் கலைஞர்களின் கோரிக்கை மட்டுமல்ல தமிழறிஞர்களின் தமிழார்வலர்களின் விருப்பமும் ஆகும்.

●


**கட்டுரையாளர்: தமிழ்ப் பேராசிரியர், துறைத் தலைவர், இராஜேஸ்வரி வேதாசலம் அரசினர் கலைக் கல்லூரி, செங்கல்பட்டு**

கட்டுரை

# என்றும் நமக்குத் தேவைப்படும் நூல்

ஒரு நாள் இரவு மணி பத்து. அலைபேசியில் அழைத்தார் ஈரோடு மருத்துவர் ஜீவானந்தம். அந்த நேரம் அவருக்கு உரையாடலுக்கானது. எனவே உரையாடலுக்கு அழைக்கிறார் என எண்ணி அலைபேசியை எடுத்தேன். நாளை காலை பத்து மணிக்கு உங்களைச் சந்திக்க உங்கள் இல்லம் வருகிறேன் என்றார். மறுநாள் காலை சரியாக பத்து மணிக்கு ஈரோட்டிலிருந்து புறப்பட்டு காந்திகிராமம் வந்து என்னைச் சந்தித்தார். வந்தவுடன் தான் ஒரு நூலை மொழி பெயர்த்திருக்கிறேன், அதை நீங்கள் படித்து சரியாக இருக்கிறதா என கருத்துக்கூற வேண்டும். அத்துடன் ஒரு அறிமுக உரையும் எழுதித்தர வேண்டும் என்று வேண்டினார். மிகவும் ஆர்வத்துடன் அதைப்பிரித்துப் பார்த்தேன். 1776இல் அமெரிக்காவில் வெளியான தாமஸ் பெயின் எழுதிய 'பொது அறிவு' என்ற அமெரிக்க விடுதலைக்கான எழுச்சி நூல். இந்த பழைய நூலை நீங்கள் எதற்கு தற்போது மொழி பெயர்த்திருக்கின்றீர்கள் என்றேன். பதில் கூறவில்லை, சிரித்தார். உடனே இந்த நூலை அச்சிட வேண்டும், எனவே எவ்வளவு சீக்கிரம் படித்துவிட்டு அறிமுக உரை எழுதித் தரமுடியுமோ செய்து தாருங்கள் என்று கூறிவிட்டு புறப்பட்டுச் சென்றுவிட்டார்.






க. பழனித்துரை

அவர் சென்றபின் அந்த நூலின் மொழிபெயர்ப்பைப் படிக்க ஆரம்பித்தேன். அப்போது அந்தப் புத்தகத்தை நான் முதுகலை படித்தபோது தேர்வுக்காகப் படித்த ஞாபகம் வந்தது. இவற்றைக் கடந்து அதன் பொருள் புரிந்து அப்போது படிக்கவில்லை. மதிப்பெண் பெறவேண்டும் என்று படித்தது. தற்போது இந்தப் புத்தகம் ஏன் என்ற பின்னணியில் இந்த நூலைப் படிக்க ஆரம்பித்தேன்.

அமெரிக்க சுதந்திரப்போரை துவக்க, அதை நியாயப்படுத்த, அமெரிக்க சுதந்திரப் போருக்கு எதிரான மனநிலையில் இருந்த சமூகக் குழுக்களை சுதந்திரப் போராட்டத்தில் இணைக்க சரியான விளக்கங்களைக் கொடுக்க ஒரு சிந்தனையாளர், எழுத்தாளர் தேவை என்ற அடிப்படையில் தலைசிறந்த சிந்தனையாளராகிய தாமஸ் பெயினை அமெரிக்காவுக்கு இங்கிலாந்திலிருந்து அழைத்தார் பெஞ்சமின் பிராங்க்ளின்.

இவரின் அழைப்பை ஏற்று தாமஸ் பெயின் அமெரிக்காவுக்கு வந்து இறங்கினார். வந்தவுடன் அமெரிக்கா ஏன் சுதந்திரம் அடைய வேண்டும் என்பதற்காக ஒரு சிறு நூலைத் தயார் செய்தார். குறிப்பாக அமெரிக்காவில் குவாக்கர்ஸ் என்ற சமூகக் குழுதான் இங்கிலாந்து அரசின் புனிதத் தன்மை கெட்டுவிடும் என்று அமெரிக்க சுதந்திரப் போரில் ஈடுபட மறுத்தனர். அவர்களை இந்த சுதந்திரப் போரில் கலந்துகொள்ள வைப்பதுதான் இவருடைய அடிப்படை நோக்கமாக இருந்தது. தாமஸ் பெயின் எதையும் பெரிதாக எழுதமாட்டார். ஆனால் அவர் சிறிய நூலாக எழுதினாலும் (இவருடைய எழுத்துக்களை அனைத்தையுமே கட்டுரைகள் என்றுதான் கூறுவார்கள்) எளிமையான எழுத்துக்களுக்குச் சொந்தக்காரர். ஈட்டிபோல் மக்கள் மனதில் பதியும் ஆற்றல் கொண்டவை இவருடைய எழுத்துக்கள்.

தன் எழுத்து வலிமையால் அமெரிக்க மக்களைக் கொந்தளிக்கச் செய்தார். இங்கிலாந்துக்கு எதிராக அமெரிக்க மக்கள் ஒன்றிணைந்தனர், போராடினர், அமெரிக்காவுக்கும் சுதந்திரம் கிடைத்துவிட்டது. இந்தப் புத்தகம் அமெரிக்க நாட்டில் உள்ள 13 காலனிகளின் மக்களின் சுதந்திர எழுச்சியைத் தூண்டுவதற்காக எழுதப்பட்டது. தற்போது இதை ஏன் மொழிபெயர்க்க வேண்டும்? இந்தக் கேள்வியுடன் அந்த மொழிபெயர்த்துத் தந்த அச்சுப்பிரதியை உள்வாங்க ஆரம்பித்தேன். அப்பொழுதுதான் புரிந்தது 249 ஆண்டுகளுக்கு முன் மன்னராட்சி முறையில் காலனியாதிக்க அரசாங்கத்தில் இருக்கின்ற மக்கள் விரோதப் போக்குகளையும், மக்களைச் சுரண்டி சுகபோக வாழ்க்கையை அனுபவிக்கும் பாங்கை அதில் விவரித்து அதை மாற்ற வேண்டியதன் அவசியத்தை அந்த சிறு நூலில் வலியுறுத்துகிறார். அந்த ஆட்சி முறையில் மன்னரில் தொடங்கி, நிர்வாகத்தில் இருக்கக்கூடிய அனைவரும் எப்படி மக்களின் உழைப்பைச் சுரண்டுவதும், மக்களை வாட்டி வதைத்து, மக்களின் உழைப்பில் சுகபோகம் அனுபவிக்கின்றனர் என்பதை விவரிக்கும்போது, நம் மக்களாட்சி மக்களுக்கானது என்று கூறிக்கொண்டு நம் அரசியல்வாதிகள் எப்படி சுகபோக வாழ்க்கையை அனுபவிக்கின்றார்கள் என்பதை சுட்டுவதுபோல் இருக்கும். ஆட்சியில் இருக்கும் கட்சிகள், அரசுத் துறையில் பணியாற்றும் அலுவலர்கள் எப்படி மக்கள் பெயரில் ஒரு மோசடியைச் செய்கின்றனர் என்பதை விளக்குவது போன்றே இருக்கும்.

சுதந்திரத்தின் வலிமை என்பதை மிக எளிமையாக விளக்கும் நூல். அரசு நடத்தும் அட்டூழியங்களை தோலுரித்துக் காட்டும் நூல்தான் இது. மன்னராட்சியில் மன்னன் அதிகாரத்தை தன் கையில் வைத்துக் கொண்டு மக்களின் வாழ்நிலை பற்றி எந்தவிதக் கவலையும் அற்று தன் சுகபோக வாழ்க்கைக்கு செயல்படுவதை விளக்கும்போது, சம காலத்தில் நம் ஆட்சியாளர்கள் வாழும் வாழ்வை படம்பிடித்துக் காட்டுவதைப்போல் இருக்கும்.

அரசு நல்லதே செய்யும் என்று எண்ணும் மக்களுக்கு அவர்களுக்கு எதிராகவே செயல்பட்டுக் கொண்டிருக்கும் அரசாங்கத்தை மக்களுக்குப் புரிய வைக்கின்றார் தாமஸ் பெயின்.

நாம் மக்களாட்சியில் வாழ்வதாகவும், உலகிலேயே பெரிய மக்களாட்சியில் வாழ்வதாகவும் பெருமை பேசி மக்களை ஏமாற்றி வருகிறோம் என்பதை இந்தப் புத்தகத்தைப் படித்தால் நாம் புரிந்து கொள்ளலாம். நாம் இன்று பயணிப்பது மக்களாட்சிக்கு முற்றிலும் மாறுபட்ட திசையில் என்பது பலருக்குப் புரிவதில்லை. சுதந்திரம் என்பது, விடுதலை என்பது, சமத்துவம் என்பது, சுதந்திர நாட்டில் அரசு என்பது யாருக்கானது என்ற புரிதலை சாதாரண மக்கள் பெற இந்தப் புத்தகம் மிகவும் உதவியாக இருக்கும்.

அமெரிக்க காலனிகளில் வாழ்ந்த மக்கள் பலர், இங்கிலாந்தில் அரசர் இருக்கிறார், பாராளுமன்றம்

இருக்கிறது, இவைகள் அனைத்தும் நம்மைப் பாதுகாக்கும். அது இல்லாவிட்டால் நம்மை யார் பாதுகாப்பது என்று சிந்திக்கும் ஒரு கூட்டம், மற்றொன்று, அரசர் இறைவனால் அனுப்பப்பட்டவர், அவர் தலைமை தாங்கி மக்களைக் காக்கும் அரசை எதிர்ப்பது பாவம் என்று எண்ணக்கூடிய கூட்டம். இந்த இரண்டும் உங்களைக் காப்பதாக எண்ணுகின்றீர்கள், உண்மை அதுவல்ல, இவர்களெல்லாம் மக்களைச் சுரண்டி அவர்கள் சுகபோக வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை அனைவரும் எளிதாக அனைவரும் புரிந்து கொள்ளும் வகையில் விளக்கியுள்ளார். அவர் கேட்கிறார், இங்கிலாந்து என்பது தன் காலனிகளிலிருந்து சுரண்டி இங்கிலாந்து நாட்டை வளப்படுத்திக் கொண்டிருக்கிறது. காலனிகளில் வாழும் மக்களைப் பாதுகாப்பதாக அல்லது காலனிகளில் வாழும் மக்களும் நம் மக்கள் என்றால் இப்படிச் சுரண்டி வளம் கொழித்து சுகபோக வாழ்க்கையில் ஈடுபடுவார்களா என்று.

இந்த விளக்கத்தை நம் நாட்டில் நம் பாராளுமன்றம், சட்டமன்றங்கள் இருக்கின்றன, 77 ஆண்டு காலமாக நமக்காக செயல்படுவதாகத்தான் கூறுகிறார்கள். அப்படித்தான் சுதந்திரப் போராட்டத்தின்போது கூறினார்கள். சுதந்திரம் அனைவருக்குமானது, சமத்துவத்திற்கானது, அனைவர் மேம்பாட்டுக்கானது என்று. சுதந்திரம் அடைந்து நமக்கு ஒரு அரசமைப்புச் சாசனத்தை உருவாக்கி, அதுதான் வழிகாட்டி நமக்கு என்று கூறி மக்களை நம்ப வைத்தனர். அப்படித்தான் செயல்பட ஆரம்பித்தது அரசாங்கம். மக்களும் அதை நம்பினார்கள். 77 ஆண்டுகால பாராளுமன்றத்தால் விளைந்த விளைவுகளைக் கணக்கிட்டுப் பார்த்தால், ஒன்று தெளிவாகிவிடும். யார் பயன் அடைந்தவர்கள், யார் ஏமாந்தவர்கள் அல்லது புறக்கணிக்கப்பட்டவர்கள் என்று. இன்று அரசு 82 கோடி மக்களுக்கு விலை இல்லா உணவுப் பொருள் பொது வினியோகத் திட்டத்தில் அடுத்த 4 ஆண்டுகளுக்கு தர உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இது புலப்படுத்தும் செய்தி என்ன? 82 கோடி மக்களின் உணவுப் பாதுகாப்பை அவர்களால் உறுதி செய்துகொள்ள முடியவில்லை. அவர்களின் வாழ்வு என்பது அந்த நிலையில் இருக்கிறது என்பதைத்தான் படம்பிடித்துக் காண்பித்துள்ளது.

அதே வேளையில் மீதமுள்ள 60 கோடி மக்களின் வாழ்க்கை மேம்பட்டுள்ளது என்பதை எவரும் மறுக்க இயலாது. ஆக பாராளுமன்றமும் சட்டமன்றங்களும் நமக்காக இயங்குவதாக ஏழைகள் நம்பினர். நம் பாராளுமன்ற உறுப்பினர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும் சராசரி மனிதர்கள் அல்ல. அனைவரும் கோடீஸ்வரர்கள், தொழிலதிபர்கள், பெரும் பணக்காரர்கள். ஏதோ தமிழகத்தில் இரண்டு இடதுசாரி சட்டமன்ற உறுப்பினர்கள் குடிசைகளில் வாழ்கின்றனர். இது விதிவிலக்கு. இதனால் சட்ட மன்றத்திற்கும், பாராளுமன்றத்திற்கும் போக முடியாததற்குக் காரணம், அதற்கு முக்கியத் தகுதி பணம் வேண்டும் என்ற நிலைக்கு வந்துவிட்டது. சட்டமன்ற உறுப்பினர்கள் கோடீஸ்வரர்கள், எவராது அரசு தரும் சலுகைகள் வேண்டாம் என்று கூறினார்களா? ஒரு சில சட்டமன்றங்களில் நான்கு முறை இருந்த உறுப்பினர்கள் 4 ஓய்வூதியம் பெறுகின்ற வரலாறு இந்தியாவில் இருக்கிறதே. சட்டமன்ற பாராளுமன்ற உறுப்பினர்கள் வாங்கும் பென்சனுக்கு வருமானவரி கிடையாது. ஆனால் அரசு ஊழியர்கள் வாங்கும் ஓய்வூதியத்திற்கு வருமான வரி செலுத்த வேண்டும். சட்டமன்ற பாராளுமன்ற உறுப்பினர்களின் சம்பளத்தை, சலுகைகளை அவர்களே நிர்ணயம் செய்து கொள்வார்கள். எந்தக் கிரிமினல் குற்றம் செய்தவரும் பாராளுமன்றம் வரை சென்று விடலாம். ஆனால் ஒரு அலுவலகத்தில் எழுத்தர் பணிக்குக்கூட செல்ல இயலாது. அந்த அளவுக்கு நம் அரசியல் ஒரு குறிப்பிட்ட சமூகத்தை அல்லது வர்க்கத்தை பாதுகாக்கத்தான் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை இன்றைய சூழலில் நாம் புரிந்துகொள்ள முடியும்.

அரசாங்கத்தை மக்கள் எதற்காக வைத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது என்றால் நம்மை வெளிநாட்டினர் படையெடுத்து நம்மை அடிமைப்படுத்தி விடாமல் பாதுகாப்பதற்கே. ஆனால் அது செய்யும் கேடுகளுக்கு அளவே இல்லை. அது ஒரு கேடு என்றே கூற வேண்டும் என்கிறார் தாமஸ் பெயின்.

ஒரு கிராமப் பஞ்சாயத்து ஒரு ஆலமரத்தடியில் உள்ளூரில் உள்ள பண்பட்ட மனிதர்களின் ஒருங்கிணைப்பில் அந்த ஊர் மக்களின் பாதுகாப்புக்கும் மேம்பாட்டுக்கும் மிகப் பெரிய பங்களிப்பைச் செய்து மக்களை உயர்த்திட முடியும். அதுதான் மேலானது. அதை எந்த மன்னரும் மக்களுக்குச் செய்ய முடியாது, அதை எந்தப் பாராளுமன்றமும் சட்டமன்றமும் செய்ய முடியாது.

இதற்காக அரசாங்கத்தை நிராகரிக்க முடியாது. அதற்கு என்ன செய்ய வேண்டும். மக்களை விடுதலை அடையச் செய்ய வேண்டும். என்ன விடுதலை, சிந்தனை விடுதலை வேண்டும். அப்பொழுதுதான் அறிவார்ந்த செயல்பாடுகளுக்கு மக்கள் வருவார்கள். அப்படி வருகின்றபோது மக்கள் தாங்கள் தேர்ந்தெடுத்த உறுப்பினர்கள் தண்டல்காரர்களாக மாறிவிடாமல் தடுக்க முடியும். இல்லையென்றால் அவர்கள் தண்டல்காரராக மாறிவிடுவார்கள். எந்த அரசாங்கமும் எளிமையாக மக்களுக்குப் புரியும் அளவில் கட்டமைக்கப்படல் வேண்டும். மக்களின் உணர்வுகளைப் புரிந்து செயல்படும் வகையில் அரசாங்கம் செயல்பட வேண்டும். அதற்கு மக்கள் பிரதிநிதிகள் பண்புள்ளவர்களாக, பண்பட்டவர்களாக, நியாயமானவர்களாக மக்கள்மேல் கரிசனம் கொண்டவர்களாக இருக்க வேண்டும்.

ஒரு அரசமைப்புச் சாசனம் என்பது மக்களுக்கு எளிதாகப் புரிய வேண்டும். இல்லையேல் அது மக்களிடமிருந்து அந்நியப்பட்டுவிடும். இங்கிலாந்து அரசமைப்புச் சாசனம் எப்படி சிக்கலானது என்பதையும் விளக்குகிறார். அதை சரி செய்வது மிகவும் சிக்கலானது என்கிறார். இந்தப் பின்னணியில் நம் அரசமைப்புச் சாசனத்தை சீர்தூக்கிப் பார்த்தால், அது எவ்வளவு சிக்கலானது என்பதை நாம் உணரமுடியும். அதில் உள்ள குறைகளை நிவர்த்தி செய்யத்தான் குழு ஒன்று போடப்பட்டது. அதன் பரிசீலனை அதன் பரிந்துரை எந்த அளவுக்கு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது என்பதை வைத்தே நம் அரசியல் எதை நோக்கிச் செல்கிறது என்பதை உணர முடியும்.

அரசாங்கம் மக்கள் அறியாமையில் இருந்தால், கேடுகளைத்தான் விளைவிக்கும். அவைகளை நாட்டு நலன் கருதி, தேசத்தின் மீது நம்பிக்கை கொண்டு மக்களை அறிவுடையவர்களாக தயார் செய்துவிட்டால் மக்கள் அரசுக்கு புத்தி புகட்டுவார்கள். அரசாங்கத்தை தங்களுக்கு கடமைப்பட்டவர்களாக மாற்றிவிடுவார்கள். அதற்கு அறிவார்ந்த சமூகமாக மக்களைத் தயார் செய்ய வேண்டும். மக்களின் தொடர் கண்காணிப்புத்தான் அரசை மக்களுக்குப் பணிந்து செயல்பட வைக்கும். மக்கள் அவ்வாறு புரிதல் அற்று இருக்கும்போது எந்த அரசாங்கத்திலும் உள்ளவர்கள் அதிகாரத்தைப் பயன்படுத்தி மக்களை அச்சுறுத்தி சுகபோக வாழ்க்கை வாழ ஆரம்பித்து விடுவார்கள். அதைத்தான் நாம் நம் மக்களாட்சியில் பார்க்கிறோம்.

ஒரு அரசாங்கம் ஒரு கடைநிலை ஊழியருக்கு சம்பளம் எவ்வளவு என்று நிர்ணயம் செய்யும், ஒரு ஆசிரியருக்கு எவ்வளவு என்று நிர்ணயம் செய்யும். ஆனால் ஒரு கம்பெனியின் தலைமைப் பொறுப்பில் இருப்பவர் ஆண்டுக்கு 45 கோடி ரூபாய் சம்பளம் பெறுகிறார். அந்த சம்பளத்தை அரசு நிர்ணயிக்காதா? அவர் எங்கேயிருந்து யார் உத்தரவில் சம்பளம் பெறுகிறார். அவரே அவர் கம்பெனியில் சம்பளம் நிர்ணயித்து எடுத்துக் கொள்கிறார். அவர் மூளையின் சக்தி கொண்டு லாபத்தை அள்ளிக் குவிக்கிறார். அதனால் எடுத்துக் கொள்கிறார். அதே நேரத்தில் அந்த லாபத்தில் அந்தக் கம்பெனியில் உழைத்த ஊழியர்களின் உழைப்புக்கு என்ன விலை, அதை அரசு கேட்காதா? இவைகளுக்கெல்லாம் அரசாங்கத்தில் பதில் இல்லை, இதிலிருந்து அரசு யாருக்காக செயல்படுகிறது என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

பொதுவாக அரசாங்கம் அளவற்ற அதிகாரங்களை வைத்துக் கொள்ளக்கூடாது. அப்படி இருந்தால் அது மக்களுக்குப் பக்கத்தில் இருக்கும் உள்ளாட்சிக்குத்தான் இருக்க வேண்டும். அப்படி இருந்தால் மக்கள் அதிகாரம் பெறுவார்கள். மக்களுக்கு வெகுதூரத்தில் உள்ள அரசுக்கு அதிக அதிகாரங்கள் இருந்தால் அது மக்களுக்கானதாக, மக்கள்நேய அரசாக இருக்காது. மாறாக மக்களைச் சுரண்டும் அரசாகவே திகழும் என்று விளக்குகிறார். அது இன்றைய மக்களாட்சிக்கு எவ்வளவு பொருத்தமாக இருக்கிறது என்பதை நாம் புரிந்துகொள்ள முடியும்.

இந்தச் சிறிய நூல் விடுதலைக்கான நூல், சுயமரியாதைக்கான நூல், சமத்துவத்துக்கான நூல், மக்கள் செயல்பாட்டுக்கான நூல். இந்த நூல் எக்காலத்திற்கும் பொருந்தும் நூல். இன்றைய குழப்ப அரசியலில், எதிர்ப்பு அரசியலில், சந்தை அரசியலில், தேர்தல் அரசியலில் சிக்குண்டு அறத்தை இழந்து சிதிலமடையும் அரசியலை, மக்கள் அரசியலாக மாற்றிடத் தேவையான புரிதல் ஏற்படுத்தும் நூல். அனைவரும் படிக்க வேண்டிய நூல். இந்தச் சிறிய நூல் இன்று கடைகளில் இல்லை. அதனைக் கொண்டுவர ஒரு சிறு முயற்சி நடைபெறுகிறது. விரைவில் பொதுமக்கள் கைகளுக்கு வந்து சேரும்.

●

**கட்டுரையாளர்:**

**பேராசிரியர், காந்திகிராமிய பல்கலைக்கழக ராஜீவ் காந்தி பஞ்சாயத்து ராஜ் ஆராய்ச்சி இருக்கைத் தலைவர் (ஓய்வு)**

# நாட்டார் மரபைத் தழுவிய படைப்பே சிலப்பதிகாரம்

முனைவர் சே. கரும்பாயிரம்

இலக்கியப் படைப்பில் ‘வாய்மொழி’, ‘எழுத்து’ என இருவகையான மரபுகள் உண்டு. வாய்மொழி மரபு என்பது ஏட்டில் எழுதப்படாமல் வெவ்வேறு சமூகச் சூழல்களால் தூண்டப்பட்டு மக்கள், தங்கள் கூட்டுப் பங்கேற்பின் வாயிலாக வெளிப்படுத்துவது. வழக்கம் தழுவிய நிலையில், அறிவும் உணர்ச்சியும் பரவசமும் கொண்டவர்களாகப் பேசுதல், பாடுதல், ஆடுதல் போன்றவற்றின் மூலம், வெளிப்படுத்தப்படும் வாய்மொழி, நிகழ்த்துகைப் படைப்புகள் யாவும் செவி வழியாகவும், செயல் மற்றும் நடத்தை முறைகள் வாயிலாகவும் பரவக் கூடியவை. இம்மரபினை வெளிப்படுத்துவற்குரிய வடிவம், உள்ளடக்கம், உத்தி என்பவை தனி வகையாக உள்ளன. ஆனால் இவற்றிற்கு மாறாகப் புலவர் உள்ளிட்டோரால் சில நோக்கங்களை நிறைவேற்றுவதற்காகப் படைப்பினை ஆக்கம் செய்வதால் உருவாகும் விளைவே எழுத்து மரபாகும்.

எழுத்தாக்கம் செய்யப்பட்டவையான பாடல், உரைநடை உள்ளிட்டவற்றை வாசகன் படித்து இன்பமுறுவதற்காக அந்நூலில் யதார்த்த நிலையையும் நம்பகத் தன்மையையும் கொண்ட சில உத்திகளைக் கையாளுகின்றான் படைப்பாளன். அவன் பயன்படுத்தக்கூடிய உத்திகளுள் ஒன்றாக மக்களிடம் வழங்கும் வாய்மொழி மரபுகளைத் தனது எழுத்துப் படைப்பில் கையாளுவதும் அமையும்.

வாய்மொழி மரபுகள் எழுத்துப் படைப்பில் இடம்பெறுவதால் அதற்கெனத் தனி ஒரு வடிவம் அல்லது பாணி அமைகிறது. இங்கு, வாய்மொழி மரபும் எழுத்து மரபும் வெவ்வேறானவை என்பதை நுட்பமாகப் புரிந்து கொண்டதுடன் அதற்கு விளக்கம் தந்து கோட்பாட்டினையும் உருவாக்குவதில் முக்கியப் பங்காற்றியவர்கள் மேற்கத்திய நாடுகளைச் சேர்ந்த நாட்டார் வழக்காற்றியலாளர்கள் ஆய்வாளர்கள் ஆவர்.

அத்தகைய ஆய்வினைத் தமிழகத்தில் மேற்கொள்பவர்களில் ஒருவராக இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாகத் தூய சவேரியார் கல்லூரியின் நாட்டார் வழக்காற்றியல் துறையில் பேராசிரியராகப் பணியாற்றிய ஆ. தனஞ்செயன் ஆவார். இவர் சிலப்பதிகாரத்தில் நாட்டார் அழகியல் என்னும் பொருண்மையில் நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட் வழியாக நூல் ஒன்றினைக் கொண்டு வந்துள்ளார்.

செவ்வியல் பண்புகளை மிகுதியாகக் கொண்டு தனித்துவமுடைய காப்பியமாகத் திகழ்வது சிலப்பதிகாரம். இந்நூலில் கதையை நகர்த்திச் செல்வதற்கு பல்வேறு உத்திகளைக் கையாண்ட இளங்கோவடிகள் நாட்டார் மரபுகளை மிகுதியாகப் பயன்படுத்தியுள்ளார். இந்நாட்டார் மரபுகளைக் கண்டறிந்த பேராசிரியர் ஆ.தனஞ்செயன் அதற்கு நாட்டார் வழக்காற்றியம் (Folklorism) என்ற சொல்லாடலைப் பயன்படுத்துகிறார். இச்சொல்லாடலை இந்நூலில் அறிமுகம் செய்கிறார். அதற்கான ஆய்வின் அணுகுமுறை மற்றும் கோட்பாட்டினை விளக்குகிறார். சிலப்பதிகாரச் செய்யுள்களில் இடம்பெற்றுள்ள வாய்மொழி மரபுகளான பாடல்கள், கதைகள், சடங்குகள், நம்பிக்கைகள், கலைகள் ஆகியவற்றோடு நாட்டார் வழக்காற்றியம் கோட்பாட்டினைப் பொருத்தி ஆய்வு செய்கிறார். நாட்டார் அழகியல் என்பது, மக்களின் கூட்டுப் பங்கேற்பின் வாயிலாகப் படைக்கப்படும் பலவகை வழக்காற்று வடிவங்கள் அனைத்தின் மூலமாக வெளிப்படும் கலைநயம் பற்றிய மக்களின் ரசனை, அனுபவம் போன்றவற்றைக் குறிக்கும் ஒரு கருத்துருவமாகும். அத்தகைய நாட்டார் அழகியலை எவ்வாறு தமது காப்பியப் படைப்பில் இளங்கோவடிகள் நகலாக்க வழக்காறுகளைப் படைத்துக் கையாளுவதன் ஊடாகப் பயன்படுத்தியுள்ளார் என்பதையே இந்நூல் முதன்மையாக ஆராய்கிறது. ஆய்வின் முடிவாக, நகலாக்க வாய்மொழி மரபுகள் செய்யுள்களில் இடம்பெற்றிருப்பதன் காரணமாக அவை எவ்வாறு வாசகனைப் படிக்கத் தூண்டி அவனுக்கு நாட்டார் பண்பாட்டுக்குரிய ரசனை என்னும் அழகியல் அனுபவத்தைத் தருகிறது என்பதை நிறுவுகிறார். இந்நூல் சிலப்பதிகாரம் குறித்து வந்த ஆய்வுகளில் வேறுபட்டுப் புதிய ஆய்வு அணுகுமுறையில் ஆராயப்பட்டுள்ளது என்பதைப் புரிந்து கொள்ளமுடிகிறது.


இந்நூல் இரண்டு பகுதிகளாக அமைகிறது. முதல் பகுதியானது, தே.லூர்து அறக்கட்டளைச் சொற்பொழிவின் வாயிலாக உருவான ‘சிலப்பதிகாரம்: நாட்டார் வழக்காற்றியமும் அழகியலும்’ என்னும் பொருண்மையில் அமைந்தது. இரண்டாம் பகுதியில் ‘சிலப்பதிகாரத்தில் ஏழு பத்தினிப் பெண்கள்: புராணமும் குழுத்தெய்வ உருவாக்கமும்’ என்னும் கட்டுரையும், ‘சிலப்பதிகாரம் வெளிப்படுத்தும் கொற்றவை வழிபாட்டில் பரவசநிலைச் சமயமும் தெய்வமேறுதலும்’ என்ற கட்டுரையும் இடம்பெற்றுள்ளன.

இளங்கோவடிகள் கண்ணகியின் கதையைக் காப்பியமாக எழுதுவதற்கு முந்தைய காலத்திலிருந்து பாடல்கள், புராணங்கள் போன்ற நாட்டார் பண்பாட்டுக் கூறுகளை வழக்கத்தில் கொண்டிருந்த திணைக்குடிச் சமூகங்கள் ஆதாரமாக இருந்திருக்கின்றன. இச்சமூகங்களில் வழங்கிய பல்வேறு பண்பாட்டுக் கூறுகளைக் காப்பியத்தில் இணைத்துக் கையாண்ட உத்தியின் வாயிலாக வாசகனிடம் கதை உண்மையானதுதான் என்ற கருத்தைப் பதியச் செய்யும் வகையில் காப்பிய விவரணையில் ஓர் உயிரோட்டத்தை ஊட்டுகிறார் இளங்கோவடிகள் என்கிறார் நூலாசிரியர்.

படைப்பு என்பது அழகியல் அனுபவத்தைத் தரும். அழகியலுக்கு எவையெல்லாம் மூலப்பொருளாக இருக்கிறதோ அவற்றைக் கொண்டே படைப்பும் உருவாக்கப்படும். மூலப்பொருளாக விளங்குவது உடல், கண், காது முதலியவற்றின் வழியாகத் தோன்றக்கூடிய உணர்வுகளாகும். இளங்கோவடிகள், உணர்வுக்கு முக்கியத்துவம் தரும் வகையில் நாட்டார் மரபிலிருந்த கண்ணகி கதையைக் கருவாக எடுத்துக் கொண்டார். அக்கதையைப் படைப்பு நெறிக்கு ஏற்றவாறு உருமாற்றம் செய்து பயன்படுத்திக் கொண்டதுடன் ஆங்காங்கே நாட்டார் வழக்காற்றுக் கூறுகளையும் எடுத்தாண்டுள்ளார். இதனைப் போன்மையாக்கம் செய்தல் அல்லது

மீள்படைப்பாக்கம் செய்தல் என்கிறார் நூலாசிரியர். இச்சொல்லாடல்கள் இலக்கியங்களில் நாட்டார் வழக்காறுகள் இடம்பெறுவதாலேயே அவற்றிற்கு இலக்கிய வடிவம் கிடைத்துவிட்டது என்று கூறுவோர் சிந்திக்கும் வகையில் அமைகின்றன.

இளங்கோவடிகள் செய்யுள்களில் ஆசிரியப்பா உள்ளிட்ட யாப்பு வடிவங்களைப் பயன்படுத்திய போதிலும் நாட்டார் மரபில் வழங்கிய பாடல்களை ஒத்த யாப்பு வடிவங்களை மிகுதியாகக் கையாண்டிருக்கிறார். இதனால் ஏனைய இலக்கியங்களை விடச் சிலப்பதிகாரத்தில் நாட்டார் அழகியல் மிகுதியாகக் காணப்படுகிறது என்கிறார் நூலாசிரியர்.




சிலப்பதிகாரத்தில் நாட்டார் அழகியல் | ஆ.தனஞ்செயன்,
வெளியீடு : என்சிபிஎச் சென்னை,
விலை: 185/-

படைப்பாளன் எப்பொழுதும் அந்தந்தச் சமுதாயத்தால் உருவாக்கப்படுகிறான். ஏற்றப்பாட்டின் ஓசையில் கம்பன் தனது மனதைப் பறி கொடுத்தான். அதுபோல இளங்கோவடிகளுக்கும் அவர் வாழ்ந்த காலத்தில் இருந்த இனக்குழு உள்ளிட்ட ஏனைய திணைசார் சமுதாயங்களில் வழங்கிய வாய்மொழி மரபுகளின்மீது ஈர்ப்பு இருந்ததைப் படைப்பில் அவர் மிகுதியாகக் கையாண்டிருக்கும் பாங்கின் மூலம் புரிந்து கொள்ளமுடியும். இதனால் சிலப்பதிகாரத்தை 'நாட்டார் பண்பு தழுவிய காப்பியம்' (*Folkish epic*) என்று அழைக்கலாம் என்று நூலாசிரியர் கருதுகிறார்.

பொதுவாக நாட்டார் வழக்காறுகள் இலக்கியங்களில் பயின்றுள்ளதைக் கண்டறிந்து மேலோட்டமாகச் சொல்வதோடு நமது ஆய்வுகள் நின்றுவிடுவதே வழமையாகும். அதனைக் கொண்டு மேற்சென்று திறனாய்வு செய்யும் அணுகுமுறை நம்மிடையே இல்லை என்று கூறுகிறார் நூலாசிரியர். ஆனால் ஆங்கில இலக்கியங்கள் பற்றிய ஆய்வுலகில், இந்தத் திறனாய்வு அணுகுமுறை நிலவுவதையும் அதிலும் கூட, சில பலவீனங்கள் காணப்படுகின்றன என்பதையும் ஆலன் டண்டிஸ் போன்ற நாட்டார் வழக்காற்றியலாளர்களின் எழுத்துக்களை ஆதாரம் காட்டி விளக்குகிறார். மார்க் டிவைன் (*Mark Twain*) இயற்றிய இலக்கியங்களில் நாட்டார் வழக்காறுகளைக் கண்டறிந்து அவ்வழக்காறுகள் எவ்வாறு படைப்புக்கு அடித்தளமாக இருந்தது என்பதைக் குறிப்பிடுகிறார். ரிச்சர்ட் எம். டார்சன் (*Richard M. Dorson*) எழுதிய கட்டுரையின் வழியாக நாட்டார் வழக்காறுகளை இலக்கியங்களில் இனம் காணும் வழிமுறைகள் என்னும் ஆய்வு அணுகுமுறைக்கு வித்திட்டது. இதனால் இலக்கியம், நாட்டார் வழக்காறுகள் என இணைத்து நோக்கி ஆய்வதை ஓர் இடைப்புல ஆய்வு நடவடிக்கை (*Inter disciplinary activity*) என்ற கருத்துருவம் ஏற்பட்டது என்கிறார். தொடர்ந்து ஆலன் டண்டிஸ் (*Alan Dundes*)

> “ இளங்கோவடிகள், உணர்வுக்கு முக்கியத்துவம் தரும் வகையில் நாட்டார் மரபிலிருந்த கண்ணகி கதையைக் கருவாக எடுத்துக்கொண்டார். ”

என்பவர் நாட்டார் வழக்காறுகளை ஆராய்வதற்கான முறையை அறிமுகப்படுத்தியதையும் நாட்டார் வழக்காற்றியலார் மீது நாட்டார் வழக்காறுகளை அடையாளம் காணும் தொடக்க நிலையில் ஆராய்வதோடு நின்றுவிடுகின்றனர் என்று விமர்சனம் செய்வதையும் குறிப்பிடுகிறார்.

தொடர்ந்து தமிழ் இலக்கியங்களில் நாட்டார் வழக்காறுகள் எந்த வகையில் இடம்பெற்றுள்ளன என்பதை எடுத்துரைக்கிறார். குறிப்பாகப் பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் நாட்டார் பண்பாடு தழுவிய ஒழுகலாறுகள், மரபுகளை மறுப்பது, கண்டிப்பது என்ற நோக்கங்களை முன்னிறுத்துபவை. திணைக்குடிப் பண்பாட்டிற்கு நேரெதிரான புதிய அறங்களையும் விழுமியங்களையும் புகுத்தின. மறுபுறம் அவற்றில் விதி விலக்காகப் பழமொழிநானூறு என்னும் நூல் குறிப்பிட்ட வழக்காற்று வடிவத்தைக் கையாண்டு, தன்னியல்பான நாட்டார் வழக்காற்றியத்தை நிறுவியுள்ளதையும் நூலாசிரியர் சுட்டிக் காட்டுகிறார்.

பண்டைய இலக்கியங்கள் தோன்றுவதற்கு அடிப்படையாக வாய்மொழி இலக்கியங்கள் இருந்தன என்னும் கருத்தை முன் வைக்கும் மு. வரதராசனார், க.கைலாசபதி, தமிழண்ணல், துளசி. இராமசுவாமி போன்றோருடைய ஆய்வுகளின் பலம் மற்றும் பலவீனங்களும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. வாய்மொழி இலக்கியங்கள் மனித இனம் வேட்டையாடுதல், மீன் பிடித்தல் உள்ளிட்ட தொழிலில் கூட்டமாக ஈடுபட்ட காலத்தில் ஆடுதல், பாடுதல் ஆகியவற்றினால் தோற்றம் பெற்றன என்பர். இப்பாடல்கள் என்பது செவிகளுக்கு கேள்வியாக அமைந்து அவை செவி வழியாகப் பரவிய அடிப்படையைக் கூறுவார். அத்தகைய பெயர் தெரியாமல் செவி வழியாக இருந்துவரும் நாட்டுப்புறப் பாடல்களின் தாக்கம் புலவர்களால் இயற்றப்படும் அகப்பாடலில் தலைமை மாந்தர்களின் பெயர் இடம்பெறாததை, 'சுட்டி ஒருவர் பெயர்கொளப் பெறார்' (தொல். அகம்.54) என்று கூறியுள்ளதை எடுத்துரைக்கிறார்.

நாட்டார் மரபுகளை இயற்கையான சூழலிலிருந்து வேறு நோக்கத்திற்காகச் செயற்கையாகப் புலவர் உள்ளிட்டோரால் மறுபடைப்பாக்கம் செய்வதை நாட்டார் வழக்காற்றியம் என்கிறார். இது புராதனவியம் (Primitivism) என்னும் சொல்லிலிருந்து பெறப்பட்டது. இச்சொல்லாட்சி ஐரோப்பிய நாடுகளில் அறிமுகமாகியது. இதற்குப் பயன்பாட்டு வழக்காறு (Applied Folklore), போலி வழக்காறு (Spurious / Folklore) உள்ளிட்ட சொல்லாடல்கள் பயன்படுத்துவதையும் பேராசிரியர் விளக்குகிறார்.

நாட்டார் வழக்காறுகள் என்பது ஒரு குழுவில் ஒருங்கிணைத்து வெளிப்படுத்தக்கூடிய கருத்துப் புலப்படுத்தத்தைக் குறிக்கும். அந்நாட்டார் வழக்காறுகள் படைப்புகளில் வெளிப்படும்பொழுது அதனை நாட்டார் வழக்காற்றின் கருத்துப் புலப்படுத்தம் என்று கூறுவது பொருத்தமாக இருக்கும் என்கிறார். இது கலைப் படைப்பில் அழகியலைக் காட்டுவதற்காக முன்னிலைப் படுத்தப்படுவதுடன் தன் நிலையிலிருந்து பொருள், ஒலி, அசைவியக்கம் ஆகியவற்றால் உருமாற்றம் என்னும் படிமுறையைப் பெற்றுவிடுகிறது. இவ்வுருமாற்றத்தை நடை, கலைநயம், மரபு பிணைப்பு, புத்துருவாக்கம் ஆகியவற்றால் அணுகமுடியும். இதனைப் படைத்துக் காட்டுவோர் வாசகர் முன்னர்ச் சிறப்புடைய நேரத்தில் இடம்பெறச் செய்கின்றனர் என்பதைச் சுட்டிக்காட்டுகிறார் பேராசிரியர்.

இத்தகைய ஆய்வு அணுகுமுறையிலிருந்து சிலப்பதிகாரத்தை நோக்கினால் அதனுடைய கதையின் மூலக்கருவைப் பழமரபுக் கதையான, 'ஒருமுலை அறுத்த திருமா வுண்ணி' (நற்றிணை, 216), மலைவாழ் மக்கள் கண்ணகியை நேரில் கண்டு வியப்படைந்த காட்சி ஆகியவற்றின் வழியாக எடுத்து இருப்பதில் இருந்தே நாட்டார் மரபு தொடங்கிவிடுகிறது. இக்கதையை இளங்கோவடிகள் படைப்பாக்கம் செய்தபொழுது வாய்மொழி மரபாக வழங்கிய கதையில் போன்மையான வடிவத்தைப் பெறுகிறது என்கிறார் நூலாசிரியர்.

இது போன்று நாட்டார் மக்களிடம் வழங்கும் கதையை இளங்கோவடிகள், கம்பர், பாரதி போன்ற ஆற்றல்மிக்க கவிஞர்களால் மட்டுமே படைப்புகளாகக் கொடுக்கமுடியும். அவற்றில் இளங்கோவடிகள் கண்ணகிக்குத் தெய்வப் பண்புருவைப் புகட்டுவதற்காகவே இக்கதையை எடுத்துக் கொண்டார். கதையில் நம்பகத் தன்மையை உறுதிப்படுத்த ஆங்காங்கே வேடர்களின் பாடல்கள், ஆயர்களின் பாடல்கள், ஊஞ்சல் ஆடி பாடும் பாடல், பந்து விளையாடும்

பாடல், தெய்வத்தைப் போற்றிப் பாடும் பாடல் ஆகிய நாட்டார் வழக்காற்றில் வழங்கிய பாடல்களைப் போன்மையாக்கம் செய்து இயற்றியுள்ளார் என்று நூலாசிரியர் குறிப்பிடுவார். இதற்கு ஆசிரியர் கூற்றாக வருமிடங்களில் ஆசிரியப்பா உள்ளிட்ட இலக்கண யாப்பு வடிவங்களைப் பயன்படுத்துவதையும் நாட்டார் மரபுகளைக் கூறுமிடத்தில் இசைப் பாடல்களைப் பயன்படுத்துவதையும் சான்றாகக் காட்டியுள்ளார்.

கூட்டுப் படைப்பில் உருவாகும் நாட்டார் பாடல்களில் உயிரோட்டமுடைய இசையோடு கூடிய இட்டுக்கட்டுகள் (Improvisation) இருக்கும். இட்டுக்கட்டு என்பது பாடகரோ கதை சொல்லியோ பொருள் பொதிந்த அடிகளைப் புதிது புதிதாகப் புனைந்து படைப்பதைக் குறிக்கும். இப்பாடல்களுக்கு அப்படியே வரி வடிவம் கொடுக்க முடியாது. அதற்கு வரி வடிவம் கொடுக்கும்போது சில மாறுதலுக்கு உட்படும். அத்தகைய நாட்டார் பாடல்களைக் கானல் வரி, வேட்டுவ வரி, ஆய்ச்சியர் குரவை, குன்றக் குரவை ஆகிய காதைகளில் இளங்கோவடிகள் போன்மையாக்கம் செய்து பெருக்கு நிலை மறுபகர்ப்பு முறை (Incremental repetition) என்னும் உத்தியைக் கையாண்டு கதையை முன்னோக்கி எடுத்துச் செல்வதைச் சான்றுகளுடன் எடுத்துக்காட்டி விளக்குகிறார்.

பிறவித் துன்பத்தைக் கொடுப்பது ஊழ்வினையே என்ற கொள்கை கொண்டவராக விளங்கியவர் இளங்கோவடிகள். இவர் எடுத்துக்கொண்ட கதை கண்ணகி குறித்து நடந்த சம்பவத்தைப் பற்றியதாகும். இக்கதையைக் காரண காரியமான கொள்கையோடு தொடர்புபடுத்த கதை மாந்தரின் முன்னோர் வரலாறு, கதை மாந்தர்களின் சிறப்பு இயல்புகளைக் கூறுதல் உள்ளிட்டவற்றிற்கு மூலக் கதையிலிருந்து சற்று விலகிச் சில கிளைக் கதைகளை இணைத்துக் கொண்டுள்ளார் இளங்கோவடிகள். குறிப்பாக நீதி தவறாத மனுநீதி சோழன், ஏழு பத்தினியர் கதை, கோவலன் முன் பிறவி குறித்த கதை முதலிய கிளைக் கதைகள் சிலப்பதிகாரத்தில் இடம்பெறுகின்றன. இவற்றில் ஏழு பத்தினியர் கதை சோழ நாட்டில் வெவ்வேறு இடங்களில் நடந்ததாகும். இக்கதையை ஒன்றாக இணைத்துக் கண்ணகியுடன் தொடர்புபடுத்துவதும் பின்னர், அக்கதையானது, பெரியபுராணம், பட்டினத்துப்பிள்ளையார் புராணம் ஆகிய இலக்கியங்களில் உருமாற்றம் பெறுவதையும் நுணுகி ஆராய்ந்து அக்கதை மரபுத் தொடர்ச்சியாக இன்றளவும் ஏழு கன்னிமார் கதையாக மக்களிடம் வழங்கி வருவதையும் பேராசிரியர் ஒப்பு நோக்கியிருப்பது நாட்டார் வழக்காற்றியம் ஆய்வினைக் கூர்மைப்படுத்துகிறது.

தீக்கடவுள் முதலியவை மனிதனைப் போல பேசுவதாகக் குறிப்பிடுகிறது சிலப்பதிகாரம். இவை யதார்த்த உலக நிகழ்விற்கு நேர் மாறான புராணத் தன்மையுடையதாகும். இப்புராணக் கதைகளின் வழியாகப் படைப்பில் திருப்புக் கட்டத்தை உருவாக்கவும், கதை மாந்தர்களின் பண்பு இயல்புகளைச் சித்திரிக்கவும், நெருக்கடிகள், முடிவுகள் போன்ற காரணங்களால் இடம்பெறுகிறது என்னும் கருத்துகளை முன் வைக்கிறார் நூலாசிரியர்.

வழிபாட்டு நிகழ்வுகளில் வெறியாட்டு உள்ளிட்ட சடங்கு நிகழ்த்துகையில் தெய்வீக ஆற்றலைப் பெறக்கூடிய தெய்வமுறுதல், எதிர் காலத்தைக் கணித்துரைக்கக்கூடிய குறி கூறுதல் போன்றவை இடம்பெறுவதைச் சிலப்பதிகாரம் குறிப்பிடும். இவை நாட்டார் மரபிலிருந்து தழுவிய படைப்பாக இளங்கோவடிகள் எவ்வாறு பயன்படுத்தினார் என்பதை நூலாசிரியர் விவரிக்கிறார்.

நூலின் பயனாக ஐரோப்பிய நாடுகளில் அறிமுகப்படுத்திய நாட்டார் வழக்காற்றியம் என்ற ஆய்வின் அணுகுமுறையைப் பேராசிரியர் ஆ. தனஞ்செயன் சிலப்பதிகாரத்தில் பொருத்தி ஆய்வு செய்து நூலாக வெளியிட்டிருப்பது தமிழகத்தில் நாட்டார் வழக்காற்றியல் ஆய்வாளர்களுக்கு ஒரு தூண்டுகோலாக அமையும். இலக்கியங்கள் காலந்தோறும் நாட்டார் மரபுகளை மிகுதியாகக் கொண்டு இருப்பதால் அதனை நாட்டார் வழக்காற்றியம் என்ற அணுகுமுறையில் ஆராய வேண்டும். இதனால் நாட்டார் மரபுகளான பாடல்கள், கதைகள், சடங்குகள் உள்ளிட்டவை இலக்கியத்திற்கு எந்த அளவில் அழகியலைத் தந்துள்ளன என்பதை அறியமுடியும். அத்தகைய ஆய்விற்குத் தொடக்கமாகவும் வழிகாட்டவும் இந்நூலை அமைத்துத் தந்த நூலாசிரியர் முன்னோடிகளில் ஒருவராக உள்ளார் என்று கூறுவதில் மிகையில்லை.


●

**கட்டுரையாளர்: இளநிலை ஆராய்ச்சி அலுவலர்,**
**செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், சென்னை**


# நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் புதிய வெளியீடுகள்




₹ 115/-





₹ 550/-





₹ 400/-




₹ 90/-




₹ 220/-




₹ 300/-

**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**

41-பி,சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 050.

☎ 044 - 26251968, 26258410, 48601884 www.ncbhpublisher.in | email: info@ncbh.in

நூல் அறிமுகம்

# பழங்குடிக் குழுக்களின் உரிமைகளை மீட்டெடுப்பதற்கான கைவிளக்கு






**முனைவர் மு. ஏழுமலை**

முனைவர் சி.மகேசுவரன் அவர்கள் தமிழக ஆய்வுச் சூழலில் மொழியியல், மானிடவியல், சமூகவியல், நாட்டார் வழக்காற்றியல் சார்ந்து தொடர்ச்சியாக இயங்கக்கூடிய ஆய்வாளர்களில் குறிப்பிடத்தக்க ஆய்வாளர் ஆவார். இவர் அருங்காட்சியகப் பணியாளராகத் தம் பணியைத் தொடங்கி, பழங்குடியினர் சார்ந்து மொழியியல் ஆய்வில் முனைவர்பட்டம் பெற்றவர். தமிழ்நாடு அரசின் பழங்குடியினர் ஆய்வு நடுவ மேனாள் இயக்குநராகப் பணியாற்றியவர். தமிழ்ச் சமூகத்தின் வரலாற்றையும் பண்பாட்டையும் வரலாற்றியல், சமூகவியல், மார்க்சியவியல், மானிடவியல் உள்ளிட்ட துறைசார் அணுகுமுறையோடு தனக்கே உரிய ஆய்வு முறையியலோடு கள ஆய்வின் அடிப்படையில் அடையாளப்படுத்திக் கொண்டிருப்பவர். தற்போது பாரதியார் பல்கலைக்கழக மொழியியல் துறையில் முதுநிலை ஆய்வுத் தகைஞராகப் பணியாற்றி வருகிறார்.

தமிழ்ச் சமூகம் குறித்த அடையாளங்களை மீட்டெடுத்தலுக்கான முறையியலாக: யூகங்களை முன்வைத்த கற்பனாவாத கருத்தியலைத் தவிர்த்து மக்களின் வாழ்வியல் அடிப்படையில் யதார்த்தவாத பின்புலத்தோடு சிரத்தையான கள ஆய்வு அடிப்படையில் எந்த ஒரு பொருண்மையையும் அணுகுதல் என்பது முனைவர் சி. மகேசுவரன் அவர்களின் ஆய்வு அணுகுமுறையாக உள்ளது குறிப்பிடத்தக்கது. இவற்றிற்குச் சமீபத்தில் வெளிவந்து ஆய்வாளர்களிடையே நல்லதொரு வரவேற்பைப் பெற்ற 'பண்பாட்டு ஆய்வுகள்'. என்ற நூல் தக்கதொரு சான்றாகும். இந்நூல் மட்டுமின்றி தமிழ், ஆங்கிலம் என இரு மொழிகளிலும் பல நூல்களைப் பழங்குடிக் குழுக்கள் சார்ந்து இயற்றியுள்ளது இந்நூலாசிரியருக்குரிய சிறப்பாகும்.

இன்றைய சமகாலத்தில் தொடர்ச்சியாக மானிடவியல், இனவரைவியல், நாட்டார் வழக்காற்றியல் எனும் துறைகளைச் சார்ந்த பொதுத்தன்மைகளிலும் பழங்குடிகள் சார்ந்தும் பரவலாகக் கட்டுரைகளும் நூல்களும் வந்துகொண்டிருக்கின்றன. ஆனால், இப்பெயர்களை ஒரு கவர்ச்சிக்குரிய ஆய்வுப் பெயர்களாக எடுத்துக்கொண்டு எழுதி வெளியிடும் போக்கும் உள்ளது. குறைந்தபட்சம் அந்தந்தத் துறைசார்ந்த அறிவோ அல்லது அடிப்படைகளோ இல்லாமல் அதாவது கள ஆய்வுப் பணிக்கும் கள ஆய்வுப் பார்வைக்கும் கூட வேறுபாடு அறியாமல் ஆய்வுகள் வெளிவருவதும் இன்றைய நிலையில் பெருகியுள்ளது.




**தமிழ்நாட்டுப் பழங்குடிக் குழுக்கள் எதிர்கொள்ளும் சிக்கல்கள் | முனைவர் சி. மகேசுவரன்**
**வெளியீடு: என்சிபிஎச், சென்னை | விலை: ரூ. 95/-**

இவ்வாறு வெளிவரும் நூல்களுக்கிடையே கள ஆய்வு அடிப்படையில் முறையான பங்கேற்றலும் உற்றுநோக்கலும் கொண்ட ஆய்வு நூல்களும் வருவதையும் மறுப்பதற்கில்லை. முழுமையான கள ஆய்வு மேற்கொண்டும், கள ஆய்வில் கிடைத்த தகவல்களை ஆய்வு முறையியலோடு சேகரித்தும், தொகுத்தும், ஆய்வுக்குட்படுத்தியும், ஆய்வுக்குட்படுத்திய பொருண்மை சார்ந்த சிக்கல்களைக் கண்டறிந்தும், அதற்குரிய தீர்வையும் கூறியுள்ள நூல்தான் முனைவர் சி.மகேசுவரன் அவர்களின் 'தமிழ்நாட்டுப் பழங்குடிக் குழுக்கள் எதிர்கொள்ளும் சிக்கல்கள்' என்னும் இந்த நூல்.

இந்நூலில் நூலாசிரியர் தமிழ்நாட்டுப் பழங்குடிக் குழுக்கள் எதிர்கொள்ளும் சிக்கல்கள் ஒரு பொதுப்பார்வை, விளிம்புநிலைக்குத் தள்ளப்படும் தமிழகப் பழங்குடியினர், பழங்குடியினர் மேம்பாட்டில் எதிர்ப்படும் தடைக் கற்கள், வன உரிமைகள் சட்டம்: ஓர் அறிமுகம், பொருளாதாரத் தாராளமயமாக்கல் மற்றும் உலகமயமாக்கலில் பழங்குடி மக்களுக்கு நேரிடும் இன்னல்கள், சமுதாயச் சான்று பெறுவதில் பழங்குடியினர் எதிர்கொள்ளும் சிக்கல்கள், பட்டியல் பழங்குடி நிலை அறிந்தேற்பில் நிலவிடும் தமிழ்நாட்டின் நிலுவை முறையீடுகள், தமிழ்நாடு மாநில அட்டவணைப் பழங்குடியினர் பட்டியல்: ஒரு மீளாய்வுப் பார்வை, தமிழ்நாட்டுப் பழங்குடிக் குழுக்கள் எதிர்கொள்ளும் அடையாளச் சிக்கல்களும் பரிந்துரைக்கும் தீர்வுகளும் என்னும் ஒன்பது பகுதிகளில் தமிழ்நாட்டுப் பழங்குடிக் குழுக்கள் எதிர்கொள்ளும் சிக்கல் குறித்து நுட்பமாகவும் எளிமையாகப் புரிந்துகொள்ளும் நிலையிலும் பதிவு செய்துள்ளார்.

இந்நூலில் இடம்பெற்றுள்ள ஒவ்வொரு பகுதிகுறித்தும் விரிவாக உரையாடுவதற்கான களத்தை நூலாசிரியர் தம்முடைய விரிவான களஆய்வுத் தரவுகளால் அளித்துள்ளார். ஆனாலும் ஒவ்வொரு பகுதிகுறித்த விளக்கங்களாகவும் விமர்சனங்களாகவும் இல்லாமல், தவிர்க்க இயலாத சில கூறுகள் குறித்து இந்நூல் திறனாய்வில் பகிர்ந்துகொள்ளலாம். இவற்றின்மூலம் இந்நூலின் இன்றியமையாமையை ஆய்வுலகம் அறிந்துகொள்வதற்கு வாய்ப்பாக அமையும்.

## அடையாளச் சிக்கல்

"ஆதிவாசி, தொல்குடி, பழங்குடி, திணைக்குடி என்றெல்லாம் பட்டியல் பழங்குடியினரது தொன்மை, பழமை, திணைசார்பு பெரிதாகப் பேசப்பட்டு வந்த நிலையில், தற்போது அவர்களை வனத்திற்கு மட்டும் உரியோர் என்று பொருள்படும் அளவில் 'வன ஜாதி' என்பதும், மக்கள் வகைமையினர் எனப் பொருள்படப் பொத்தாம் பொதுவான 'ஜன ஜாதி' என்பதும் அதிர்ச்சி அளிக்கின்றன என்கிறார் இந்நூலாசிரியர். 'வன ஜாதி' 'ஜன ஜாதி' என்ற இரு சொற்கள் என்பவை வெறும் சொற்கள் அல்ல. இச்சொற்களுக்கான அரசியலால் பழக்குடிக் குழுக்களின் அடையாள இழப்பை நாம் புரிந்துகொள்ள வேண்டும். இந்த அடையாள இழப்பைப் பற்றி விரிவாக நூலாசிரியர் பதிவு செய்திருப்பது குறிப்பிடத்தக்கது. பொதுத்தன்மையில் மக்கள் வகைமையினர் என்ற சொல் உருவாக்கம் என்பது அரசின் அடுத்தடுத்த செயல்பாடுகளுக்குக் கொண்டு செல்வதற்கான நுழைவு வாயிலாக அமைகின்றது. அதாவது, வனத்தில் வாழும் மக்களை சமவெளிக்குப் புலப்பெயர்ச்சி செய்தலின் மூலம் பழங்குடி குழுக்களுக்கே உரிய பண்பாட்டு அடையாளத்தையும் மொழி அடையாளத்தையும் அழித்தொழிக்கச் செய்யும் செயல்பாடுகளின் அணிவகுப்புகள் செயல்படத் தொடங்கிவிடுகின்றன. அடையாள அழிப்பின் தன்மையை பழங்குடிக் குழுக்களுக்கு வழங்கப்படும் மறுகுடியேற்ற நிலையைக் குறித்து நூலாசிரியர் குறிப்பிடும்போது, 'நீரில் வாழும் மீனினத்தை நிலத்தில் எறிவதற்கு ஒப்பாகும்' என்கிறார். இந்த வரிகளுக்குள் நீளும் வலி என்பது சொல்லுதற்கரியது. காலம்காலமாகப் பழகிவந்த இடம் பறிக்கப்படுவதும் தங்களின் எல்லாவிதமான சூழல்களிலிருந்தும் வேரறுக்கப்படுவதும் ஒரு இனவழிப்பின் செயல்பாடாகும்.

## நிறுவன சமயங்களுக்குள் பழங்குடிக் குழுக்களைக் கொண்டுவருதல்

ஒன்றிய அரசின் சமீபகால செயல்பாடுகளில் ஒன்று ஒற்றைப் பண்பாட்டுத் தன்மையை உருவாக்குதல். இந்தியா என்பது பன்மொழியும் பன்மியப் பண்பாட்டுத் தன்மையையும் உடைய நிலவியல் சூழல் உடையது. இத்தகைய அடிப்படையை மறந்து அல்லது மறைத்து நாடு முழுவதுமான ஒற்றைப் பண்பாட்டுத் தன்மையை உடையதாகக் கொள்ளும் செயல்பாடுகளும் அதிகரித்துக் கொண்டிருப்பதன் முந்தைய செயல்பாட்டின் வடிவம்தான், 2011ஆம் ஆண்டில் பழங்குடிக் குழுக்களைக் கணக்கிடும்போது 'பிறர்' என்கிற வகைமைக்கான இடத்தை நீக்கிய நிலையாகும். தற்போது இந்திய பழங்குடிக் குழுக்களில் பெரும்பான்மையினரை 'இந்து' என்கிற நிறுவனப் பெருஞ்சமயத்திற்குள் அடைக்கும் நிலையும் உருவாகியிருக்கிறது. இத்தன்மை பழங்குடிக் குழுக்கள் எதிர்கொள்ளும் முதன்மையான சிக்கல்களில் ஒன்றாக நூலாசிரியர் விளக்கியிருப்பது குறிப்பிடத்தக்கது.

## வளர்ச்சித் திட்டப்பணிகளை நடைமுறைப்படுத்துதல்

பழங்குடிக் குழுவினர் தங்களுடைய மரபார்ந்த வாழிடங்களான மலைப்பகுதி, மலையடிவாரப் பகுதி, சமவெளிப் பகுதி, கழிமுகப் பகுதி, கடலோரப் பகுதி எனப் பல்வேறுபட்ட நிலவியல் பரப்புகளில் வாழ்ந்து வருகின்றனர். இப்பழங்குடிக் குழுக்களை வளர்ச்சித் திட்டப்பணிகளை நடைமுறைப்படுத்துகிறோம் என்ற பெயரில் அவர்களின் வாழ்வாதாரத்திற்கு எவ்விதத்திலும் தொடர்பு இல்லாத இடங்களில் மாற்றுக் குடிசைகளை அமைத்து இடம்பெறச் செய்கின்றனர். இச்சூழலால் வேட்டையாடுதல் உள்ளிட்ட தம்முடைய மரபார்ந்த அறிவைப் பயன்படுத்துதலுக்கான சூழல் இன்மையால் புதிய குடியிருப்புகள் அமைந்துள்ள இடம்சார்ந்து இருக்கும் வேளாண் நிலங்களிலும் தொழிற்சாலைகளிலும் வேளாண் கூலிகளாகவும், தினக்கூலிகளாகவும் இப்பழங்குடியினர் உருவாகிவருகின்றனர். இந்த மரபுசார் அறிவு இழப்பு என்பது அறிவு இழப்பாக மட்டுல்லாமல் பண்பாட்டு இழப்பாக உருமாறி பண்பாட்டு வறுமைக்கும் அடையாள இழப்பிற்கும் விளிம்புநிலையாக்கத்திற்கும் பழங்குடி இனக்குழுக்கள் செல்லுவதற்கு ஒன்றிய, மாநில அரசின் வளர்ச்சித்திட்டப் பணிகள் என்ற போர்வையில் செயல்படுத்தப்படும் பணிகள் வாயில்களாக அமைகின்றன.

## தனியார் உடைமையாகவும் வணிகப் பொருளாகவும் மாறுதல்

பழங்குடிகளுக்கான சிக்கல் உருவாக்கலாக புதிய அவதாரம் எடுத்திருப்பது, பழங்குடிக் குழுக்கள் தலைமுறை தலைமுறையாக வாழ்ந்துவரும் இடங்கள் தனியாருக்குரிய உடைமைகளாகவும், வணிகப் பொருளாகவும் மாற்றம் பெற்றுவருவது. காடு, மலைசார் இடங்களில் சுற்றுலா விடுதிகள் அமைத்தல், ஆன்மிகத் தலங்களை உருவாக்குதல் என்னும் நிலைகளில் தனியாருக்குக் காடுசார், மலைசார் இடங்கள் அளிக்கப்படுகிறது. பழங்குடியினரின் இத்தகைய காடுசார், மலைசார் உரிமையைப் பறிக்கும் தன்மைகளையும் இந்நூலில் நூலாசிரியர் எடுத்துக்காட்டியிருப்பது பழங்குடிகள் எதிர்கொள்ளும் சிக்கல்களின் பன்முகங்களை அறிந்துகொள்ளச் செய்வதோடு,

பழங்குடிக் குழுக்கள் எதிர்கொள்ளும் வலிகளின் பரிமாணங்களைப் பறைசாற்றுவதாகவும் உள்ளது.

### பழங்குடிக் குழுக்களை அந்நியமாக்குதல்

இந்தியா போன்ற பல நாடுகளில் சமகாலத்தில் அரசுகளின் சட்டங்கள் யாருக்கான சட்டமாக உள்ளது என்பது மிக முக்கியமான வினாவாக உள்ளது. மக்களுக்கான நலத் திட்டங்கள், அறிவியல் பரப்புதல், தொழில்நுட்ப வளர்ச்சி, நகரமயமாக்கல், அந்நிய நாடுகளின் பொருளாதார முதலீடுகளிலான நடவடிக்கைகள், உலகமயமாக்கச் சூழல் முதலானவற்றின் செயல்பாடுகளைக் குறித்தும், அவற்றின் எதிர்கால இயக்கங்கள் குறித்தும் பொறுப்புடன் சிந்திக்க வேண்டிய கடமையும் உள்ளது.

இத்தகைய செயல்பாடுகள் ஒரு குறிப்பிட்ட பகுதிசார் எல்லையில் கிடைக்கப்பெறும் பொருள்களைக் கொண்டு தன்னிறைவான வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கும் பழங்குடிக் குழுக்கள் தன் மரபார்ந்த வாழ்வியலுக்கு எதிரான ஒவ்வாதவற்றோடு ஒத்துப்போகாமல் அவற்றிலிருந்து அந்நியமாகும் சூழல் இயல்பாக உருவாகின்றது. இத்தகைய அந்நியமாக்கல் தன்மையை நூலாசிரியர் குறிப்பிடும்போது, 'நீலகிரி மாவட்டப் பணியன் பழங்குடியினர் நிலத்தில் முதல் விதைப்பைத் தொடங்குதல், நாற்று வயலின் சேற்று நிலத்தில் நடவின்போது ஆடுதல், விளைந்த நிலத்தின் சிறு பரப்பில் புத்தரிசிச் சடங்கை மேற்கொள்ளல் என்றெல்லாம் தொடர்ந்து ஆற்றிடும் பண்பாட்டு நடவடிக்கைகள் இப்பழங்குடி மக்களே இந்நிலத்தின் மரபார்ந்த உரிமைப் பழங்குடியினர் என்பதை பறைசாற்றிடும்' எனப் பதிவு செய்கிறார். இவ்வாறு ஒரு நிலத்தோடு நேரிடையாக உறவு கொள்ளும் மக்கள் அந்த நிலத்திலிருந்து அந்நியப்படுத்தும்போது அம்மக்களின் நிலத்தின் மீதான உரிமை, நிலம் சார்ந்த நம்பிக்கைகள், நம்பிக்கைகளின் நிகழ்த்துதலான சடங்குகள், சடங்குநிலையிலான பண்பாட்டுத்தன்மை என அனைத்தும் அந்நியப்படுத்துதலாகவும், சில காலங்களுக்குப் பிறகு மறந்தும் மறைந்தும் போகக்கூடிய நிலை உருவாகிறது. இவை தம் மரபான நிலத்திலிருந்து அந்நியமாக்கப்பட்ட மக்களின் தொடர் இன்னல்களாகும். கோத்தர், தொதவர், இருளர் உள்ளிட்ட பல பழங்குடிக் குழுக்களுக்கு ஏற்பட்ட நிலைகளை தக்கச் சான்றுகளாக எடுத்துக்காட்டி விளக்கியிருப்பது பழங்குடிக் குழுக்கள் எதிர்கொள்ளும் சிக்கல்களின் உச்சத்தை உணர்த்துவதாக உள்ளது.

### இந்நூல் ஒரு கைவிளக்கு

பழங்குடிக் குழுக்கள் குறித்து ஆய்வு செய்யும் ஆய்வாளர்கள் பழங்குடி மக்களின் புற நிகழ்வுகளான நம்பிக்கைகளையும் சடங்குகளையும் வழிபாட்டு முறைமைகளையும் குறித்து தகவல்களைச் சேகரித்து ஆய்வுக்குட்படுத்தும் நிலையிலேயே உள்ளனர். ஆனால், இந்நூலாசிரியர் ஒரு பட்டத்திற்கான ஆய்வுக்காக இந்த ஆய்வையும் பதிவையும் செய்யவில்லை. பழங்குடிக் குழுக்களின் வாழ்வியலை, உரிமைகளை பாதுகாக்க வேண்டும் என்ற தீராத அவாவினால் இந்நூலை உருவாக்கியிருக்கிறார். பழங்குடிக் குழுக்கள் ஒரு சமுதாயச் சான்று பெறுவதற்குப் படுகின்ற பாடுகள் பலவற்றை வரிசைப்படுத்துகிறார். தகுதியானவர்கள் எவ்வாறெல்லாம் புறக்கணிக்கப்படுகிறார்கள், அவ்வாறு புறக்கணிப்பதற்கு அரசுசார் அதிகாரிகளின் பழங்குடிக் குழுக்கள் குறித்த பெயர், இடம், எல்லை முதலானவற்றைச் சார்ந்த புரிதல் இல்லாத காரணங்கள் எத்தகைய விளைவுகளை ஏற்படுத்துகின்றன என்பதையெல்லாம் நுட்பமான ஆய்வுகளின் மூலம் விளக்கியிருக்கிறார். இந்நூலில் நூலாசிரியர் தம்முடைய நீண்டகால ஆய்வின் மூலம் பழங்குடிக் குழுக்கள் குறித்துப் பெறப்பட்ட ஆழமான அறிவின் மூலம் இப்பழங்குடிக் குழுக்கள் எதிர்கொள்ளும் சிக்கல்களை மட்டும் குறிப்பிடாமல், அச்சிக்கல்களைப் போக்குவதற்கான தீர்வுகளையும் விரிவாகப் பதிவு செய்துள்ளார். இப்பதிவுகள் தமிழ்நாடு மட்டுமல்ல, இந்தியா முழுவதில் உள்ள பழங்குடிக் குழுக்களைப் பாதுகாப்பதற்கும் அவர்களின் உரிமைகளை மீட்டெடுப்பதற்கும் ஒரு கை விளக்காக அமையும்.

இந்நூலாசிரியர் செறிவான கள ஆய்வு நெறிமுறைகளோடு நல்நோக்கம் கொண்டு உருவாக்கப்பட்ட இந்நூல் மானிடவியலாளர், சமூகவியலாளர், சமூகப் பணியியலாளர் உள்ளிட்ட அறிவர் குழுவினரிடமும் பழங்குடிச் செயற்பாட்டாளர்களிடமும் மனித உரிமைச் செயற்பாட்டாளர் உள்ளிட்ட சமூகச் செயற்பாட்டாளர்களிடமும் நிருவாகப் பணியாளர்களிடமும் ஆட்சிப் பணித் திட்டமிடும் ஆட்சியதிகாரிகளிடமும் கிடைக்கப்பெற்றும் வாசிக்கப்பட்டும் புரிந்துகொள்ளும்போது பழங்குடிக் குழுக்களின் சிக்கல்கள் அடையாளம் இல்லாமல் போகும்.

இந்நூல் அறிவர், ஆய்வர், ஆட்சியாளர் எனும் பல்வேறு தரப்பினரின் கையில் கிடைப்பதற்கும் வாசிப்பதற்கும் பழங்குடிக் குழுக்கள் குறித்துப் புரிந்துகொள்ள முயற்சிப்பதற்கும். இந்நூல் குறித்த இந்த அறிமுகம் பயன்படும்.

●

**கட்டுரையாளர்: நாட்டார் வழக்காற்றியல் ஆய்வாளர், உதவிப் பேராசிரியர், துவாரகதாஸ் கோவர்தன்தாஸ் வைணவக் கல்லூரி, அரும்பாக்கம் சென்னை.**



# தமிழ் ஒப்பிலக்கிய வரலாற்றில் பேராசிரியர் பா.ஆனந்தகுமாரின் தடம்

முனைவர் மு.சங்கர்

ஒப்பிலக்கிய ஆய்வாளராகவும் பாரதி ஆய்வாளராகவும் மொழிபெயர்ப்பாளராகவும் புலம்பெயர்வு சார்ந்த ஆய்வாளராகவும் பன்மொழிப் புலமையாளராகவும் திகழும் பேராசிரியர் பா.ஆனந்தகுமார் தமது ஆய்வியல் நிறைஞர் பட்டத்திற்குத் தமிழ் மலையாள நாட்டுப்புறக் கதைப்பாடல் தலைவர்களையும் முனைவர் ஆய்விற்குப் பாரதியார், குமாரன் ஆசான், குரஜாட அப்பாராவு கவிதைகளில் புனைவியலையும் ஆராய்ந்தார். தற்பொழுது திண்டுக்கல், காந்தி கிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகவும் பாரதியார் ஆய்வகத்தின் ஒருங்கிணைப்பாளராகவும் உள்ளார். மேலும், நாவாவின் ஆராய்ச்சி, இந்திய ஒப்பிலக்கியம், சான்லக்ஸ், உங்கள் நூலகம் ஆகிய இதழ்களில் ஆசிரியர் குழு உறுப்பினராகவும் தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் மாநிலச் செயலாளராகவும் பணியாற்றி வருபவர். இலங்கை, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளுக்குச் சென்று தமிழ் மணத்தைப் பரப்பியவர். தமிழ், தெலுங்கு, மலையாளம், ரஷ்ய ஆகிய மொழிகளில் புலமை பெற்றவர். ஒப்பிலக்கியம், மொழிபெயர்ப்பு, திறனாய்வு ஆகிய துறைகள் தொடர்பாக நூல்களையும் கட்டுரைகளையும் வெளியிட்டவர். இத்தகு சிறப்பிற்குரிய பேராசிரியரின் ஒப்பிலக்கியப் பயணத்தை விளக்குவதாக இக்கட்டுரை அமைகின்றது.

**உங்கள் நூலகம் இதழில் பேராசிரியரின் கட்டுரை வெளியீடுகள்**

உங்கள் நூலகம் இதழ் பேராசிரியர் பா.ஆனந்தகுமாரின் ஆய்வுப் பயணத்திற்கு உறுதுணையாக இருந்தது என்றால் மிகையன்று. இவ்விதழில் இலக்கியப் பரண் : மறையும் நூல்கள்

வரிசை என்ற தலைப்பில் காத்த பெருமாள் பிள்ளை இயற்றிய திருவெண்காடரென்னும் பட்டினத்தார் அம்மானை (2006), சாந்தலிங்க சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய வைராக்கிய சதகம் மூலமும் சிதம்பர சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய உரையும் ஆகிய தலைப்புகளில் நூல் பற்றிய சிறு குறிப்புகளைத் தருகின்றார். மேலும், இவ்விதழில் பேராசிரியர் செ.போத்திரெட்டியுடன் ஒரு நேர்காணல் (2011), மு.வ.வின் இலக்கியத் திறனாய்வு நூல்கள் - ஒரு மதிப்பீடு (2012), இந்தியாவில் முற்போக்குப் பண்பாட்டு இயக்கம் - ஒரு விமர்சன மதிப்பீடு - கே.என்.பணிக்கர் (2012), மதுரையில் வரலாற்று ஆய்வு அரங்கம் (2013), டி.செல்வராஜின் தோல் நாவல் - வரலாறும் எதார்த்தமும் (2013), இரு நகரங்களின் கதை சொல்லி - சுப்ரபாரதிமணியன் (2014), பக்தினும் தொல்காப்பியரும் (2014), அண்மைக் காலத் தமிழ் நாவல்களின் போக்குகள் - சில மதிப்பீடுகள் (2015), தற்கால மலையாளக் கவிதையில் கண்ணகி தொன்மம் (2015), புதிய தாராளமயமும் இந்துத்துவாவும் (2015), உலகத் தாய்மொழி நாள் (2016), புலம்பெயர்ந்தோர் சிறுகதைகள் (2016), சங்கக் கவிதைகள் - காளிதாசன் காவியங்கள் - ஊடிழை இலக்கியத் தன்மை (2017), கூட்டாட்சித் தத்துவத்தின் மதிப்பறியாத மோடி அரசாங்கம் (2017), மார்க்சியத் திறனாய்வும் தமிழ் இலக்கியமும் (2018), மணிமேகலையில் அளவையியல் (2019), டி.செல்வராஜ் - சோஷலிஸ எதார்த்தவாதத்தின் வெற்றி முகம் (2020), மார்க்சிய அறிவுச் சுடர் அணைந்தது (2021), இந்திய விடுதலைப் போராட்ட இயக்கமும் ப. ஜீவானந்தமும் (2023), தமிழில், தேசிய இலக்கியங்கள் - ஒரு புதிய வரைசட்டகத்தை நோக்கி (2023), தமிழ் இலக்கியமும் மலையாள இலக்கிய உருவாக்கமும் (2024), மணிமேகலை காப்பியத்தின் எடுத்துரைப்பின் அரசியல் (2024) முதலிய கட்டுரைகளை வெளியிட்டுள்ளார். இக்கட்டுரைகள் பலதரப்பட்டன. இவற்றுள் பக்தினும் தொல்காப்பியரும் (2014), சங்கக் கவிதைகள் - காளிதாசன் காவியங்கள் - ஊடிழை இலக்கியத் தன்மை (2017), மார்க்சியத் திறனாய்வும் தமிழ் இலக்கியமும் (2018), மணிமேகலையில் அளவைவியல் (2019), தமிழ் இலக்கியமும் மலையாள இலக்கிய உருவாக்கமும் (2024), மணிமேகலை காப்பியத்தின் எடுத்துரைப்பின் அரசியல் (2024) உள்ளிட்ட ஆய்வுக் கட்டுரைகள் ஒப்பிலக்கியத்தோடு தொடர்புடையனவாகும். இக்கட்டுரைகளின் உள்ளடக்கக் கருத்தியல்கள் வழி அவரது ஒப்பிலக்கியச் சிந்தனைகளைக் காணலாம்.

இலக்கியத்தை இயக்கங்களோடும் அணுகுமுறைகளோடும் ஒப்பிடுதலைப் பேராசிரியரிடம் காணலாம். இவர் உங்கள் நூலகம் இதழில் ஜனவரி - 2008 இல் 'பெண்ணிய வெளியும் இனவரைவியல் எழுத்தும் (சு.தமிழ்ச்செல்வியின் 'மாணிக்கம்' நாவலை முன்வைத்துச் சில குறிப்புகள்)' என்ற தலைப்பில் ஒப்பிட்டு ஆய்வுக் கட்டுரையை வெளியிட்டுள்ளார். இதில் சு.தமிழ்ச்செல்வியின் மாணிக்கம் புதினத்தில் இடம்பெற்றுள்ள பெண் வெளியை இனவரைவியற் எழுத்துக்களோடு தொடர்புபடுத்தி விளக்கியுள்ளார். சுகிர்தராணியின் கவிதைகளில் பெண் உடலரசியல் பற்றியும் கட்டுரை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

நாட்டார் வழிபாட்டு மரபில் குலக்குறி வழிபாடு இன்றியமையாத மற்றும் தவிர்க்கவியலாத ஒன்று. இதைச் சங்க இலக்கியத்தில் பொருத்திப் பார்த்து ஆராய்ந்து 'சங்க இலக்கியத்தில் குலக்குறிப் பண்பாட்டு மரபு' (2011) எனும் தலைப்பில் கட்டுரை ஒன்றை உங்கள் நூலகம் இதழில் வெளியிட்டுள்ளார் பேராசிரியர் பா.ஆனந்தகுமார். இக்கட்டுரையில், கடையெழு வள்ளல்கள் பொதுவுடைமை சார்ந்த இனக்குழு வாழ்வின் பிரதிநிதிகளாக இருந்துள்ளனர் என்பதையும் பாரி முல்லைக்குத் தேர் தந்ததும் பேகன் மயிலுக்குப் போர்வை தந்ததும் அவர்களது கொடைச் செயல்களைக் காட்டுவனவாக இருந்தாலும் இவை குலக்குறி அடையாளத்தினைக் காக்க வேண்டும் என்ற முனைப்பினால் ஏற்பட்டதாகும் என்பதையும் காவல் மரங்கள் பண்டைய காலத்தில் புனிதமாகப் பார்க்கப்பட்டன என்பதையும் மூவேந்தர்களின் அடையாளப் பூக்களும் கொடிகளும் இனக்குழு வாழ்வின் குலக்குறித் தன்மையில் இருந்து வளர்ந்த அடையாளச் சின்னங்கள் என்பதையும் சான்றுகள் வழி சுட்டிக்காட்டியுள்ளார் (உங்கள் நூலகம், ஜூன், 2011).

பக்தினும் தொல்காப்பியரும் எனும் கட்டுரையில் ருஷ்ய உருவவியலாளரான மிகையில் பக்தினையும் தமிழ் இலக்கணியான தொல்காப்பியரையும் உரையாடலியம் கோட்பாட்டு அடிப்படையில் ஒப்பு நோக்கியுள்ளார். பக்தினின் உரையாடலியம் (Dialogism) சசூருக்கும் பக்தினுக்கும் இடையேயுள்ள வேறுபாடு (மொழிக் கிடங்கு x பேச்சு வழக்கு – சசூர், கேட்போன் x கூறுவோன் - பக்தின்), உரையாடலில் உள்ள அதிகார மையம், பேச்சின் வகைகள், பல்குரல் தன்மை (Polyphony) ஆகியவற்றைப் பக்தினை முன்னிறுத்தி விளக்கியுள்ளார். அதன் பிறகு பக்தினின் பார்வையில் தொல்காப்பியம் பற்றி ஒப்பிட்டுள்ளார். தொல்காப்பியர் கிளவியாக்கத்தில் கூறும் செப்பு, வினா பற்றிய நூற்பாக்கள் பக்தினின் உரையாடலியத்தோடு

தொடர்புடையனவாக உள்ளன என்பதைச் சான்றுகளுடன் குறிப்பிட்டுள்ளார். மேலும், வணிக மரபு (நூற்.518) பற்றிக் கூறும்போது, பொருளின் சமூகத் தன்மையைச் சுட்டிக்காட்டியுள்ளார். தொடர்ந்து பக்தினின் உரையாடலியம் பற்றிய கருத்துரு தொல்காப்பியக் கூற்றுக் கோட்பாட்டில் உள்ளமையை விளக்கியுள்ளார். தொல்காப்பியர் மொழியில் நிலவும் சமூகப் படிநிலை பற்றியும் அதிகார விளையாட்டு பற்றியும் குறிப்பிட்டுள்ளதைக் காட்டியுள்ளார். தொல்காப்பியத்தில் வரும் களவு, கற்பு ஆகியவற்றில் கூற்று நிகழ்த்துவோர், கேட்போர் பற்றிய நூற்பாக்கள் பக்தினின் கேட்போர் - கூறுவோர் ஆகியவற்றோடு தொடர்புடையனவாக இருக்கும் நிலையை நிறுவியுள்ளார் (உங்கள் நூலகம், செப்டம்பர், 2014).

சங்கக் கவிதைகள் - காளிதாசன் காவியங்கள் - ஊடிழை இலக்கியத் தன்மை என்ற கட்டுரை உங்கள் நூலகம் இதழில் 2017 இல் வெளிவந்துள்ளது. இக்கட்டுரையில், பேராசிரியரின் ஒப்பியல் சிந்தனை வெளிப்படுவதைக் காணலாம். சுலோவாக்கியா நாட்டு ஒப்பிலக்கிய அறிஞரான மரியான் காலிக் பேசிய ஊடிழை இலக்கியத் தன்மை (Inter Literary) அடிப்படையில் காளிதாசரின் காவியங்களில் காணப்பெறும் சங்க இலக்கியத்தின் ஊடிழை தன்மையை ஆய்ந்துள்ளார். ரெனிவெல்லக், டயோனிஸ் ட்யூரிஸின், பியாஜெட் ஆகியோர் தரும் விளக்கங்களைத் தம் கட்டுரைக்கு உறுதுணையாகக் கொண்டு, சங்கக் கவிதைகளையும் காளிதாசரின் படைப்புகளையும் ஒப்பிட்டுக் காண்கின்றார் பேராசிரியர் பா.ஆனந்தகுமார். சங்க நூல்களில் இடம்பெற்றுள்ள உவமை, படிமம் முதலான புனைவுக் கூறுகள் காளிதாசரின் படைப்புகளில் காணப்பெறுகின்ற தன்மையைச் சான்றுகள் வழி விளக்கியுள்ளார். காளிதாசரின் ரகுவம்சம், ருதுசம்காரம், மேக சந்தேசம் உள்ளிட்ட படைப்புகளில் வரும் உவமை, உருவகம், காதலர்கள் சந்திக்கும் அகவெளி மற்றும் புறவெளி, கருத்துப் பொருள் மற்றும் காட்சிப் பொருள் ஆகியவை சங்கப் பாடல்களோடு ஒன்றுபட்டுள்ள நிலையைச் சுட்டிக்காட்டியுள்ளார் (உங்கள் நூலகம், மே, 2017).

பேராசிரியர் பா.ஆனந்தகுமார் அவர்கள் மார்க்சியச் சிந்தனையில் ஆர்வம் கொண்டவர். மார்க்சிய இயக்கத்தோடு இயங்குபவர். எனவே, அவரது கட்டுரைகளில் மார்க்சியக் கருத்துருவாக்கம் இடம்பெற்றுள்ளதைக் காணலாம். குறிப்பாக, மார்க்சியத் திறனாய்வும் தமிழ் இலக்கியமும் என்ற கட்டுரையைச் சுட்டிக் காட்டலாம். இலக்கியத்தை இயக்கங்களோடு ஒப்பிடுதலும் ஒப்பிலக்கியத்தின் பாற்படும் என்பர். மனித சமுதாயத்தின் இயங்கியலை விளக்குவது மார்க்சியம் ஆகும். வர்க்க உறவுகள், வர்க்க முரண்கள், வரலாற்றுப் பொருள்முதல்வாதம், இயக்கவியல் பொருள்முதல்வாதம் முதலான சிந்தனைகள் மார்க்சியக் கோட்பாட்டில் இன்றியமையாதன. மார்க்சியத் தத்துவத்தினைக் காரல் மார்க்சும் ஏங்கெல்சும் தோற்றுவித்தனர். இவர்களைத் தொடர்ந்து, லெனின் மார்க்சியத் தத்துவத்தினை உலகறியச் செய்து, ருஷ்யாவில் மாபெரும் புரட்சியை ஏற்படுத்தினார். தமிழ்ச் சூழலில் சோஷலிச எதார்த்தவாதத்தை மார்க்சியத்தின் படைப்பாக - இலக்கிய முறையாக முன் வைத்தவர்களுள் தொ.மு.சி.ரகுநாதனும் (பஞ்சும் பசியும்), டி.செல்வராஜூம் (மலரும் சருகும், தேநீர்) ஆவர். இலக்கியம் பேசும் உருவம், உள்ளடக்கம் என்பனவற்றில் உள்ளடக்கத்திற்கு முதன்மை தரும் மார்க்சியவாதி நா.வா. ஆவார். தமிழ்ச் சூழலில் பாரதியார் சோஷலிசத்தை (பொதுவுடைமை) ஏற்றுக் கொண்டார். தமது இந்தியா இதழில் லெனினின் கொள்கையை இடம்பெறச் செய்தார். ப.ஜீவானந்தம், ஆர்.கே.கண்ணன், தொ.மு.சி. ஆகியோர் பாரதியாரை மையப்படுத்தி மார்க்சியத்தை வேரூன்றச் செய்தனர். இவர்களைத் தொடர்ந்து பேரா.ஆ.சிவசுப்பிரமணியன், கா.சுப்பிரமணியம், பேரா.தி.சு.நடராசன், அ.மார்க்ஸ், தோத்தாத்ரி, ந.முத்துமோகன், வெ.கிருஷ்ண மூர்த்தி முதலானோர் மார்க்சியத்தை தமிழகத்தில் வளர்த்தெடுத்தனர். ஈழத்தில் க.கைலாசபதியும் கா.சிவத்தம்பியும் கல்விப் புலம் சார்ந்து மார்க்சியத்தை அணுகினர். இவ்வாறாகத் தமிழ்ச் சூழலில் மார்க்சியத் திறனாய்வு தோன்றி வளர்ந்த சூழலை விளக்கியுள்ளார் (உங்கள் நூலகம், மார்ச் மற்றும் எப்ரல், 2018).

இலக்கியத்தைப் பிற துறைகளோடு ஒப்பிடுதல் ஒப்பிலக்கிய ஆய்வில் இன்றியமையாத ஒன்று. அந்த வகையில் பேரா.பா.ஆனந்தகுமார் அவர்களின் மணிமேகலையில் அளவையியல் என்ற கட்டுரை குறிப்பிடத்தக்கது. இதில் பௌத்த சமயத்தின் அளவைவாதத்தை மணிமேகலை காப்பியத்தோடு ஒப்பிட்டு ஆராய்ந்துள்ளார். அளவையியல் என்பது சரியானவற்றைச் சரியில்லாதனவற்றிலிருந்து வேறுபடுத்திக் காட்டுவதற்கான காரண – காரிய முறைகளையும் சித்தாந்தங்களையும் தன்னுள் கொண்டு உள்ளது. எனவே, உண்மை மற்றும் தவறு குறித்த அடிப்படைத் தத்துவமாக இருக்கின்றது என அளவையியலை விளக்குவார் பேராசிரியர் பா.ஆனந்தகுமார். இந்தியத் தத்துவ மரபில்

உலகாயதம், பௌத்தம், சாங்கியம், நையாமிகம், வைசேடிகம், மீமாம்சம் ஆகிய அறுசமயத்தவர் அளவையியலைப் பயன்படுத்தியுள்ள காப்பியமாக மணிமேகலை திகழ்கின்றது. குறிப்பாக, சமயக் கணக்கர் தம் திறம் கேட்ட காதையில் வெளிப்படுவதைக் காணலாம் என்று சுட்டிக்காட்டியுள்ளார். மணிமேகலை காப்பியம் மகாயான பௌத்தம் சார்ந்த நூல் அன்று என்பதை இக்கட்டுரையின் முடிபாக ஆசிரியர் நிறுவியுள்ளார் (உங்கள் நூலகம், பிப்ரவரி, 2019).

எடுத்துரைப்பியல் திறனாய்வு இன்று வளர்ந்து வரும் திறனாய்வு வகைகளுள் ஒன்று. இதில் க.பஞ்சாங்கம், கே.பழனிவேலு, ப.மருதநாயகம், த.சரவணன், கி.சிவா ஆகியோர் சுட்டிக்காட்டத் தகுந்தவர்கள். இவ்வரிசையில் பேரா.பா.ஆனந்தகுமார் அவர்களுக்கு முக்கிய இடமுண்டு. இவரது முல்லைப்பாட்டின் எடுத்துரைப்பியல் (சான்லக்ஸ், 2016), மணிமேகலைக் காப்பியத்தில் எடுத்துரைப்பின் அரசியல் (உங்கள் நூலகம், ஏப்ரல், 2024) ஆகிய இரு கட்டுரைகளும் குறிப்பிடத்தக்கன. எடுத்துரைப்பியலில் நிகழ்வுகள், கதைமாந்தர்கள், பின்னணி ஆகிய முக்கூறுகள் இன்றியமையாதவை. இக்கூறுகள் மணிமேகலையில் இடம்பெறும் பாங்கினை இக்கட்டுரையில் ஆராய்ந்துள்ளார்.

**நூல்கள் வழிப் பேரா.பா.ஆனந்தகுமாரின் ஒப்பியல் திறன்**

பேராசிரியர் பா.ஆனந்தகுமாரின் ஒப்பியல் திறனுக்கு அவரது பாரதியார் - ஆசான் - அப்பாராவு கவிதைகளில் புனைவியல் (2000), இந்திய ஒப்பிலக்கியம் சூசன் பாசுனெட்டை முன்வைத்து (2003), இலக்கியமும் பண்பாட்டு மரபுகளும் (2007), தமிழ் ஆராய்ச்சி வரலாற்றில் மார்க்சியப் பேரொளி (2012), தனிநாயக அடிகளாரின் ஒப்பிலக்கியச் சிந்தனைகள் (2021), தமிழ்ச் செவ்விலக்கியங்கள் மீள் வாசிப்பு (2021) ஆகிய நூற்கள் குறிப்பிடத்தக்கன.

பாரதியார் - ஆசான் - அப்பாராவு கவிதைகளில் புனைவியல் என்ற நூல் (2000) பேராசிரியர் பா.ஆனந்தகுமாரின் முனைவர் பட்ட ஆய்வேட்டின் நூல் வடிவமாகும்;. இந்நூலை முத்துமீனா பதிப்பகம் வெளியிட்டுள்ளது. இந்நூலுக்குப் பேரா.தி.சு.நடராசன் முன்னுரையும் பேரா.கா. செல்லப்பன் அணிந்துரையும் வழங்கியுள்ளனர் என்பது இந்நூலின் சிறப்பிற்குச் சான்று. இந்நூல் பாரதி, ஆசான், அப்பாராவு: வாழ்வும் இலக்கியமும், புனைவியல்: கொள்கையும் விளக்கமும், இந்தியச் சூழலில் பாரதி, ஆசான், அப்பாராவு வரவு, புதுச்செவ்வியல் நெறி எதிர்ப்பும் புதிய அழகியல் மதிப்புகளும், மனித மையவாதம், தேசிய வாதம், புனைவியல் உணர்வு நலன், மேலைப் புனைவியலும் தென்னிந்தியப் புனைவியலும் : பொதுத் தன்மைகளும் சில தனித் தன்மைகளும் உள்ளிட்ட இயல்களைக் கொண்டது. இந்நூல் இவரது ஒப்பிலக்கியச் சிந்தனையை வெளிப்படுத்துகின்றது. பாரதியின் கவிதைகளில் தேசியமும் ஆசானின் கவிதைகளில் தேசிய உணர்வும் அப்பாராவு கவிதைகளில் தேச பக்தியும் தென்படுகின்றன என்பதைச் சான்றுகள் வழி ஒப்பு நோக்கியுள்ளார். ஆசிரியரே நூலின் என்னுரைப் பகுதியில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

'பல்கலைக்கழகத்தில் நிகழ்த்தப்படும் ஆய்வுகள் அது சார்ந்த அறிவுத்துறைக்கும் சமூகத்திற்கும் ஏதேனும் ஒரு வகையில் பயன்படுதல் வேண்டும். இந்த ஆய்வேடு இந்திய இலக்கியம் என்ற கருத்தாக்கத்திற்கும் மேலைப் புனைவியலில் இருந்து சற்று வேறுபட்ட தனித்தன்மைகளை உடைய தென்னிந்தியப் புனைவியல் என்கிற இலக்கியக் கொள்கைக்கும் ஆதாரமாக நிற்கிறது. ஒப்பிலக்கிய ஆய்வு நூல் என்கிற எல்லையைத் தாண்டி இருபதாம் நூற்றாண்டுத் தென்னிந்திய சமூக, அரசியல், பண்பாட்டு, கலை இலக்கிய வரலாற்றுப் பெட்டகமாய் உருவாகியிருக்கிறது.' இதிலிருந்து பேராசிரியரின் தென்னிந்தியப் புனைவியலை உருவாக்கும் எண்ணத்தை ஒருவாறு ஊகிக்க இடமுள்ளது.

பாரதியின் குருகோவிந்தர், வ.வே.சு. ஐயரின் குருகோவிந்தசிங், வாஞ்சிநாதனின் குருகோவிந்தர் வணக்கம் ஆகிய பகுதிகளில் பேராசிரியரின் ஒப்பியல் பார்வை வெளிப்படுவதைக் காணலாம். ஹாலியின் வால்நட்சத்திரத்தைப் பற்றி பாரதியாரும் தெலுங்குக் கவிஞரான குரஜாட அப்பாராவும் சித்திரித்துள்ள பாங்கினை இரு மகாகவிகளின் பார்வையில் 'ஹாலி வால்நட்சத்திரம்' என்ற கட்டுரையில் ஆராய்ந்துள்ளார். மேலும், காதலையும் இயற்கையையும் மனிதனையும் மையப்படுத்திப் பாடிய புனைவியல் கவிஞர்களான பாரதிதாசனையும் தெலுங்குக் கவிஞரான கிருஷ்ண சாஸ்திரியையும் இயற்கை அடிப்படையில் ஒப்பிட்டு, பாரதிதாசன் - கிருஷ்ண சாஸ்திரி கவிதைகளில் இயற்கை என்ற கட்டுரையை எழுதியுள்ளார். இவை தவிர, மொழிபெயர்ப்புக்களினூடே தமிழ் - மலையாள இலக்கியப் பரிமாற்றங்கள், குறளும் குஞ்னுண்ணி கவிதைகளும், தமிழ் - மலையாளக் காப்பியங்களில் விழாவும் வானவர் வருகையும், பாரதிதாசன் குமாரன் ஆசான் கவிதைகளில் வருண

தரும எதிர்ப்பு, நாமக்கல்லார், வள்ளத்தோள் கவிதைகளில் காந்தியம், தோப்பில் முஹம்மது மீரான், வைக்கம் முஹம்மது பஷீர் நாவல்கள் ஆகிய கட்டுரைகள் பேரா.பா.ஆனந்தகுமாரின் மலையாளப் புலமையையும் ஒப்பிலக்கியப் புலமையையும் பறைசாற்றுகின்றன.

பேராசிரியர் பா.ஆனந்தகுமாரின் ஒப்பியல் பார்வைக்கு பிறிதொரு சான்றாக அமையும் நூல்தான் இலக்கியமும் பண்பாட்டு மரபுகளும் (2004). இந்நூலில் இடம்பெற்றுள்ள கேரளத்தில் சங்க இலக்கிய மரபு என்ற கட்டுரை, சங்க இலக்கியத்தில் காணப்பட்ட சமூக மரபுகளின் எச்சங்கள் இன்றும் கேரள நாட்டுப்புற இலக்கியத்திலும் வாழ்க்கையிலும் நிலவும் நிலையை வீரர் வழிபாடு, பாணர் மரபு, வேலன் மரபு ஆகிய தலைப்புகளில் ஆராய்ந்துள்ளது. இஃது அவரின் ஒப்பியல் நோக்குக்கு நல்விருந்தாக அமைந்துள்ளது.

பேராசிரியரின் தமிழ்ச் செவ்விலக்கியங்கள் மீள்வாசிப்பு என்ற நூல் நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் 2021இல் வெளியிட்டுள்ளது. இந்நூலில் அமைந்துள்ள ஒப்பியல் சார்ந்த ஆய்வுக் கட்டுரைகள் உங்கள் நூலகம் இதழிலும் சான்லக்ஸ் இதழிலும் வெளிவந்தவை என்பது குறிப்பிடத்தக்கது. இந்நூல் உருவாக்கத்தின் முக்கியத்துவத்தைப் பேரா.பா.ஆனந்தகுமார் நூலின் முன்னுரையிலேயே சுட்டிக்காட்டியுள்ளார்.

'இந்நூலில் இடம்பெறும் ஒன்பது கட்டுரைகளும் தொல்காப்பியம், சங்கக் கவிதைகள், மணிமேகலை ஆகியவற்றைப் புதிய கோட்பாடுகளின் வழி மறுவாசிப்புச் செய்கின்றன. இந்நூலில் இடம்பெற்றுள்ள கட்டுரைகள் யாவும் பல்வேறு தேசிய – சர்வதேசியக் கருத்தரங்குகளில் வாசிக்கப்பெற்றுப் பின்னர் உங்கள் நூலகம், சமூக விஞ்ஞானம், தாமரை, புதிய ஆராய்ச்சி, சான்லக்ஸ் ஆய்விதழ் ஆகிய இதழ்களில் வெளியிடப்பட்டன. பரந்த வாசகத் தளத்தை நோக்கிக் கொண்டு செல்வதற்கு இப்போது இவை தொகுக்கப்பட்டு நூலாக்கம் செய்யப்பட்டுள்ளன' (பா.ஆனந்தகுமார், 2021:2-3).

தனிநாயக அடிகளாரின் ஒப்பிலக்கியச் சிந்தனைகள் (2021) எனும் தலைப்பில் ஒரு சிறு நூலை நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் வெளியிட்டுள்ளது. இந்நூலில் பேரா.பா.ஆனந்தகுமார் தனிநாயக அடிகளாரின் வாழ்க்கையையும் தமிழ்ப் பணிகளையும் சுருக்கமாகக் குறிப்பிட்டுள்ளார். அதன் பிறகு அடிகளாரின் ஒப்பிலக்கியப் பணியை விரிவாக எடுத்துரைத்துள்ளார். தமிழ் கல்சர் - இதழ், தமிழ்த் தூது, நில அமைப்பும் தமிழ்க் கவிதையும், தமிழ்க் கவிதையில் இயற்கை – செவ்வியல் காலம், தமிழர் பண்பாடும் அதன் சிறப்பியல்புகளும், பழந்தமிழ் இலக்கியங்களில் கல்விச் சிந்தனைகள் ஆகிய நூல்களில் அவரது ஒப்பிலக்கியச் சிந்தனையைக் காணலாம் என்பது பேராசிரியரின் கருத்து.

### ஒப்பிலக்கியத்தில் இருந்து மொழிபெயர்ப்பியலை நோக்கிய பயணம்

இன்றைய தமிழியல் ஆய்வு மொழியியல், வரலாறு, மானிடவியல், உளவியல், சமூகவியல் ஆகிய துறைகளோடு பொருத்திப் பார்க்கும் நோக்கில் பயணம் செய்வதைக் காணலாம். இவற்றுள் மொழிபெயர்ப்பும் அடங்கும். அதனால்தான் சூசன்பாசுனெட், 'ஒப்பிலக்கியத்தின் எதிர்காலமே மொழிபெயர்ப்பியல் ஆய்வுகள் தாம்' என்கின்றார். இந்த அடிப்படையில் பார்த்தோமேயானால் பேராசிரியர் பா.ஆனந்தகுமார் மலையாள மொழியில் புலமையுடையவராகத் திகழ்கின்றார். ஒப்பிலக்கிய ஆய்வைப் பொறுத்தவரையில் இருமொழிப் புலமை மிக அவசியம் என்பர். இருமொழிப் புலமை இன்றேல் ஒப்பிலக்கியப் பணி நிறைவுறாது போகும். இக்குறையைப் போக்குவதுதான் மொழிபெயர்ப்பு. எனவேதான், பேராசிரியர் மொழிபெயர்ப்புப் பணியைத் தொடர்ந்து செய்து வருகின்றார். இவரது இயந்திரம் மொழிபெயர்ப்புப் புதினம் (சாகித்திய அகாடமி விருது - 2008), மலையாளக் கவிஞர் சங்ஙம்புழவின் வாழைக் குலை (2012), குமாரனாசானின் வீழ்ந்த மலர் - கவிதை (2022), குஞ்ஞுண்ணிக் கவிதைகள் (2023), கடற்கரையில் - மலையாளச் சிறுகதைகள் ஆகியவை குறிப்பிடத்தக்கவை.

### பாரதி சார்ந்த ஆய்வுகளில் ஒப்பியல் பார்வை

பேராசிரியர் பா.ஆனந்தகுமார் பாரதியியல் சார்ந்த ஆய்வுகளில் தொடர்ந்து ஈடுபட்டு வருபவர். காந்தி கிராம நிகர்நிலைப் பல்கலைக்கழகத்தில் பாரதியார் ஆய்வகம் செயல்பட உறுதுணையாக நின்றவர். பேராசிரியர் அ.பிச்சை ஒருங்கிணைப்பாளராக இருந்து செயல்பட்ட காலத்தில் அவருக்குத் துணை நின்றவர். கருத்தரங்கம், சிறப்புப் பொழிவு ஆகியன நடைபெற வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்தவர். பாரதியின் பாஞ்சாலி சபதம் இந்திய இலக்கியத்தில் மகாபாரதக் கிளைக்கதைகள் (2002), பாரதியும் குழந்தை இலக்கியமும் (2002), ஒப்பியல் நோக்கில் பாரதியும் பக்தி இலக்கியமும் (2004), இலக்கியக் கோட்பாடுகள் நோக்கில் பாரதி படைப்புகள் (2013) ஆகிய நூல்களின் பதிப்பாசிரியர்களுள் ஒருவராக இருந்தவர். இவையெல்லாம் ஒப்பியல்

ஆய்வுகளோடு தொடர்புடையன. பேராசிரியர் தமது முனைவர் பட்டத்திற்குப் பாரதியாரை எடுத்துள்ளார் என்பதும் இவண் நினைத்தற்குரியது.

2020இல் பாரதி ஆய்வாளரான இளசை மணியன் இறந்தபோழ்து 'பாரதி ஆய்வுச் சுடர் அணைந்தது' என்ற தலைப்பில் எழுதிய கட்டுரை உங்கள் நூலகம் இதழில் வெளிவந்துள்ளது குறிப்பிடத்தக்கது. தேசம் - தேசியம் குறித்த சொல்லாடல்களைப் பேசும்போழ்து பாரதியாரைத் தொடாமல் பேராசிரியர் பேசியதே இல்லை எனலாம். 'பாரதியார் கவிதைகளில் தேசியம் - ஒரு பின்னைக் காலனிய வாசிப்பு' (2008), பாரதியாரும் இந்திய விடுதலை இயக்கமும் (2021), 'தமிழில் தேசிய இலக்கியங்கள் புதிய வரைசட்டகத்தை நோக்கி...' (2023) ஆகிய கட்டுரைகளிலும் பாரதியும் இந்தியக் கவிஞர்களும் (2024) என்ற நூலிலும் பார்க்கலாம்.

காட்சிக்கு எளியவராகவும் பழகுவதற்கு அன்பானவராகவும் பொதுவுடைமை வாதியாகவும் திகழும் பேராசிரியர் பா.ஆனந்தகுமார் ஒப்பிலக்கிய ஆய்வில் காத்திரமான பங்களிப்பினைச் செய்து கொண்டு வருகின்றார். இவரது கட்டுரைகளும் நூல்களும் ஒப்பிலக்கியம் என்ற மையப்புள்ளியை நோக்கியே பயணித்துள்ளன என்பதை உணர்ந்து கொள்ளலாம். புதிய கோட்பாடுகளை மாணவர்களுக்கு அறிமுகம் செய்து, அதில் ஆய்வுகள் மேற்கொள்ளத் தூண்டுகோலாகத் திகழ்கின்றார். குறிப்பாக, மார்க்சியம், பெண்ணியம், புனைவியல், பௌத்தத் தத்துவம், எடுத்துரைப்பியல், பின்னைக் காலனியம் முதலான கோட்பாடுகளைத் தமிழ் இலக்கியத்தோடு ஒப்பிட்டுப் பார்த்து ஒப்பிலக்கியக் கல்விக்கு விளக்கேற்றியுள்ளார் எனலாம்.

**துணை நின்ற நூல்கள்**


1. ஆனந்தகுமார், பா. பாரதியார் - ஆசான் - அப்பாராவு கவிதைகளில் புனைவியல், முத்துமீனா பதிப்பகம், மதுரை, 2000 (முதற்பதிப்பு).
2. ஆனந்தகுமார், பா.இந்திய ஒப்பிலக்கியம் சூசன்பாசுனெட்டை முன்வைத்து, மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, 2003 (முதற்பதிப்பு).
3. ஆனந்தகுமார், பா. இலக்கியமும் பண்பாட்டு மரபுகளும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை, 2007 (மூன்றாம் அச்சு).
4. ஆனந்தகுமார், பா. தமிழ் ஆராய்ச்சி வரலாற்றில் மார்க்சியப் பேரொளி, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை, 2012 (முதற்பதிப்பு).
5. ஆனந்தகுமார், பா. வாழைக்குலை (மொ.பெ), பாவை பப்ளிகேஷன்ஸ், சென்னை, 2012 (முதற்பதிப்பு).
6. ஆனந்தகுமார், பா. தமிழ்ச் செவ்விலக்கியங்கள் மீள்வாசிப்பு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை, 2021 (முதற்பதிப்பு).
7. ஆனந்தகுமார், பா. பாரதியும் இந்தியக் கவிஞர்களும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை, 2024 (முதற்பதிப்பு).
8. சுந்தரமூர்த்தி, இ. (ப.ஆ) பாரதியார் கவிதைகள், பாவை பப்ளிகேஷன்ஸ், சென்னை, 2007 (எட்டாம் பதிப்பு).
9. பிச்சை, அ மற்றும் ஆனந்தகுமார், பா. (தொ.ஆ), பாரதியின் பாஞ்சாலி சபதம் இந்திய இலக்கியத்தில் மகாபாரதக் கிளைக்கதைகள் (கருத்தரங்கக் கட்டுரைகள்), பாரதியார் ஆய்வகம், தமிழ், இந்திய மொழிகள் மற்றும் கலைகள் புலம், கிராமியப் பல்கலைக்கழகம், காந்திகிராமம், 2002 (முதற்பதிப்பு).
10. பிச்சை, அ. மற்றும் ஆனந்தகுமார், பா. (தொ.ஆ), பாரதியும் குழந்தை இலக்கியமும் (கருத்தரங்கக் கட்டுரைகள்), பாரதியார் ஆய்வகம், தமிழ், இந்திய மொழிகள் மற்றும் கலைகள் புலம், கிராமியப் பல்கலைக்கழகம், காந்திகிராமம், 2002 (முதற்பதிப்பு).
11. பிச்சை, அ மற்றும் ஆனந்தகுமார், பா. (தொ.ஆ), ஒப்பியல் நோக்கில் பாரதியும் பக்தி இலக்கியமும் (கருத்தரங்கக் கட்டுரைகள்), பாரதியார் ஆய்வகம் - பதிப்புத்துறை, கிராமியப் பல்கலைக்கழகம், காந்திகிராமம், 2004 (முதற்பதிப்பு).
12. பிச்சை, அ மற்றும் ஆனந்தகுமார், பா. (ப.ஆ), இலக்கியக் கோட்பாடுகள் நோக்கில் பாரதி படைப்புக்கள், பாவை பப்ளிகேஷன்ஸ், சென்னை, 2013 (முதற்பதிப்பு).
13. முத்துமோகன், ந. (மற்றும் பிறர்), பின்னைக் காலனியம், தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம், குமரி மாவட்டம், 2007 (முதற்பதிப்பு).


●

**கட்டுரையாளர்: உதவிப் பேராசிரியர், தமிழியல் துறை, ஸ்ரீ காளீஸ்வரி கல்லூரி (தன்னாட்சி), சிவகாசி.**

திறனாய்வு




# புதுக்கோட்டை மண் மக்கள் வரலாறு

**சி.பாலையா**

“உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ?” என்பதும் ‘கடின உழைப்பிற்கு ஈடு இணை ஏதுமில்லை’ என்பதும் நம் வழக்கத்தில் உள்ள சொல்லாடல்கள். இந்த இரு பொருள் பொதிந்த சொல்லாடல்களுக்கும் மிகச் சிறந்த எடுத்துக்காட்டு, எழுத்தாளர் அண்டனூர் சுரா தற்பொழுது எழுதி வெளியிட்டுள்ள புதுக்கோட்டை மாவட்டத்தின், 'மண் மக்கள் வரலாறு’ பற்றி பல்வேறு வரலாற்றாய்வுச் செய்திகள் அடங்கிய அரிய நூலாகும்.

புதுக்கோட்டை பற்றி பல்வேறு சமயங்களில் கடந்த காலங்களில் பல படைப்பாளிகள் நூல்கள் மற்றும் கட்டுரைகள் எழுதி வெளியிட்டிருந்தாலும், இந்நூல் தனித்துவமான ஒரு பெரும் முயற்சியே ஆகும். பல பரிசுகளும் பாராட்டுக்களும் வெகுமதிகளும் பெற்றுக் கொண்டாடப்பெற்று வரும் நல்ல புதினங்களையும், தற்காலச் சமூகப் போக்குகளைப் படம்பிடித்துக் காட்டும் நூற்றுக்கணக்கான சிறுகதைகளையும் படைத்துவரும் இந்நூலாசிரியர், தாம் பிறந்த மண்ணான புதுக்கோட்டை பற்றி, இவ்வளவு விரிவான ஒரு வரலாற்று நூலை ‘புதுக்கோட்டையின் மீது நான் கொண்டிருக்கும் அன்பே இந்நூல்’ என்ற புளகாங்கிதத்தோடு வெளியிட்டுள்ளார். இன்னும் புதுக்கோட்டை பற்றி எழுத நிறைய உள்ளது என்றும் கோடிட்டுக் காட்டி புதுக்கோட்டையின் தனித்துவ வரலாற்றை வளப்படுத்தி, செழுமைப்படுத்துகிறார்.

ஒரு ஆசிரியருக்கு மிகப்பரந்த சமூகப் பார்வை வேண்டும் என்பதை, அண்டனூர் குக்கிராமத்தில் ஒரு மிகச் சாதாரணக் குடும்பத்தில் பிறந்து வளர்ந்த சு.இராஜமாணிக்கம் என்ற எளிய, அமைதியான இளைஞர், தமது எழுத்துப் பேராற்றலால் தமிழ் படைப்புலகில் மிகத்திடமாக மெய்ப்பித்து வருகிறார். தமது கற்பனைத் திறனை எதார்த்த சமூக வாழ்வோடு பொருத்திப் புதினங்களும், சிறு கதைகளும், தொடர்கதைகளும் எழுதுவது என்பது ஒரு கூர்மையான படைப்பாற்றல் கோணம். ஆனால், இன்றையப் பொதுப் பார்வைக்கான ஆய்வு நோக்கிலமைந்த கட்டுரைகளையும் தம்மால் படைக்க முடியும் என்பதை இந்நூலின் மூலம் சுரா நூற்றுக்குநூறு மெய்ப்பித்துள்ளார் என்றே மதிப்பிட வேண்டும். இதுபோன்று, சில மாத இதழ்களிலும் தமது கருத்தாழமிக்கக் கட்டுரைகளைத் தொடர்ந்து எழுதி வருகிறார் என்று அறிய முடிகிறது. இதற்கு முன்பே, பல்வேறு சொல்லாய்வுகள் பற்றி ஒரு சிறந்த நூலையும் வெளியிட்டுள்ளார்.

இந்த புதுக்கோட்டை மாவட்ட ஆய்வு நூல், இம்மாவட்டம் பற்றிய சமூக வரலாற்றுச் செய்திகளையும், பழைய சமஸ்தான நிர்வாக வரலாற்றுச் செய்திகளையும் உள்ளடக்கி பழமையையும் புதுமையையும் ஒருங்கிணைத்து இருபத்து நான்கு வெவ்வேறு தலைப்புகளிலான விரிவான பகுதிகளைக் கொண்டுள்ளது. மொத்தம் 280 பக்கங்களைக் கொண்ட இந்நூல், மிகப் பொருத்தமாக, இன்றைய புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகமான பழைய மன்னராட்சியின் கம்பீரமான அரண்மனைத் தோற்றத்தை தனது முகப்புப் படமாகக் கொண்டுள்ளது.

280 பக்கங்களும் சற்றும் சோடை போகாமல், சிறுசிறு வாங்கியங்களில் தகுந்த சொல்லாற்றலோடு, ஒரு நிறைந்த செய்திக் களஞ்சியமாகப் படைக்கப்பட்டுள்ளது. இந்நூல் செய்திகள் அனைத்தும் பழைய கல்வெட்டுக்கள், செப்பேடுகள், புகழ்பெற்ற ஞானாலயா நூலகம் உள்ளிட்ட பல்வேறு நூலக ஆவணங்கள், நூல்கள் மற்றும் இயல்பாகவே தகவமைந்துள்ள பட்டறிவு ஆகியவற்றின் மூலமாகச் சேகரித்த தரவுகளைக் கொண்டே நூலை முழுமை அடையச் செய்துள்ளார். தமது உள்ளார்ந்த ஆசிரியர் பணிக்கு இடையே இவ்வளவு தேடலும், வாசிப்பும், ஆய்வும் ஒருங்கிணைந்த பார்வைதான் நூலாசிரியருக்குப் பக்கபலமாக இருந்துள்ளது. என்பது நன்கு புலப்படுகிறது.

இருபத்து நான்கு தலைப்புகளும் எண்ணிலடங்காச் செய்திகளைக் கொண்டுள்ளன என்றாலும், மாவட்டத்தின் பகுதிகள் வாரியாகவோ அல்லது வரலாற்று அடிப்படையிலோ (நாடு சுதந்திரமடைவதற்கு முற்பட்ட காலம், இடைப்பட்ட காலம், சமஸ்தான தனியரசுக் காலம், திருச்சி மாவட்டத்தில் இருந்த காலம், தனி மாவட்ட நிர்வாகக் காலம்) ஒரு ஒழுங்குபடுத்தப்பட்ட வரிசை அடிப்படையில் நூல் அமைந்திருப்பதாகத் தெரியவில்லை என்பது தெரிகிறது.

எடுத்தவுடன், 1974ஆம் ஆண்டு தனி மாவட்டமாக உதயமானதை ஒரு நேரடி ஒளிபரப்பு போன்று தொடங்கி, உடனே அதற்கடுத்து ஒருங்கிணைந்த புதுக்கோட்டை நாடாளுமன்றத் தொகுதியில் நின்று முதுபெருந்தோழர் ஆர்.உமாநாத் முப்பதாயிரம் வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றதையும், தொடர்ந்து புதுக்கோட்டை தனி மாவட்டமாக ஆக வேண்டிய எஸ்.பி.சீனிவாசன் அறிக்கை மற்றும் தனி புதுக்கோட்டை மாவட்டத்தின் முதல் ஆட்சியர் மா.மயில்வாகனன் இ.ஆ.ப ஆனது முதலான, வரலாற்றுச் செய்திகளை சுவை குன்றாமல் அடுக்கியுள்ளார். நூலாசிரியர் சுராவின் ஆழ்ந்தகன்ற இதழியல் பார்வைக்கு எடுத்துக்காட்டாக, தமிழ் இதழியல் வரலாற்றில் முக்கியத்துவம் பெற்ற 'சக்தி இதழ்' வை.கோவிந்தன் அவர்களது, 'புதுக்கோட்டையில் புது சகாப்தம்' என்று 1948 ஏப்ரல் இதழில் எழுதிய முழுத் தலையங்கத்தையும் பொருத்தமாகக் கொண்டுவந்து இணைத்து தனது நூலை மெருகேற்றியதுதான்.


இந்நூலின் உள்ளடக்கப் பகுப்பு என்று பார்க்கும்பொழுது, முதலில் கூறியதுபோல் வரலாற்று நிகழ்வுகள் வரிசைக் கிரமமாக நிகழ்வுகள் அடுக்கப்படுவது என்று வைத்துக் கொண்டால் அது நூல் வாசிப்பும், வாசிப்போர் உள்வாங்கிக் கொள்ளும் மன இயல்பும் ஒன்றிணைந்து துலக்கமாக அமையாது என்பதும் கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது. எனவே, நிகழ்வுகள் கடந்த காலத்தையும் தற்காலத்தையும் அடுத்தடுத்து கலந்து எழுதி வாசிப்போர் அலுப்புத்தட்டாமல் மன ஈடுபாடுகொள்ளும் வகையில் நூலாசிரியர் பின்பற்றிய முறையே சரியாக இருக்கலாம்.

இவ்வாறு வரலாறு முன்னுக்குப் பின்னாகப் பதிவிடப்படும்போது, 1962இல் நாடாளுமன்ற உறுப்பினரான தோழர் ஆர். உமாநாத் பற்றிய பதிவு முன்பும் (பக் - 15), அதற்கு முன்னமே 1952இல் காங்கிரஸ் கட்சியின் ஆதரவு இல்லாமலேயே புதுக்கோட்டை நாடாளுமன்ற உறுப்பினரான மிகப்பெரும் சமூக சீர்திருத்தவாதியான கொப்பம்பட்டி க.முத்துச்சாமி வல்லத்தரசு பி.ஏ., பி.எல். பற்றிய பதிவு அதற்குப் பின்பும்

(பக் - 59) இடம் பெற்றுள்ளது. வாசிப்போர் மத்தியில் சரியான புரிதலை உண்டாக்காமல் போய் விடலாம்.

நூலின் உச்சபட்ச சிறப்பு என்னவென்றால், தக்க இடங்களில் இடம் பெற வேண்டிய ஏராளமான தொடர்புடைய படங்கள், ஆவணங்களின் ஒளியச்சு நகல்கள், பட்டியல்கள், ஆங்காங்கு இடம்பெற்றுள்ள சொல்லாய்வு நுட்பங்கள், அதற்குத்தகுந்த எடுத்துக்காட்டுக்கள் மற்றும் விளக்கிடும் பொருளுக்குத் தக்கபடியான உள்தலைப்புக்கள் ஆகியனவையே ஆகும். புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள மரங்களின் பெயர்களால் உருவான ஊர்ப் பெயர் பட்டியல் (பக் - 131, 132), புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள கல்வெட்டுகள் கூறும் பழமையான நாட்டு அடிப்படையிலான பதிவுப் பட்டியல் (பக் - 156, 157), கோவில்கள் தொடர்புடைய தெய்வ வழிபாட்டுப் பெயர்ப் பட்டியல் (பக் - 133, 134), புதுக்கோட்டை மாவட்ட சாதிவாரிக் கணக்கெடுப்பில் உள்ள புள்ளி விவரங்கள் (பக் - 83), ஒரு குறிப்பிட்ட இனத்தவர்க்கான அடைமொழிகளின் நீண்ட பட்டியல் (பக் - 95) புதுக்கோட்டை தொடர்புடைய ஆறுகளின் பட்டியல், காவிரி கிளை ஆறுகளின் பட்டியல் (பக் - 169) மற்றும் ஆற்றுப் போக்குத் தூரங்கள், கல்லணைக் கால்வாயிலிருந்து பிரியும் முக்கிய கிளை வாய்க்கால்களின் பட்டியல் (பக் - 173) ஆகிய பெருமுயற்சியிலான புள்ளி விவரங்கள் ஆகியவை நூலை வாசிப்போருக்கான அபரிமிதமான செய்திகளை உள்வாங்கும் நேர்த்திக்கானது மட்டுமின்றி நூலாசிரியரது படைப்பாற்றல் தொடர்பான நேர்மை குன்றாத பக்குவத்தையும் எடுத்துரைக்கின்றன. ஆனால், சாதிகளற்ற சமதர்ம சமுதாயப் போக்கில் சிந்தனைகளும் வாழ்வு முறைகளும் மேலோங்கி நிற்கும் இக்காலத்தில் மீண்டும் பழைய காலத்து சாதிகள் பற்றிய இவ்வளவு விரிவான அலசலும், ஆய்வும், பட்டியல்களும் புதுக்கோட்டை மாவட்ட பல்வகைப்பட்ட மக்களின் மனங்களில் மீண்டும் சில நெருடல்களை உருவாக்குமோ என்றும் சிந்திக்க வாய்ப்புகள் உண்டு. அதேசமயம், நூலாசிரியரது இவ்வளவு ஆழ்ந்தகன்ற தேடல் வேட்கை வாசகர்களைப் பிரமிப்பில் ஆழ்த்தும் என்பதும் உண்மை.

ஒரு கணிதப் பட்டதாரியான நூலாசிரியர் சுராவின் ஆழமான தமிழ் இலக்கிய அறிவும், பரந்த வாசிப்பின் நேசிப்பும், முதுபெரும் படைப்பாளிகளது விவரங்களைப் பதிவிடும் பேரார்வமும், பழமையான செய்யுள்கள், சங்க இலக்கிய மேற்கோள்கள், இதழியல் வரலாறு, பதிப்பகங்களின் விவரங்கள் ஆகியன அவரது வயதுக்கு மிஞ்சிய காத்திரமான உற்றுநோக்கலையும், அவற்றை வாசிப்போர்க்குத் தகுந்த முறையில் தெளிவாக வெளிப்படுத்தும் நுட்பதிட்பங்களும் நூல் முழுதும் சிறப்பாகப் பளிச்சிடுகின்றன. நூலாசிரியர் ஆங்காங்கு எடுத்தாளும் பொருத்தமான இலக்கிய, வரலாற்று, அரசியல், படைப்புலக எடுத்துக்காட்டுகள் அவற்றைப் பதிவிடும் விதம் ஆகியவை மேலும் நூலுக்கு சிறப்புச் சேர்க்கின்றன.




புதுக்கோட்டை: பன்றி நாடு முதல் புதுகை வரை (தொகுதி –ஒன்று) | சந்தியா பதிப்பகம், 044-24896979 விலை – ரூ. 330/-


மன்னராட்சியை எதிர்த்துப் போராடிய தோழர் முத்துச்சாமி வல்லத்தரசின் நாடுகடத்தலைக் கண்டித்து 1939இல் பாவேந்தர் பாரதிதாசன் 'புதுவை முரசில்' எழுதிய சமூக சீர்திருத்த முன்னெடுப்பை வலியுறுத்தும் இருபத்து நான்கு வரி கவிதையைக் கண்டுபிடித்து நூலின் 57ஆம் பக்கம் சேர்த்துள்ளார் நூலாசிரியர். இதேபோல் இரண்டாம் உலகப்போரில் ஹிட்லர் முசோலினி சர்வாதிகார வீழ்ச்சி பற்றி, கிள்ளுக்கோட்டை தலைமை ஆசிரியர் அப்பொழுது எழுதிய நாட்டுப்புற வேடிக்கைப் பாட்டும், புதுக்கோட்டை சமஸ்தானத்தின்

முதல் பத்திரிகையான 'ஜனமித்திரன்' இதழ் பற்றிய விரிவான செய்திகளும் (பக் - 191, 192), அவ்விதழின் முகப்பில் இடம் பெற்ற அமரகவி சுப்பிரமணிய பாரதியின் 'ஏழையராகி..' என்று தொடங்கும் ஒன்பது வரி தேசியக் கவிதையும் நூலாசிரியரது புதுக்கோட்டை தொடர்பான படைப்புலகு பற்றிய அரிய தேடல் முயற்சியை வியக்க வைக்கின்றன.


இதேபோல், புதுக்கோட்டை மண்ணின் பெருங்களூரில் பிறந்த மாபெரும் எழுத்தாளரும், ஞானபீட விருது பெற்றவருமாகிய அகிலாண்டம் என்ற அகிலனைப் பற்றி நூலாசிரியர் விரிவான பதிவினை வாசகர்களுக்குத் தந்துள்ளார். அத்துடன், 1974ஆம் ஆண்டு, அப்போதைய மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக வரலாறு படைத்த முதுபெரும் எழுத்தாளர் பேராசிரியர் டாக்டர். மு.வ. அவர்கள் அப்பல்கலைக் கழகத்தில் நான்கு நாட்கள் நடத்திய படைப்பாக்கக் கருத்தரங்கில் அவர் அகிலன் பற்றி ஆற்றிய உரை, இறுதியில் அகிலன் அவர்களது அரிய ஏற்புரை ஆகியவற்றையெல்லாம் தேடிக் கண்டடைந்து சிறப்பாகப் பதிவு செய்து புதுக்கோட்டை மண்ணிற்குப் பேரும் புகழும் கூட்டியுள்ளார் அண்டனூர் சுரா. இத்துடன் புதுக்கோட்டை மண்ணின் மைந்தர்களின் பழங்கவிகள், பாடல்கள், கவிஞர்கள் மற்றும் அவர்களது கவிப்படைப்புகளையும் நமது பார்வைக்கு மீளக் கொணர்ந்து பெருமை சேர்த்துள்ளார்.

புதுக்கோட்டை மாவட்டத்தின் பெயர் பின்புலம், இதற்கு முன்பு இது 'பன்றி நாடாக விளங்கிய வரலாற்று ஆய்வுகள், மற்றும் மிகப் பெரும் ஆளுமைகளான எட்கர் தர்ஸ்டன், லூயிஸ் மூரே, ஹெமிங்வே, சுத்தானந்த பாரதியார், ரா.பி. சேதுப் பிள்ளை, சர்.ஆர்தர் காட்டன் ஆகியோர் மற்றும் பலரது வரலாற்றுச் சுவடுகளைத் தமது இடைவிடாத் தேடல் மூலம் ஆய்ந்தறிந்து இந்நூலில் சிறப்பாகப் பதிவிட்டு புதுக்கோட்டைப் படைப்புலகில் தமக்கென ஒரு தனி இடத்தைப் பிடித்துள்ளார் சுரா. புதுக்கோட்டையின் முதல் வரலாற்று ஆய்வு, முதல் அச்சகம், முதல் பேருந்து நிறுத்தம், முதல் மின் இணைப்புப் பெற்ற கிராமம், முதல் இதழாசிரியர் மற்றும் 'புதுகை' பெயரிலான புதுகைத் தென்றல், புதுகைத் தந்தி போன்ற எண்ணற்ற செய்திகளைத் தந்துள்ளார். அவரது திட்டப்படி தனது அடுத்தடுத்த தொகுதிகளில் இன்னும் விட்டுப் போன புதுக்கோட்டை மாவட்டத்தின் இன்னபிற விவரங்களைத் தரும் பொருட்டு நூலாசிரியரைப் பெரிதும் பாராட்டி வாழ்த்தி ஊக்குவிப்போம்.

**கட்டுரையாளர்: எழுத்தாளர்,**
**முதுநிலை விரிவுரையாளர் (ஓய்வு).**



3.1.2025 அன்று சென்னை புத்தகக் கண்காட்சி சிற்றரங்கில் மருத்துவர் சீ.ச.ரெக்ஸ் சற்குணம் அவர்களின் 'நமக்கு எதிராக அவர்கள்' எனும் நூல் வெளியீட்டு விழா நடைபெற்றது. இதில் தோழர் ந.ஞானகுரு, என்சிபிஎச் விற்பனை மேலாளர் தி.ரெத்தினசபாபதி, தோழர் V.மீனாட்சிசுந்தரம், ஊடகவியலாளர் ஏ.எஸ்.பன்னீர்செல்வம், வழக்குரைஞர் பி.சுரேஷ் பாபு, டாக்டர் V.கனகசபை, நூலாசிரியர் C.S.ரெக்ஸ் சற்குணம் ஆகியோர் கலந்துகொண்டனர்




# பாக்களால் வரைந்த பாரதி வரலாறு


அ. அன்பரசன்

தமிழ் மரபில் பாரதிக்கென்று தனித்த இடம் என்றுமுண்டு. அதற்குக் காரணம் அவர் படைத்த படைப்புகள் மட்டுமல்ல, அவர் தன் வாழ்க்கையை வாழ்ந்த விதத்தினாலும்தான். தமிழ் வெகுசனப் பரப்பில் பாரதிக்கென்று இன்றைக்கு உருவாயிருக்கும் அடையாளம் கடந்த ஒரு நூற்றாண்டாகப் பல்வேறு வழிகளில், பல்வேறு துறை சார்ந்த அறிஞர்களின் வாயிலாக, பல்வேறு கருத்தியல்வாதிகளின் கருத்து மோதல்களால் உருவாகி வந்திருக்கிறது. இன்னும் எழுதித் தீராத உன்னத வாழ்வாக பாரதியின் வாழ்வு இன்றும் படைப்பாளிகளுக்கு உள்ளது என்பதற்கு 2016ஆம் ஆண்டு வெளிவந்திருக்கின்ற ‘பாரதி காவியம்’ என்ற நூல் சான்றாகும். இக்கவிதை நூலின் ஆசிரியர் அறிவியல் விஞ்ஞானியும் கவிஞருமான நெல்லை சு.முத்து ஆவார். இந்திய விண்வெளித்துறையில் முதனிலை விஞ்ஞானியாகப் பணியாற்றிவிட்டு ஓய்வு பெற்றுள்ள இவர் 140க்கும் மேற்பட்ட தமிழ் நூல்களை எழுதியுள்ளார்.

## பாரதி எனும் ஆவணம்

எங்கள் தலைமுறை வெறுமனே பாரதியாரின் ஒன்றிரண்டு கவிதை வரிகளைப் படித்துவிட்டுப் போகிற போக்கில் தம் வசதிக்குத் தகுந்தாற் போல் பயன்படுத்திக் கொண்டு போகிறதோ என்ற ஐயப்பாடு எனக்குண்டு. அவர் கவிதைகளையோ அவர் வாழ்க்கையையோ தெளிந்து உள்வாங்கும் நோக்கம் எதுவும் இல்லாமல் போகின்றதோ என்ற பதற்றமும் உண்டு. அந்தப் பதற்றத்தைப் போக்கும் விதமாக வெளிவந்துள்ள கவிதை நூல்தான் பாரதி காவியம்.

நெல்லை சு.முத்து அவர்கள் பாரதி காவியத்தை செய்யுள் வடிவில் படைத்திருப்பினும் எளிமையாக எல்லோரும் படிக்கும்படியான புதுக்கவிதை நடையில் படைத்திருக்கிறார். வெறுமனே கவிதைகளைச் சொல்லழகு காட்டி, கவித்துவம் என்கிற பெயரில் புலமை நெறி காட்டி எழுதாமல் சுவைப்பட பாரதியின் வரலாற்றை கவிதையாகப் படைத்திருக்கிறார். வரலாற்றை ஒரு படைப்பாகப் படைக்கும் போது ஏற்படும் சிக்கல்கள் நிறைய உண்டு. அவற்றில் முக்கியமானது ‘உண்மையான’ வரலாற்றை அறிந்து கொள்ள வேண்டும் என்பதே ஆகும். இதுவே அப்படைப்பை வரலாற்றுப் பூர்வமாகப் படைப்பதற்கான முதல் நிபந்தனை. பாரதி காவியம் கவிதைகளால் ஓர் உண்மை வரலாற்றை வரைந்திருக்கிறது. அதற்காக அவர் பின்னிணைப்பாக பாரதியின் வாழ்க்கையை அருகிலிருந்து பார்த்தவர்கள் எழுதிய நூல்கள், பாரதியைப் பற்றிய தேடலையே தன் முழு வாழ்க்கையாகக் கொண்டு இயங்கிய அறிஞர் கி.ஆ.பெ.விசுவநாதம், இரா.அ.பத்மநாபன் போன்றோரின் நூல்களை வரிசைப்படுத்தியதிலிருந்து புரிந்துகொள்ள முடியும்.




ஒவ்வொரு சம்பவத்திற்குப் பின்னும் உள்ள வரலாற்று விளக்கத்தை அடிக்குறிப்பிட்டுச் சொல்வது இக்கவிதை நூலுக்குப் பெரும் பக்கபலமாக அமைந்திருக்கிறது. பாரதி ஏன் பூணூல் அணியும் பழக்கத்தை கைவிட்டார்? பாரதிக்கு யார் பிரெஞ்சு மொழி கற்றுக்கொடுத்தது? என்பன போன்ற நுண்ணிய வரலாற்றுக் குறிப்புகளால் இக்காவியம் மெருகூட்டப்பட்டிருக்கிறது.

## கவித்துவ அழகு

பாரதிக்கு சிறுவயதில் அவர் தந்தை கணக்குப் பாடம் கற்றுக் கொடுக்கிறார். கணக்கு அவர் மண்டையில் ஏறவில்லை. ஆனால் இயல்பாக அவர் மனதிற்குத் தமிழ்ச் சொற்களை சந்த நயமாக எதுகை, மோனையோடு மாற்றத் தெரிந்திருக்கிறது. ஒருமுறை கணக்குப் பாடம் கற்றுக் கொடுத்துக் கொண்டிருக்கும் போது புரியாமல் மனதுக்குள் கணக்கு, பிணக்கு, ஆமணக்கு என்று மனக்கணக்கு போட்டுக் கொண்டிருந்திருக்கிறான் சிறுவன் பாரதி. இதனைக் கவிஞர்,

**முந்திவரும் சந்தவியல் ‘கணக்கி’ னுக்கு**
**இழிந்தகணப் ‘பிணக்கு’முதல் ‘ஆம ணக்கு’**
**எதுகைபல அடுக்கிமகன் விழித்திருப்பான்**

என்று மொழிகிறார்.

அண்டவெளியில் இருக்கும் கருந்துளை தன் எதிரே எது வரினும் உள்ளிழுக்கும் வல்லமை கொண்டிருக்கும். அதுபோல் பாரதியின் கவிதை எதிரில் உள்ளோரின் கருத்தைக் கவரும் என்கிறார். மேலும் ஓர் இடத்தில்,

**மின்னலெனில் உடன்மறையும்! ஆயின் நெஞ்ச**
**வேதனையும், விடுதலையின் விடுதலை வேட்கைத் தீயும்**
**மின்மநிலைப் பாடல்களாய் ஆகா யத்து**
**வெறுமைநிலை அணுத்துகளாய் ஊடா டுங்காண்!**

என்று பாரதியின் கவித்திறத்திற்கு கவியழகு கூட்டும் கவிஞர் 'மின்மநிலை' என்பதற்கு அடிக்குறிப்பில் பின்வருமாறு விளக்கம் தருகிறார்:

'மின்மநிலை'(Plasma): அயனிகளால் நிறைந்த 'நெருப்பு' நிலை. இயற்பியலின் நிலம் (solid), நீர் (liquid), காற்று (gaseous) ஆகிய மூன்று நிலைகளுக்கு அப்பால் பொருளின் நான்காவது நிலை. ஐந்தாவதான 'வெறுமம்' (emptiness) பஞ்சபூதங்களில் இறுதியான ஆற்றல் வடிவமாகிய 'வானம்'. இங்குக் கவிதைக்குள் அறிவியல் வருகிறது.

விடுதலைக்கு முன்பே இந்திய தேசத்தின் விடுதலையைப் பாராமல் மறைந்த பாரதியார்,

**ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே**

**ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட்டோமே**

என்று பாடியவர். கவிதையில் மட்டும் புலமையில்லாமல் ஓர் இதழியலாளராகவும் இருந்தவர். ஆங்கிலேயருக்கெதிராக தன் நெஞ்சக் கனலைச் சித்திரப் படமாக, கட்டுரைகளாக வரைந்து விடுதலை வேள்வியில் பங்குபெற்றவர். ஆங்கிலேயருக்கெதிராக பாரதி கைது செய்யப்படும் அபாயம் இருக்கும் வேளையில் புதுவைக்குச் சென்று தலைமறைவு வாழ்க்கை வாழ்கிறார். பிரிட்டிஷ் உளவாளி ஒருவன் அப்போது அவரிடம் மாறுவேடத்தில் வந்து விசாரிக்கிறான். விசாரிப்பவன் ஓர் உளவாளி என்று கண்டுகொண்ட பாரதியை கவிஞர் 'கதிரியக்கப் பார்வையாளன்' என்று புகழ்கிறார்.

**இல்லாத வேடந் தாங்கி**
**எழுந்தவனைக் கவிஞன் நோக்கி,**
**"மெல்லாதீர்! எடும்உம் காவல்**
**வேலைஅடை யாளச் சீட்டை!"**
**சொல்லான கதிரியக்கம்**
**துளைக்குமவன் விலாஎ லும்பை!**
**நில்லாமல் ஓடி விட்டான்**
**நேர்க்கவிஞன் நகைக்க லுற்றான்**

என்கிறார்.

## நவீனத்துவத்தின் முகம் பாரதி

பாரதி பிறந்து வளர்ந்து வாழ்ந்து மறைந்திருந்த 39 வருடங்கள் தமிழ் மண்ணில் நவீனத்துவக் கருத்துகள் சூல் கொண்டிருந்த நேரம். ஏனெனில் இங்கு 19 மற்றும் 20ஆம் நூற்றாண்டில் ஆங்கிலேயக் கல்வியினால் படித்த நடுத்தர வர்க்கம் என்ற ஒன்று உருவாகியிருந்ததே அதற்குக் காரணம். இவர்களின் வாயிலாகத் தமிழ்ச் சமூகத்தில் நவீனத்துவக் கருத்துகள் மெல்ல மெல்ல உருவாகிப் பரவியது. பாரதியும் அந்த படித்த நடுத்தர வர்க்கத்தினரில் ஒருவன். அதன் நீட்சியாகவே அவரின் சீர்திருத்தக் கருத்துகளையும் பார்க்க வேண்டும்.

பாரதி இந்திய விடுதலையைப் பார்க்காவிடினும் அவருக்கு அந்த விடுதலை எப்படிப்பட்டதாக இருக்க வேண்டும் என்ற கனவு இருந்தது. இங்கு ஆதிக்கச் சாதியாக இருந்தாலும் தாழ்ந்த சாதியாக இருந்தாலும் எல்லோருக்குமானதாகத்தான் அந்த விடுதலை அமைய வேண்டும் என்று எண்ணியவர். பெண்களுக்கும் விடுதலை வேண்டும் என்று சொன்னவர்.

இன்று சமூக சீர்திருத்தக் கருத்துகள் பேசும் எவரிடமும் எதிர்பார்க்கும் தகுதி சுயசாதி விமர்சனம். ஏனெனில் தான் பிறந்த சாதியில் இருக்கும் கொடுமையை முதலில் பேச வேண்டும் என்று இன்று எல்லாத் தரப்பினரும் எதிர்பார்க்கின்றனர். அதற்கு முதல் ஆளாய் முன்னின்று சுயசாதி விமர்சனம் செய்தவர் பாரதி.

**"பார்ப்பாரை ஐயர் என்ற காலமும் போச்சே"**

என்று பாடியவர், பாரதி. "சாதிகள் இரண்டொழிய வேறில்லை" என்று சொன்னவர். ஆனால் சாதி அழித்தொழிப்புக்கு பாரதியின் வழி என்பது தனி வழியாகத்தான் இருந்திருக்கிறது.

**சூத்திர னுக்கொரு நீதி - தண்டச்**
**சோறுண்ணும் பார்ப்புக்கு வேறொரு நீதி;**
**சாத்திரம் சொல்லிடுமாயின் – அது**
**சாத்திரம் அன்று சதியென்று கண்டோம்**

என்பதே அவர் கொள்கை. ஒரு தாழ்த்தப்பட்டவரான கனகலிங்கத்திற்கு பூணூல் அணிவித்து அவரை 'பிராமணன்' ஆக்கியவர். பிறப்பினால் மட்டுமே ஒருவன் உயர்ந்தவன் ஆகிவிட முடியாது என்று ஆழமாக நம்பியவர்.

நெல்லை சு. முத்து அவர்கள் ஒரு சம்பவத்தைப் பதிவு செய்கிறார். ஒருமுறை பூணூல் அணியாத பாரதியைப் பார்த்து "உள்ளபடி பார்ப்பானோ நீவிர்?" என்று கேட்கின்றான் ஒருவன். அதற்குக் கவிஞர்,

**சொல்லினியீர்! பூணுலேன் பெரிது செய்வீர்?**
**தூய அந்தண்மைக் குறியோ பூணூல்? (267)**

என்று எதிர்க் கேள்வி கேட்கின்றார். தான் பிறந்த சாதியைச் சமரசமில்லாமல் சுய விமர்சனம் செய்து அதனால் பல்வேறு எதிர்வினைகளை எதிர் கொண்டவர் பாரதி. அதே போல் சாதி ஒழிப்புடன் கூடவே பெண்விடுதலை என்பதையும் உரத்து ஒலித்தவர்.

பாரதியைப் பற்றி நெல்லை சு.முத்து கவிதையில் புகழுரை செய்கிறார்.

**போதைதரும் புகழுரையில் நாட்ட மில்லை!**
**பொருள்பெருக்கும் வழிமுறையில் நோட்டமில்லை!**
**ஊதையுற வாழ்ந்திடவும் வேட்கை இல்லை!**
**ஊனர்மனம் தாழ்ந்திடவும் நெஞ்ச மில்லை!**
**சீதமுறக் கடலலைமுன் தனித்து நின்று**
**சில இரவுப் பொழுதுகளைச் சுவைத்தி ருப்பான்!**
**நீதமுற கதிரவனின் ஒளித்தேன் மாந்தி**
**நெஞ்சுயர்த்திப் பூங்கவிதை இசைத்தி ருப்பான்!**

பாரதியின் கவிதைகளைப் படித்திருப்போம். ஆனால் பாரதியார் வாழ்க்கையில் நடந்ததை, மனைவியிடம் அவருரைத்த புத்திமதிகளைக் கவிதை வடிவில் படித்திருக்கிறோமா? பாரதி காவியத்தில் தன் மனைவி செல்லம்மாளுக்கு பெண்ணடிமையின் தீய விளைவுகளையும் தீண்டாமையின் அவலத்தையும் சொல்வதைக் கவிஞர் சொல்கிறார். தன் காலத்தில் பிராமணர்கள், பெண்கள் மாதவிடாய்க் காலத்தில் சமைப்பதைத் தீட்டு என்று ஒதுக்கி வைத்து விடுவதையும் அதே நேரம் வீட்டில் பணிப்பெண்கள் இருந்தாலும் அவர்கள் சூத்திரர்கள் ஆதலால் அவர்களையும் சமைக்க அனுமதிக்க மாட்டார்கள் என்பதையும் சொல்லும் பாரதி,

**சரியென்று வெளியுணவுச் சாலை உண்டி**
**அமைவுடனே சூத்திரர்தாம் அளித்திட் டாலும்**
**அதுதீட்டாம்! திருநீறால் சுத்தி செய்வார்!**
**குமைகின்ற மடைமைகளும் விரைவில் மாறும்!**
**கோத்திரங்கள் வெளிவேடம் மறைந்து போகும்!**

என்கிறார். மேலும் உரைக்கிறார்;

**போயழிந்த மேற்சட்டை ஓலைப் பாம்பைப்**
**புதுப்பாம்பு எனப்பயந்து ஓடலாமோ?**
**தூய்மைமிகும் புதுநெறிகள் உதிக்கும் வேளை**
**சொப்பனத்தை நிசமென்று தரிசிக்க லாமோ?**
**தீயவெளிப் பகட்டெல்லாம் செத்த பின்னர்**
**தீண்டாமை எனும்பொய்மைக்(கு) அஞ்சலாமோ?**
**ஆயகலை மருத்துவனோர் பார்ப்பான் இன்றோ**
**அம்பட்டன் போலபிணம் அறுக்கின் றானே!**

தீண்டாமையும் பெண்ணடிமைத்தனமும் தான் பிறந்த சாதியில் உள்ளதை வெறுத்து அதனைக் களைய வேண்டும் என்ற எண்ணம் கொண்டிருந்த பாரதியின் எண்ணத்தைக் கவிஞர் மேற்கண்டவாறு சொல்கிறார். காலமாற்றத்தில் எல்லோரும் வேறு வேறு தொழில்கள் செய்யப்புகும் நேரத்தில் பழைய சனாதனத்தைப் பிடித்துத் தொங்கிக் கொண்டிருப்பதை வெறுக்கிறார் பாரதி.

தமிழ்ச் சமூகம் பாரதியை இன்றும் கொண்டாடுவதற்கு முக்கியமான காரணம் அவரின் தாய்மொழிப் பற்று. 'யாம் அறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவதெங்கும் காணோம்' என்றவர், ஒரு முறை செல்லம்மாள் பகவத்கீதையை வடமொழியில் பாராயணம் செய்து கொண்டிருப்பதைப் பார்த்துவிட்டுத் தான் தமிழில் மொழிபெயர்த்திருக்கின்ற பகவத்கீதையைப் படி என்று உரைக்கிறார். சொல்லிவிட்டுச் சொல்கிறார்,

**எந்தமொழி யானாலும் பகவா னுக்கு**
**இன்பமொழி; அதில்அவனைத் தொழுதல் நன்றாம்!**
**சிந்தையறி யாமலெதும் தோத்தி ரத்தில்**
**திண்டாட வேண்டாமே! எனப் பகர்ந்தான்! (541)**

என்கிறார். நம் காலத்திற்குத் தகுந்தாற்போன்ற வாசகங்கள் தாய்மொழியில் இறைவனைத் துதிப்பதை, அர்ச்சனை செய்வதை பாரதியின் எண்ணங்களைக் கவிஞர் கவிதையாகப் பிரதிபலித்திருக்கிறார்.

பாரதியை இன்று பல தரப்பினரும் விமர்சிக்கின்றனர். அவருடைய கவிதைகள், கட்டுரைகள், கதைகள் யாவும் அவர் காலத்தில் இருந்த சமூக நிலைமைகளுக்குத் தகுந்தாற் போல்வன என்பதை நாம் நினைவில் கொண்டால் அவரின் வாழ்வைப் புரிந்து கொள்ள நமக்குப் பேருதவியாக இருக்கும். அதற்கு பாரதி காவியம் என்னும் இந்நூல் நமக்குத் துணை புரியும். பாரதியின் வாழ்வில் நிகழ்ந்த சம்பவங்களைக் கவிதைகளாக்கித் தந்த விஞ்ஞானியும் கவிஞருமான நெல்லை சு. முத்து அவர்கள் இந்நூல் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவருக்கும் புரியும் படியான தமிழில் படைத்திருக்கின்றார். பாரதிக்குப் பெருமை சேர்க்கும் விதமாக இருக்கும் 'பாரதி காவியம்' தமிழ் என்னும் மகுடத்திற்கு முத்தாக என்றும் மிளிரும்.

●

**கட்டுரையாளர்: முனைவர் பட்ட ஆய்வாளர்**
**தமிழ்த்துறை, காந்திகிராம கிராமிய நிகர்நிலைப்**
**பல்கலைக்கழகம்**



# மனிதர்களின் மேன்மையைப் பேசும் புனைகதைகள்

**மதுரை சரவணன்**

இறையன்புவின் பெரும்பாலான சிறுகதைகள் யதார்த்த வாழ்வின் சிக்கல்களை எந்தவிதமான ஒப்பனையுமின்றிப் புனைவாக்கம் செய்கின்றன. அவை மனிதர்களின் மேன்மையை எடுத்துக் கூறுவதன் வழியாக வாசகர்களின் மனதின் இறுக்கத்தை தளர்த்துகின்றன. 'என்னுடைய சிறுகதைகளைப் பெரும்பாலும் சமூக நிகழ்வுகளைக்கொண்டே நான் கட்டமைக்க முடிந்தது' என இறையன்பு 'நன்றிகளோடு நான்' என்ற தலைப்பில் தன்னுரையில் கூறியிருப்பதை இத்தொகுப்பிலுள்ள கதைகளைப் படிக்கும்போது உணர முடிகிறது. அவரது அரசுப் பணியின் காரணமாகப் பல்வேறு விளிம்புநிலையினரைச் சந்தித்து இருந்தாலும், அவர் சமூகத்தின் மீது கொண்டிருந்த நெருக்கம், அக்கறை அவரை புனைகதையாளனாக உருவாக்கி இருக்கிறது என்பதற்கு இத்தொகுப்பு ஒரு சான்று

இறையன்பு கதைகளின் வழியாகத் தன்னுடைய அகமன உறுத்தல்களை நீர்த்துப் போகச் செய்திருந்தாலும், கதைமாந்தர்களை மேன்மையுடையவர்களாகப் படைத்து, வாசிப்பில் நேர்மறை சிந்தனையை வளர்த்தெடுக்கிறார். அவர் சந்தித்த அல்லது கேட்டுத் தெரிந்துகொண்ட மனிதர்கள் குறித்து எழுதும்போது அவர்களைச் சிறுகதைகள் வாயிலாக நுட்பமான புனைவாக்கி, விளிம்புநிலை மனிதர்களின் மகத்தான பண்புகளை எழுதியிருக்கிறார். இவரின் கதைமாந்தர்கள் எளியவர்களாக இருந்தாலும் அவர்களின் பண்புகள் இப்படியும் மனிதர்கள் இருக்கத்தான் செய்கின்றார்களா என வாசிப்பில் வியப்பினை ஏற்படுத்துகின்றன. குறிப்பாக நேர்மை, நின்னினும் நல்லன், கல்லூரிக் காதல் போன்ற புனைகதைகளில் மனிதர்கள் பிரமிக்க வைக்கின்றனர். இதுவரை பிரசுரமாகியுள்ள இறையன்புவின் ஐந்து சிறுகதைத் தொகுப்புகளில் இருந்து பதினான்கு கதைகளைத் தேர்ந்தெடுத்துத் தொகுத்துள்ள ந. முருகேசபாண்டியன், இத்தொகுப்பை ரசனையுடன் உருவாக்கியுள்ளார்.

இறையன்புவின் தொடக்ககாலக் கதையில் மொழியானது தட்டையாக, கடினத்தன்மை கொண்டதாக இருப்பதால் மீண்டும் மீண்டும் வாசிப்புக்குள்ளாக்க வேண்டியிருக்கிறது. எனினும் அவருடைய அடுத்தடுத்த கதைகள் இலகுவாக, வெகுஜன இதழுக்கு ஏற்ற மொழியில் மாறியிருக்கிறது. தொடர்ந்து வெளியான கதைகள் அவரது எழுத்தை, நடையை மேன்மைப்படுத்தி எல்லாத்தரப்பு வாசகர்களையும் கவரும் வண்ணம் இலகுவாக்கியுள்ளன.

“

“வெறுமனே
சம்பவங்கள் அல்லது
அதிர்ச்சியளிக்கிற
அனுபவங்களைக்
கதையாக்குவது மட்டும்
அவருடைய நோக்கமல்ல

”

‘நேர்மை’ என்ற கதையில் ஏழ்மையிலும் நேர்மையாக இருக்க முடியும் என்பதை தங்கம் என்ற அன்றாடங்காய்ச்சி பாத்திரத்தின் வாயிலாக இறையன்பு காட்சிப்படுத்துகிறார். குப்பன் என்ற கீழ்மட்ட ஊழியர் இறந்தபோது, அவரது இறப்புக்குப்பின் கிடைக்கும் க்ராஜுவட்டி பணம் குறித்து விரிந்து செல்லும் கதையில், சட்டத்தின் விதிகளின்படி நாமினேசனான முதல் மனைவி தங்கத்திடம்தான் பணத்தைக் கொடுப்பேன் என்கின்றார் நேர்மையைத் தம்பட்டம் அடிக்கும், விநாயகருக்குத் தினமும் பூவைத் தரும் கோபாலன். ஆனால், ஜாலியான பேர்வழி என்றாலும் உதவுவதற்காக விதிகளை வளைக்க முயற்சிக்கும் நாத்திகரான சுப்ரமணியன் என்ற மேலதிகாரி, குப்பனுடன் வாழ்ந்து குழந்தைகள் பெற்றுக்கொண்டு, கடைசி காலத்தில் குப்பனை மருத்துவமனையில் பார்த்துக்கொண்ட இரண்டாவது மனைவி செண்பகத்திடம்தான் க்ராஜுவட்டி பணத்தைக் கொடுக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறார். விதிகளில் துரும்புகூட மாறிடாத கோபாலன் நாமினேசன் செய்யப்பட்டுள்ள தங்கத்திற்கு பணத்தைக் கொடுக்க ஆவணம் தயாரிக்கிறார்.


ஆனால், பொருளாதாரரீதியில் நசிந்துள்ள தங்கம், அந்தப் பணம் முழுவதையும் கையெழுத்திட்டு வாங்கியபின், அப்படியே செண்பகத்திடம் கொடுப்பதன்மூலம் கோபாலின் நேர்மையின் மீதான பெருமையைக் கரைத்துவிடுகிறார். பொதுவாக இறையன்புவின் பெரும்பாலான கதைகளில் சமூகத்தின் மீதான சக அலுவலக ஊழியர்கள் மீதான எள்ளல், பகடி நிரம்பக் காணக் கிடக்கின்றன; ஆழ்ந்து வாசிப்பதன் வாயிலாக அவரது பகடியினையும் எள்ளலையும் ரசிக்கலாம். உதாரணத்திற்கு இக்கதையில் கோபாலனை குறிப்பிடும்போது அவர் அலுவலக இருக்கையைவிட்டு நகர மாட்டார் (இதில் அவர் சீட்டில் இருந்து பைல் நகராது என்ற நக்கல் உள்ளது). அவர் நேர்மையாக இருப்பதில் அலாதியான சந்தோஷம் கொள்பவர் (இதில் தம்பட்டத்துக்காக நேர்மையாக இருக்கிறார் என்றே எள்ளல் கொள்ளச் செய்கிறார்). அதேபோல் சுப்ரமணியத்தை நாத்திகர் என்பதுடன் நின்றுவிடாமல், “ஆனால் யார் நம்பிக்கையையும் கேலி செய்ய மாட்டார்” என்று கூறி இறையன்பு கேலி செய்வதை ரசிக்க முடிகிறது. அதைவிட உச்சம் அடுத்த வரி: “நாத்திகன் இதுவரை எந்த மதத்தைச் சேர்ந்தவனையாவது கொன்னிருக்கானாப்பா?”. இறையன்பு நுண்ணியவகையில் அழுத்தமான பொருளில் தான் கண்டறிந்த விசயங்களைக்

கேலிக்குள்ளாக்குவது, புனைகதைகளில் நுட்பமாக வெளிப்பட்டுள்ளது.

'அரிதாரம்' என்ற கதை நாய்களை முன்வைத்து சொல்லப்பட்டாலும் அக்கதை சீமை நாய் குறித்த கதையல்ல என்பது அக்கதையை முழுமையாகப் படித்து முடிக்கும்போது மனதில் தோன்றுகிறது. இந்தியாவின் நானூறு ஆண்டு கால அடிமை வரலாற்றையும் அதற்குப் பின்னால் பொதிந்திருக்கிற குள்ளநரித்தனத்தையும் நாய்களை முன்வைத்து இறையன்பு சொல்லியுள்ளாரா? இறையன்பு கூறுவது போல், என் போன்ற வாசகர்களுக்கு அந்நிய முதலீட்டின் ஆதியை மோப்பம் பிடித்து தோண்டி எடுப்பதாகவே சீமை நாய் தோன்றலாம். இன்னும் சிலருக்குக் கார்ப்பரேட் மேலாதிக்கத்தின் முகமூடியை கிழித்துப் போடுவதாகக்கூடத் தோன்றலாம். அதேவேளையில் ‘வரம் தர வேண்டும்’ என்ற கதை வண்ணத்துப்பூச்சிகள் குறித்துப் பேசுவதாக இருந்தாலும், வண்ணத்துப்பூச்சியின் மீதான ஆசை, அதன் மீதான ஈர்ப்பு, அதனைத் தொடர்ந்து எழும் ஆராய்ச்சி, அதன்பின்பு உண்டான வெறுப்பு, சித்த வைத்தியம் என விரிந்து கதைமாந்தரை மட்டுமல்ல, நம்மையும் பட்டாம்பூச்சியாகவே மாற்றிவிடுகிறது. இது ஒரு மேஜிக்கல் ரியலிச வகைக்கான முயற்சியாகவே தோன்றுகிறது.

மற்றொரு கதையான ‘நாய்ப்பிழைப்பு’ என்ற கதை ஆரம்பிக்கும் போது, தனியார் நிறுவனம் ஒன்றில் நடந்த உண்மை நிகழ்வு என்று குறிப்பிட்டு வாசகர்களை அரசு அலுவலகம் நோக்கி நகர்த்தி, கதையை உடனே வாசிக்கச் செய்யும் உத்தியாக உள்ளது. இந்நிகழ்வு ஏதேனும் அரசு அலுவலகத்தில் நடைபெற்றிருந்தால் அதற்கு இக்கதையில் வரும் நாய்கள் பொறுப்பு அல்ல என்ற பகடி ரசிக்கவும், சிரிக்கவும் வைக்கிறது. இக்கதையில், கம்பெனி எம்.டி.யின் மனைவி வளர்க்கிற பீகில் என்ற பெண் நாய்க்கு மேட்டிங் செய்வதற்காக ஜோசப் என்ற ஊழியர் பட்ட பாடுகள் வழியாக அலுவலர்கள் படும் நாய்ப்பிழைப்பை, நாயைக் கொண்டே கேலி செய்யப்பட்டுள்ளது. வயிற்றைக் கழுவுவதற்காக விருப்பமில்லாமல் செய்கிற பணிகளைப் பற்றிய ஒரு குறியீடாக இக்கதை வெளிப்பட்டுள்ளது.

வரலாற்றைப் புனைவாக்கி செவ்வியல் தன்மையுடன் சந்திரகுப்த மௌரிய மன்னன் மக்கள் நலனுக்காக அரச வாழ்க்கையிலிருந்து விலகித் துறவியாவதைத் ‘துறந்தான் மறந்தான்’ என்ற கதை வாசகனைப் பரவசப்படுத்துகிறது.




**தேர்ந்தெடுக்கப்பட்ட இறையன்பு சிறுகதைகள்.**
**ந.முருகேசபாண்டியன்(தொ-ஆ)**
**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி)லிட்., சென்னை**
**பக்கம்:125; விலை.130/-**

டிக்காராம் என்ற ஐ.பி.எஸ். அதிகாரி, ராம்சிங் என்ற கொள்ளையனைப் பிடித்துக் கொல்கின்றார். அதனை உயர் அதிகாரியான மகேஷ்சிங்கிடம் தெரிவிக்கின்றார். அவர் ராம்சிங்கை ஏற்கெனவே கொன்று விருது பெற்றவர். ராம்சிங் உண்மையில் எப்போது இறந்தான் என்பது உண்மையின் பல முகங்களைத் தோலுரிப்பதாக ’விருது’ கதை அமைந்துள்ளது. வரலாறு என்பது ஒற்றையானது அல்ல பல வரலாறுகள் உள்ளன என்று பின்நவீனத்துவம் குறிப்பிடுவது, இறையன்புவின் ’விருது’ கதையில் நிரூபணமாகியுள்ளது.

மாணவர்கள் என்பவர்கள் போக்கிரித்தனம் செய்பவர்கள், ஊர் சுற்றுபவர்கள், வீண் அரட்டை அடிப்பவர்கள், பெண்கள் பின் திரிபவர்கள் என்ற சராசரி மனநிலையின் போக்கை, பிம்பத்தை உடைக்கும் விதமாகவும், அதே வேளையில் காதல் என்பது உடல்ரீதியான வேட்கை என்ற பொதுப்புத்தியை நொறுக்கும்விதமாக 'கல்லூரிக் காதல்' கதையை இறையன்பு எழுதியுள்ளது வியக்க வைக்கிறது. சேதுபதி என்ற சீனியர் மாணவர்

அறிவுரை , மாணவர்களின் நட்பு, உடன் படிக்கும் மாணவி மல்லிகையின் ஈர்ப்பு ஆகியவற்றைக் கல்லூரி மாணவனான கதைசொல்லியின் பார்வையில், எளிய சொற்களைக்கொண்டு கல்லூரி வாழ்வை வித்தியாசமாகக் கதையாக்கியுள்ள இறையன்புவின் புனைகதையின் வீச்சு தனித்து விளங்குகிறது.

இறையன்பு, புனைகதைகளைச் சொல்லிட வெவ்வேறு வடிவங்களையும் முறைகளையும் கையாண்டுள்ளார். இறையன்புவின் புனைகதைகள், ஜெயகாந்தனின் பாணியிலானவை என்று நாவலாசிரியர் எஸ்.ரா. கூறியிருப்பதாக ந. முருகேசபாண்டியன் தொகுப்புரையில் கூறியிருப்பது ஏற்புடையது. இறையன்புவின் புனைவுகள் அனுபவத்தின் அடிப்படையில் எழுதப்பட்டிருந்தாலும், வாழ்வின் யதார்த்த மனிதர்களை, அவர்களின் வாழ்வின் உன்னதங்களைக்கொண்டு புனைவாக்கம் செய்யப்பட்டவை என்பதில் வித்தியாசப்படவே செய்கின்றன. அவரது சொற்கள் மென்மையானவையாகவும், விழுமியங்களை முன்னிறுத்துபவையாகவும், அறச்சீற்றம் கொள்பவையாகவும் இருப்பதுடன், அதிகாரம், ஆணவம், வன்முறை போன்றவற்றைத் தகர்த்து எறிந்து மனித மாண்பின் உயர்வுக்கு வழிகாட்டுபவையாக உள்ளது.

தொகுப்பில் இடம் பெற்றிருக்கிற கதைகள் இறையன்புவின் கதை சொல்லும் முறை காரணமாக ஒவ்வொரு கதையிலும் வித்தியாசப்படுகின்றன. அந்த வேறுபாடு வாசகனை அயர்வின்றித் தொடர்ந்து அனைத்துக் கதைகளையும் வாசிக்கத் தூண்டுகிறது. அதற்கு இக்கதைகளைத் தேர்வு செய்து தொகுத்துக் கொடுத்துள்ள விமர்சகர் ந. முருகேசபாண்டியனின் உழைப்பும் காரணமாக இருக்கிறது. “வெறுமனே சம்பவங்கள் அல்லது அதிர்ச்சியளிக்கிற அனுபவங்களைக் கதையாக்குவது மட்டும் அவருடைய நோக்கமல்ல. ஒரு புனைகதையின் மூலம், அவர் நடப்பு வாழ்க்கையில் கண்டறிந்த உண்மைகளைப் பதிவாக்குவதுதான் முக்கியம்” எனத் தொகுப்புரையில் இறையன்புவின் கதைசொல்லல் குறித்து ந.முருகேசபாண்டியன் குறிப்பிட்டுள்ளதை இக்கதைகளை வாசிக்கும்போது, அறிய முடிகிறது.

●

**கட்டுரையாளர்: மேல்நிலைப்பள்ளி ஆசிரியர்.**


## உங்கள் நூலகம் சந்தாதாரர்களுக்கு ஒரு வேண்டுகோள்!



**உங்கள் நூலகம் சந்தாவினைப் புதுப்பிக்காதவர்கள் தொடர்ந்து உங்கள் நூலகம் இதழினைப் பெற புதுப்பித்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்**

**உங்கள் நூலகம்**
**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**
**41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,**
**அம்பத்தூர், சென்னை - 600 050.**
**தொலைபேசி எண் : 044-26251968, 26258410**

**பிப்ரவரி மாதத்துடன் முடிவடையும் சந்தாதாரர்களின் ரசீது எண்கள்**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 2674 | 2670 | 5520 | 1914 | 3750 | 7984 | 6881 |
| 2675 | 2671 | 5522 | 2677 | 3749 | 7985 | 6879 |
| 2676 | 5524 | 5521 | 2797 | 2975 | 5414 | 4711 |
| 2672 | 5525 | 5415 | 5824 | 7797 | 2389 | 1900 |
| 2673 | 5523 | 7798 | 1720 | 6880 | 5416 | 1899 |

தனி இதழ் ₹ 45.00 / ஆண்டு சந்தா ₹ 540.00
மாணவர்களுக்கு ₹ 500.00, / ஆயுள் சந்தா ₹ 5400.00
அயல்நாடு (ஆண்டு சந்தா) ₹ 4050.00

*சந்தாத் தொகையை*
**New Century Reader's Sangam**
**Central Bank of India**
**Ambattur Branch, Chennai - 600 050**
**A/c.No. 1035249018**
**IFSC Code : CBIN0282161**
*என்ற வங்கிக் கணக்கில் செலுத்தலாம்.*

**கிளைகள்**

அம்பத்தூர் 044 - 2635 9906, ஸ்பென்ஸர் பிளாசா 044-28490027, மதுரை 0452 - 2344106, 4374106, திருநெல்வேலி 0462 - 2323990, 4210990, திண்டுக்கல் 0451-2432172, கோயம்புத்தூர் 0422 2380554, சேலம் 0427-2450817, ஈரோடு 0424-2256667, கிருஷ்ணகிரி 04343-234387, ஓசூர் 04344 - 245726, ஊட்டி 0423 - 2441743 திருச்சி 0431 - 2700885, தஞ்சாவூர் 04362-231371, புதுக்கோட்டை 04322-227773, விழுப்புரம் 04146-227800, பாண்டிச்சேரி 0413 2280101, வேலூர் 0416-2234495, நாகர்கோவில் 04652 - 234990.

திறனாய்வு



# மானுடவியல் குறித்த முக்கியமான ஆவணம்



து. லோகபிரியா

தமிழ்ச்சூழலில் மானிடவியல் எனும் சொல்லாடலை உருவாக்கியவர் ஆய்வாளர் பக்தவத்சல பாரதி. புதுச்சேரி மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனத்தில் இயக்குநராகப் பணியாற்றி ஓய்வுபெற்றவர். தற்போது மானிடவியல் ஆய்வில் தீவிரமாக இயங்கி வருபவர். தமிழ் இலக்கியங்களை இனவரைவியல் அடிப்படையில் ஆராய்ந்தவர். மானிடவியல் கோட்பாடுகள், தமிழர் மானிடவியல், பண்பாட்டு மானிடவியல், பாணர் இனவரைவியல் முதலான இருபதுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதியவர். தவிர மானிடவியல் சார்ந்த நூல்களைப் பதிப்பித்தல், மொழிபெயர்த்தல் பணிகளையும் பக்தவத்சல பாரதி தொடர்ச்சியாகச் செய்து வருகிறார். பின்காலனியச் சூழலில் மானிடவியலை ஆராயும் நோக்கில் எழுதப்பட்ட இவருடைய புதிய நூல் ‘மானிடவியல் பேசுவோம்.’

மானிடவியல் துறை பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் வளர்ச்சி பெற்றது. காலத்தாலும் இடத்தாலும் அதன் எல்லைகள் மிக விரிந்தவை. மனித இனம், அதன் பண்பாடு, சமூகங்களின் அமைப்புகள், பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள், உறவுமுறைகள், மொழிக்கூறுபாடுகள் ஆகியவற்றையெல்லாம் கணக்கிலெடுத்துக்




**மானிடவியல் பேசுவோம், பக்தவத்சல பாரதி**
**அடையாளம் பதிப்பகம், விலை: ரூ.210**

கொண்டு முழு மனிதனை அடையாளம் காண மானிடவியல் முயல்கிறது.

அதிகாரம், பொருளாதாரம், அரசியல், சமயம், பண்பாடு என்பவை தொடர்பான பிரச்சினைகளையும், இவை எவ்வாறு காலனித்துவ ஆதிக்கத்தின் கீழ் தொழிற்படுகின்றன என்பன குறித்தும் பின்காலனியத் திறனாய்வு செயல்படுகிறது. மாற்று வரலாற்றை உருவாக்குதல்; திருப்பி எழுதுதல்; தன்சுயத்தை நிலைநாட்டும் பொருட்டு தன் வரலாற்றை எழுதுதல்; அடையாளங்களை மீட்டெடுக்கும் முயற்சியாக சுதேசியத்தை நிலைநாட்டுதல் ஆகியவற்றையும் பின்காலனியச் சிந்தனை செய்கிறது.

விடுதலைக்குப் பின்னர் பின்காலனியச் சூழலில் நாகரிக அடிப்படையிலான உலகமுறைமை எழுச்சி பெற்றது. அதனால் இன்றைய தமிழ்த் திறனாய்வு நெறியில் மேலைக்கோட்பாடுகளின் தாக்கம் மிகுதியாகக் காணப்படுகிறது. சங்க காலம், வேதாந்தம், சமணம், பௌத்தம், சைவ சித்தாந்தம் முதலானவை சுதேசி கோட்பாட்டுக்கு அடிப்படையான பண்டைய கோட்பாட்டு மூலங்கள். தொடக்க கால கோட்பாடுகள் தமிழ்ச் செவ்வியம், கருத்துமுதல்வாதம், பொருள்முதல்வாதம் முதலானவை. 'இவ்வுலக வாழ்வில் கருத்தே முதன்மையானது பொருட்கள் இரண்டாம் தரமானவை என்கிறது கருத்துமுதல்வாதம்.' இதனை பழைய எழுத்துகளில் 'இலட்சியவாதம்' என்கின்றனர். கருத்துமுதல்வாதத்திற்கு எதிரானது பொருள்முதல்வாதம். இன்பம் துய்த்தல், பொருள் தேடுதல், வாழ்வியல் ஆசை, புலனின்பம் ஆகியன மட்டும் மனிதனின் இலட்சியம் என்று கருதி மறுஉலகம் எதுவும் இல்லை என மறுக்கும் மக்கள்தான் சாருவாகர்களாக கொள்கையைப் பின்பற்றுபவர்கள். இந்தப் பொருள் தரிசனம்தான் உலகாயதம். இதுவே பொருள்முதல்வாதம் எனப்பட்டது. இனக்குழு மக்களின் அடிப்படை வாழ்வியல் சிந்தனை பொருள்முதல்வாதமே. இத்தகைய இனக்குழு பண்புகளைச் சங்க இலக்கியம் பேசுகிறது. இது ஆரம்பகால பொருள்முதல்வாதம்.

தொல்காப்பியம் இது தமிழின் முதல் அமைப்பியம் நூலாகக் கருதப்படுகிறது. தொல்காப்பியம் பெரும்பான்மை விளக்கமுறை இலக்கணமாக இருந்தாலும் விதிமுறை இலக்கணத்தையும் கொண்டுள்ளது. தொல்காப்பியத்தின் அமைப்பியல் கோட்பாட்டு வளர்ச்சிக்குப் பிறகு தமிழில் நிகழும் முயற்சி பொருள்கோடல் பற்றியதாகும். தமிழில் அடுத்து நிகழ்ந்த கோட்பாட்டு முயற்சி வரலாற்றியம். உ.வே.சா.வும் சி.வை.தா.வும் பழைய சுவடிகளைப் பதிப்பித்த பின்னர் பாடபேத ஆராய்ச்சியை அறிஞர்கள் மேற்கொண்டனர். இந்த ஆய்வுமுறை முழுக்க முழுக்க சுதேசியானது. பிற்கால பனுவல் திறனாய்வுக்கு இது அடித்தளமிட்டது. இவ்வாறு சுதேசிக் கோட்பாடு நம்மிடையே காணப்படுகிறது என்றும் மேலைக்கோட்பாடுகள் இன்றி சுதேசியக் கோட்பாடுகளைக் கொண்டு தமிழில் ஆய்வு மேற்கொள்ள முடியும் என்பதை 'அறிவுக் காலனியத்தில் சுதேசியம் பேசுதல்' எனும் பகுதியில் பக்தவத்சல பாரதி பேசுகிறார்.

'சுதேசிக் கோட்பாடுகளை நோக்கி' எனும் இவ்விரண்டாம் பகுதியில் நமக்கான அறிவு உருவாக்கத்தில் சுதேசிக் கோட்பாடுகளை நோக்கிப் பயணிக்க வேண்டும். சுதேசிக் கோட்பாடுகளைக்கொண்டு ஆய்வு மேற்கொள்ள வேண்டும் எனும் முயற்சியில் பல அறிஞர்கள் முயன்று வருகின்றனர். அவர்களுள் பேராசிரியர் க.பஞ்சாங்கம் முதன்மையானவர். இவரது பார்வையில் சுதேசிக் கோட்பாடு குறித்து பக்தவத்சல பாரதி விளக்குகிறார். கோட்பாடு என்பது தமிழில் நோக்குநிலை என்றனர். மேலைக் கோட்பாடுகள் 'ஆயத்த கோட்பாடுகள்'. சில அறிஞர்கள் நீண்ட அனுபவத்தின் ஊடாக சுதேசிக்

கோட்பாடு முயற்சிகளில் ஈடுபட்டனர். இத்தகைய முயற்சிகளை இங்கு நாம் 'கோட்பாடுகளை ஆயப்படுத்துதல்' என்கிறோம். இதில் ஆழங்கால்பட்டு முனைப்புடன் ஆய்வுகளைச் செய்து வந்தவர் க.பஞ்சாங்கம். கோட்பாடு என்பது மேலை அறிஞர்கள் மட்டுமே முன்வைக்க முடியும் என்பதில்லை. நம்மிடத்திலும் அறிஞர்கள் சிந்திக்கின்றனர் என்கிறார்.

வள்ளுவர் மற்றும் கார்ல் மார்க்ஸ் இவ்விருவரையும் ஒப்பியல் நோக்கோடு 'உலகளாவிய முதல் தேசவழமை சாசனம்' எனும் பகுதியில் ஆராய்கிறார். மனித குலத்தைப் பொதுவுடைமைச் சமூகமாக மாற்ற வேண்டும் என கனவு கண்டவர் கார்ல் மார்க்ஸ் என்றும் பொதுவுடைமைச் சித்தாந்தத்தை முதன்முதலில் முன்னெடுத்தவர் வள்ளுவர் என்றும் பக்தவத்சல பாரதி கூறுகிறார். மார்க்ஸ் இயங்கியல் பொருள்முதல்வாதத்தின்படி பொதுவுடைமையைக் கண்டார் என்றால், வள்ளுவர் தத்துவவியல் வாதத்தின்படி கண்டார் என்கிறார். உலகம் தழுவிய மானுடமே வள்ளுவரின் இலட்சியம். இதன் பொருட்டு அவர் உருவாக்கிய தன்னிகரில்லா கோட்பாடு 'உலகளாவியம்' அல்லது 'பொதுமையாக்கம்.' திருக்குறளில் குலம், குடி, பழங்குடி முதலான மானிடவியல் கூறுகளைக் கையாண்டுள்ளார் வள்ளுவர். உலகப் பொதுமையாக்கம் கூறிய வள்ளுவனின் குறளை பின்காலனிய நோக்கில் மானிடவியலோடு ஆராய்வதாக இப்பகுதி அமைந்துள்ளது.

கார்ல் மார்க்ஸ் தம்முடைய தொடக்க காலத்தில் மேற்கத்தியர் அல்லாத சமூகங்களின் பொருளீட்டும் முறையை 'ஆசிய உற்பத்தி முறை' எனக் குறிப்பிட்டார். மனித குலத்தில் ஆதியில் தோன்றிய புராதன சமூகத்தின் சிதைவால் ஆசிய உற்பத்திமுறை தோன்றியது. மனிதகுல வரலாற்றில் மார்க்ஸ் முன்னெடுத்த ஐந்து வகையான உற்பத்தி முறைகள் 1.புராதன முறை, 2.அடிமை முறை, 3.நிலமானிய முறை, 4.முதலாளித்துவ முறை, 5.பொதுவுடமை முறை. நிலமானிய முறையில் வேந்தர்கள் பிராமணர்களுக்குக் கொடுத்த நில தானங்கள் பிரமதாயம், பிரமதேயம், மங்கலம், சதுர்வேதிமங்கலம், தேவதானம், மடப்புரம், பள்ளிச்சந்தம் என்றெல்லாம் வழங்கப்பட்டதாக அறிய முடிகிறது. முடியாட்சிக் காலத்துக் கிராமங்களைக் காணும்போது பிரமதேயங்களைக் காட்டிலும் பழமையானவை வெள்ளான் ஊர்கள். இவ்வகை ஊர்களின் வளர்ச்சி முறையை ஆராய்வதால் தென்னிந்திய கிராமச் சமூகத்தின் வளர்ச்சியை அறிய முடியும். திராவிட உற்பத்தி முறையில் பொருளியல் சித்தாந்தம், உள்ளூர் சித்தாந்தம் பற்றி விளக்குகிறார். பொருளியல் சித்தாந்தம் தேசத்தையும், உள்ளூர் சித்தாந்தம் வாழ்வாதாரத்தையும் குறிப்பிடுகிறது. குடும்பத் திருமணமுறை, திராவிட உறவு முறை சார்ந்த உற்பத்தி முறை பொருளியல் இயங்கியலாக நிகழ்ந்து வந்துள்ளது. மார்க்ஸ் ஆசிய உற்பத்தி முறையையும், பிற அறிஞர்கள் திராவிட உற்பத்தி முறையையும் ஆராய்ந்தனர் என்பதை 'ஆசிய உற்பத்தி முறையில் திராவிடமுறை' எனும் நான்காம் இயலில் விரிவாக விளக்குகிறார் பக்தவத்சல பாரதி.


'புழங்குபொருள் பண்பாடு' எனும் கட்டுரையில், புழங்குபொருட்கள் நம் பண்பாட்டை மீட்டுருவாக்கம் செய்கிறது என்கிறார். நாம் அன்றாட வாழ்வில் இயற்கையிலிருந்து பெறப்பட்ட பொருட்களால் உருவாக்கப்பட்டு பயன்படுத்துகிற பொருட்களே புழங்குபொருட்கள். இயற்கையில் இருந்து கிடைக்கும் மூலப் பொருட்களைப் பயன்பாட்டுப் படைப்புகளாகவும், கலைப்படைப்புகளாகவும் உருவாக்கி அனுபவிக்கும் மானுட செயல்பாடுகள்தான் புழங்குபொருள் பண்பாடாகும். அவற்றுள் கைவினைப் பொருட்கள், கட்டடக்கலை ஆகியனவும் அடங்கும். மண், கல், இரும்பு, பொன், வெள்ளி ஆகியவற்றால் செய்யப்பட்ட புழங்குபொருட்கள் பண்பாட்டைத் தாங்கி நிற்பவை என்கிறார். புழங்குபொருட்கள் நம் மரபறிவைக் காட்டுபவை. இந்த மரபறிவு சுதேசி அறிவாகும். முக்காலி அடுப்பு, அரிக்கஞ்சட்டி, அப்பச்சட்டி, பிட்டுப் பானை, இடியாப்ப உரல், அறுவாய் பலகை, ஈயப் பாத்திரங்கள், உழி, துலா, மிதி கிணறு போன்ற பொருட்கள் மறைந்து விட்டன. இவை பண்பாட்டு அடையாளம் மற்றும் சமூக குழுக்களின் அடையாளம் முதலானவற்றை வெளிப்படுத்துகின்றன. இப்புழங்குபொருட்கள் பண்பாடுகளை மீட்டுருவாக்கம் செய்பவையாக அமைகின்றன.

'மானிடவியல் பேசுவோம்' என்ற இந்நூல் பின்காலனியச் சூழலை மானிடவியலுடன் பொருத்தி ஆராய்கிறது. மானிடவியலையும் பின்காலனியத்தின் தன்மைகளையும் இணைத்துப் புரிந்துகொள்ளும் வகையில் பல்வேறு உதாரணங்களுடன் இந்நூல் எழுதப்பட்டிருக்கிறது. பக்தவத்சல பாரதியின் மற்றொரு மிக முக்கியமான நூலாக இந்தநூல் இருக்கும்.

●

**கட்டுரையாளர்: முனைவர் பட்ட ஆய்வு மாணவி,**
**மாநிலக் கல்லூரி, சென்னை.**

கட்டுரை



# சு.சமுத்திரம்
## புதினங்களில் பொதுவுடைமைச் சிந்தனைகள்


ம. ஹரிகிருஷ்ணன்
முனைவர் அ. திலகவதி


தனக்கெனத் தனித்ததோர் இடத்தை எழுத்துலகில் தக்கவைத்துக் கொண்டவர் சு.சமுத்திரம் அவர்கள். அவரது படைப்புகளில் பல இடங்களிலும் பொதுவுடைமைச் சிந்தனைகளை எடுத்தாண்டுள்ளமையைக் காணமுடிகிறது. அத்தகைய உயரிய சிந்தனைகளைக் கண்டறிந்து வெளிக்கொணர்ந்திடும் நோக்கில் இக்கட்டுரை அமைகிறது.

**வர்க்க பேதம்' தவிர்த்தல் :**

'வெளிச்சத்தை நோக்கி' எனும் புதினத்தின் கதைத் தலைவன் மெய்யப்பன். இவன் அரசு அலுவலகம் ஒன்றில் பணிபுரிந்து வருகிறான். அந்த அலுவலகத்தின் மேலாளர், அங்குப் பணிபுரியும் வாணியிடம் நெறிபிறழ் நடத்தை கொண்டவராய் நடக்க முற்படுகிறார். இதனால் வாணி மிகுந்த மனவேதனையடைகிறாள். தன்னுடன் பணிபுரியும் மெய்யப்பனிடம் ஒரு சகோதரியாக தன்னுடைய நிலையை எடுத்துக் கூறுகிறாள்.

"மானேஜர், என் வீட்டுக்கு வந்திருந்தார். தங்கச்சி, தங்கச்சின்னு வார்த்தைக்கு வார்த்தை சொல்லுவார். அப்படிப்பட்ட மனுஷன். நேற்று என் கையை வலுக்கட்டாயமா பிடிச்சுக்கிட்டு நாளைக்கு சினிமாவுக்குப் போகலாமுன்னு கேட்கிறார்."[1] என்று கூறி வருந்துகிறாள். இதனைக் கேள்வியுற்ற மெய்யப்பன் வெகுண்டெழுகிறான். தன் மேலாளரிடம் சென்று,

"எதுக்கு ஸார் கண்ணாமூச்சுப் பேச்சு? வாணியக்காவ எதுக்காக சினிமாவுக்குக் கூப்பிட்டீங்க? உங்க பெண்டாட்டியை இன்னொருத்தன் இப்படிக் கூப்பிட்டால் சம்மதிப்பிங்களா? ஓங்களை மாதிரி ஆட்கள், சம்மதித்தாலும் சம்மதிப்பிங்க"[2] என்று கேட்டு கடிந்துரைக்கிறான்.

பணிபுரியும் இடங்களில் ஆடவர் மகளிர் எனும் வர்க்கபேத முரண்பாடுகள் இருப்பது முறையன்று. மேலதிகாரிகள் எனும் போர்வையில் தங்களுக்குக் கீழ் பணிபுரியும் மகளிரை இதுபோன்ற பாலியல் சீண்டல் செய்யும்போது அதனைக் கண்டிக்க / கடிந்துரைக்க வர்க்கபேதமின்றி ஆடவர் சகோதர உணர்வுடன் முன்வர வேண்டும் எனும் சிந்தனையை ஆசிரியர் வலியுறுத்துவதைக் காணமுடிகிறது.

**மற்றவருக்காக வாழ்தல் :**

'இல்லம் தோறும் இதயங்கள்' எனும் புதினத்தின், கதைத்தலைவி 'மணிமேகலை' இன்ஜினியராக பணிபுரியும் ஜெயராஜ் என்பவரை மணந்து வாழ்ந்து வருகிறாள். இந்நிலையில் அவளது முகத்தின் காதோரத்தில் சிறிய வெண் புள்ளி ஒன்று தோன்றுகிறது. அதனை மருத்துவரிடம் காண்பிக்கும்போது இது தொழுநோய்க்கான அறிகுறி என்கிறார். இதனையறிந்த ஜெயராஜ் அவளை அவளுடைய தாய்வீட்டிற்கு அனுப்பிவிட்டு, மறுமணம் செய்து கொள்கிறான். ஆனால், மணிமேகலையோ வீட்டைவிட்டு வெளியேறி தன்னைப் போன்றே நோயால் பாதிக்கப்பட்டும், ஆதரவற்றும் உள்ளவர்கள் உள்ள காப்பகத்தில் பணியில் சேர்கிறாள். பின்பு அந்தக் காப்பகத்தின் தலைவராகப் பொறுப்பேற்று,

"பூந்தமல்லிக்கு அருகே மதுரவாயல் என்ற சாலையோர கிராமத்தில் திருமதி லில்லி பிரபாகர் என்ற நிஜமான சமூக சேவகி குழந்தைகள் காப்பகம் ஒன்றை உருவாக்கி இருக்கிறாராம். நாடெங்கிலுமுள்ள பெரு வியாதிக்காரர்களின் பிள்ளைகளைக் கொண்டுவந்து நாள்தோறும் மும்முறை உணவளித்து, கல்வியளித்து, நற்பணி செய்வதாகக் கேள்வி. நாமும் ஏன் இந்த தாய்மார்களின் வசதியற்ற பிள்ளைகளைக் கொண்டுவந்து இதர அனாதைக் குழந்தைகளையும் கூட்டி வந்து ஒரு காப்பகம் கட்டக்கூடாது? மணிமேகலை அந்த காம்பவுண்டுக்குள் வெற்றிடம் ஒன்றை நோக்குகிறாள். அவள் மனவெளிக்குள் ஒரு கட்டிடம் எழுகிறது. குழந்தைகள் குவிகிறார்கள். கட்டிடம் பெரிதாகிக் கொண்டே வருகிறது. குழந்தைகளின் எண்ணிக்கை கூடிக்கொண்டே வருகிறது."[3] எனும் கூற்றிலிருந்து, மணிமேகலையின் தியாக உள்ளமும் தாயுள்ளமும் பொதுநல நோக்கும் வெளிப்படுவதைக் காணமுடிகிறது. தன்னுடைய வாழ்க்கையை இழந்தபோதும் பிறரை, வாழ வேண்டும் என நினைப்பதும் வாழ வைக்க முற்படுவதும் மிக உயரிய பொதுவுடைமைச் சிந்தனை ஆகும். இதனை ஆசிரியர் மணிமேகலையின் செயல்பாட்டின்வழி அறிவுறுத்துவதைக் காணமுடிகிறது.

**மூன்றாம் பாலினத்தவரின் பொதுவுடைமைச் சிந்தனை**

'வாடாமல்லி' எனும் புதினத்தின் கதைத்தலைவன் சுயம்பு. இவன் சென்னையில் பொறியியல் படிப்பைப் படித்து வந்தான். பின்பு காலப்போக்கில் அவன் உடலில் தோன்றிய பாலின மாற்றத்தால் திருநங்கையாக மாறிவிடுகிறான். பிறகு வீட்டைவிட்டு பெற்றோரால் துரத்தப்படுகிறான். சிறிது காலம் சென்னையில் வாழும் திருநங்கைகளோடு சேர்ந்து வாழ்கிறான். இந்நிலையில், டெல்லி செல்கிறான். அங்கு திருநங்கைகளின் மாதாவிடம் மேகலை எனும் பெயரில் வளர்ப்பு மகளாக வளர்ந்து வருகிறான். அப்போது அவனது வளர்ப்புத்தாயிடம் ஒருவர்,

"நாங்க போபாலுல இருந்து வாரோம். முர்கே மாதாவுக்கு ஒரு கோயில் கட்டுற விஷயமா. ஆமா. உங்க லெட்டர் கிடைச்சது. கோவில் கட்ட எவ்வளவு செலவாகும்" எனக் கேட்க, மேகலை அவசர அவசரமாய்க் குறுக்கிட்டாள். "எம்மா. முர்கேமாதாவுக்கு கோவில் கட்டட்டும். வேண்டான்னு சொல்லல. ஆனால் அந்தக் கோவிலோட கோவிலா, நம்மள மாதரி பிறப்பெடுத்து சூடுபட்டவங்களுக்கும், தெருவுல தூக்கியெறியப்பட்டவங்களுக்கும் ஒரு சத்திரம் சேர்த்து கட்டனும்னு சொல்லுங்கம்மா" என்கிறாள்.

"என் ராசாத்தி இந்தத்திட்டம் எனக்கு வரல பாரு. சரி. அப்புறமா இவங்ககிட்ட பேசி மொத்தம் எவ்வளவு ஆகுதுன்னு கணக்கு பாரு. பாதிச் செலவ நாம குடுத்திடலாம்."[4] என்கிறாள். திருநங்கைகளின் வாழ்விற்காக சுயம்பு கூறும் இக்கூற்று ஒவ்வொருவரிடமும் இருந்தால் யாரும் யாராலும் துன்புறும் நிலை உருவாகாது. எல்லாரும் எல்லாமும் பெறுகின்ற சூழல் உருவாகும்.

**ஒற்றுமையுடன் போராடுதல் :**

'நெருப்புத்தடயங்கள்' எனும் புதினத்தில் கலாவதி என்ற பெண் அவளது உறவினர்களாலேயே வன்கொடுமை செய்யப்படுகிறாள். இதனை அறிந்த அவளது உறவினளான தமிழரசி அவ் அநீதியை எதிர்த்து காவல் நிலையம் நோக்கி போராட்டத்தை மேற்கொள்கிறாள். அதனைக் கண்ட "ஊர் மக்கள், மரம் வெட்டுபவர்கள், கிணறு தோண்டுபவர்கள், விவசாயக் கூலிகள் உட்பட ஏழை எளியவர்கள் நடந்த கூட்டத்தில், ஒதுங்கியிருந்த சேரிமக்களில் பலரும் சேர்ந்து கொண்டார்கள். வாலிபப்பையன்கள், வயதுப்பெண்கள், விடலைப்பயல்கள், முதியவர்கள் என்று சமூகத்தின் எல்லா வயதுகளுக்கும் பிரதிநிதித்துவம் காட்டும் கூட்டம் நிராயுத பாணியாய்த் தோன்றினாலும், போர்ப்பரணிப் பார்வையோடு போய்க் கொண்டிருந்தது. போலீஸ்காரர்களையும், பணக்காரர்களையும் எதிர்க்க முடியும் போலுக்கே என்று பலர் வியந்து கொண்டார்கள்."[5] எனும் இக்கூற்றின்மூலம் நீதிக்கு எதிராக செயல்படுவர்களை ஒற்றுமையுடன் கூடி எதிர்த்தால் நீதியை நிலைநாட்ட இயலும் என்பதை அறியமுடிகிறது. மேலும், சமுத்திரம் அவர்களின் 'சத்திய ஆவேசம்' புதினத்திலும் அநீதிக்கு எதிரான

போராட்டங்களை பதிவு செய்துள்ளமையைக் காணமுடிகிறது.

**மத நல்லிணக்கம் / சகோதரத்துவம் :**

இந்து - முஸ்லீம் மக்களிடையே நிகழ்ந்த மதக்கலவரத்தை மையமாகக் கொண்டு எழுதப்பட்டது 'மூட்டம்' எனும் புதினமாகும்.

மேலப்பாளையம் எனும் கிராமத்தில் உள்ள மசூதியை யாரோ இடித்துவிடுகின்றனர். அதனால் அங்குள்ள இந்து மக்கள் மீது முஸ்லீம்களுக்கு கோபம் உண்டாகிறது. இதனால் அப்போது வெகுண்டெழுந்தவர்கள் அங்கு வந்த முத்துக்குமார் என்ற இளைஞனை வெட்டுவதற்கு செல்கின்றனர். அவர்களிடமிருந்து முத்துக்குமாரை,

"முத்துக்குமார் கண்ணடிப்பதா? இவன் நடிக்கான்! இவனைத்தான் முதல்ல முடிக்கணும். பொல்லாத போக்கிரி. காதர்பாட்சா இப்போது கூட்டத்திலிருந்து விடுபட்டு, முத்துக்குமாரின் முன்பக்கம் தனது முதுகைச் சாய்த்தபடியே சர்வசாதாரணமாகக் கேட்டான்.

"யாராவது இவனை வெட்டணுமின்னா வெட்டுங்க! அப்படி வெட்டினால், அவன் தலையோட என் தலையும் சேர்ந்துதான் விழும். முத்துக்குமார் உணர்ச்சிப் பெருக்கில் பாட்சாவின் கழுத்தைக் கட்டிக் கொண்டு விம்மி விம்மி அழுதான்"[6] என்பதிலிருந்து காதர்பாட்சாவின் சகோதரத்துவ / மதநல்லிணக்க சிந்தனையை அறியமுடிகிறது. இச்சிந்தனை அனைவரிடமும் மேலோங்க வேண்டும்.

**உழைப்புச் சுரண்டலை எதிர்த்தல் :**

'தாழம்பூ' எனும் புதினத்தில் சரோசா என்பவள் சாராயத் தொழில் செய்து வருகிறாள். அவளை இளங்கோ என்பவன் அத்தொழிலை விட்டு மாற்றி, அவன் வேலை செய்யும் அரசு அலுவலகத்தில் தற்காலிக உதவியாளர் பணியில் சேர்த்து அவளுக்கு உதவிபுரிகிறான். அவ்வலுவலகத்தில் பணியாற்றும் பலரும் அவளிடம் வேலை வாங்கி அவளது உழைப்பைச் சுரண்டுகின்றனர். அவளுக்கு சம்பள நாள் அன்று தற்காலிகத்துக்கு சம்பளம் இல்லை என்று கூறி அவமானப்படுத்துகின்றனர். உழைப்பைச் சுரண்டிக்கொண்டு ஊதியம் தராமல் இருப்பதை கேள்விப்பட்டு அங்கு வந்த இளங்கோ,

"இந்தப் பொண்ணு நியூசென்ஸ் காரின்னா, நாமெல்லாம் அரசாங்கக் கேடிங்க. ஒரு மாசமா நாய் படாத பாடா உழைச்சிட்டு அதுக்குப் பலன் கிடைக்கலன்னா அவள் குலைக்கத்தான் செய்வாள். நாமா இருந்தால் கடிச்சிருப்போம். நம்பவச்சு கழுத்தறுத்துட்டீங்களே! இந்தாம்மா சரோசா. ஏன் அழுவுறே? இந்தா, என் சம்பளம் முழுசும். ஒனக்கு வேலைக்குக் கூலியாயும், இவங்களோட அகம்பாவத்துக்கு அபராதமுமாவும் தாறேன். இளங்கோ, ஆவேசப்பட்டு தனது சட்டைப் பையைக் கிழித்தான். அந்த வேகத்தில் இடது கையிலிருந்த பை அவனது வலது கைக்குள் ஒரு சதுரத்துணியாக நூறு ரூபாய் நோட்டுக்களோடு வெளியிடப்பட்டது. அந்தத் துணியோடு அந்த நோட்டுக்களை சரோசாவின் கைக்குள் திணித்தான்."[7] எனும் இக்கூற்றின்வழி அறியமுடிகிறது. ஒருவருடைய உழைப்பினைச் சுரண்டும்போது அவர்களுக்குத் துணையாக நின்று நீதியைப் பெற்றுத்தருவது உயர்ந்த சிந்தனையாகும்.

**பொருந்தா மணத்தைத் தடுத்தல் :**

'வளர்ப்பு மகள்' எனும் புதினத்தில், சொக்கலிங்கம் – பேச்சியம்மா தம்பதியர்களுக்குக் குழந்தை இல்லாததால் அவன் தங்கை செல்லம்மாவின் குழந்தையைத் தத்து எடுத்து வளர்த்து வருகிறான். அப்போது அவனுக்கு ஆண்வாரிசு இல்லை என்ற ஏக்கத்தால், ஓர் இளம் வயது பெண்ணைத் திருமணம் செய்ய ஏற்பாடு செய்யப்படுகிறது. இதனை, கேள்விப்பட்ட மல்லிகா வெகுண்டெழுகிறாள்.

"மல்லிகா அழைப்பிதழை வாயில் கடித்துக் கொண்டே யோசித்தாள். பெண் விடுதலை பேசும் இந்தக் காலத்திலா இப்படி? ஒருத்தி, ஏழையாகப் போய்விட்டால், அவளை யாரும் வாங்கலாம் என்பது இன்னும் நடக்குதே. மாமா சொத்தைக் காப்பாற்ற நினைத்தால், இந்த பேச்சியம்மாவையே தத்து எடுத்து மகளாய் வளர்க்கலாமே! அப்பாவா இப்படிச் செய்கிறார்? அப்பா அல்ல, அப்பாவோட பணம். பணத்தை, வாலிபமாய் பெண்கள் நினைக்கிறார்கள் என்கிற அகங்காரம். இதை தடுத்தே ஆகணும்."[8] என்று அத்திருமணத்தை தடுக்க முயற்சி செய்கிறாள். அதற்கு அவளின் பெற்றோரும்,

"செல்லம்மா பதறினாள். மல்லிகா என்னம்மா இது? இது உங்களுக்குப் புரியாதும்மா. இது ஒரு இளம்பெண்ணோட விவகாரம். விற்பனைக்கு வந்திருக்கிற ஒருத்தியோட எதிர்காலப் பிரச்சினை. வாங்கப்பா போகலாம். பணம் இருக்கா? கோணி வாங்க ஐம்பது ரூபாய் இருக்கு. பரவாயில்ல. நாம பட்டினிகூட கிடக்கலாம். கேணியில் ஒரு பெண்ணை தள்ளப்போவதை நாம் பார்த்துட்டு நிற்கப்படாது வாங்கப்பா"[9] என்று மல்லிகா மற்றும் அவளது பெற்றோர் பொருந்தா மணத்தைத் தடுத்து நிறுத்துகின்றனர்.

**பாலியல் சீண்டலைத் தடுத்தல் :**

சாமியாடிகள் எனும் புதினத்தின் கதை மாந்தர்களில் ஒருத்தி ரஞ்சிதம்(தொழிலாளி). அவள் பீடி சுற்றி வருகிறாள். அவளிடம் பீடி ஏசெண்ட் ராமசாமி (முதலாளி)

"இப்பவே ஒன் சேலயப் பிடிச்சு இழுக்கேன். ஒன் கள்ளப்புருஷன்ல எந்தப் பய வந்து காப்பாத்துறான்னு பாக்கலாம்."[10] எனும் கூற்றின்மூலமும்;

"செம்பட்டையான் பெண்களைப் பயமுறுத்துவதற்காவது ரஞ்சிதத்தை ஏதாவது செய்ய வேண்டும். ஒப்புக்காவது, அவள் தோளில் கிடக்கும் முந்தானையைக் கீழே இழுத்துப் போட வேண்டும். செறுக்கி மவள்" எனவும், "ஏசெண்டு, ரஞ்சிதத்தை, அடிமேல் அடிவைத்து நெருங்கினான். என்ன செய்யப் போகிறோம் என்பது தெரியாமலே – அதேசமயம், ஏதாவது செய்ய வேண்டும் என்ற வீறாப்புடன் நெருங்கினான்."[11] எனும் கூற்றின்மூலமும் சில ஆடவர்களின் நெறிபிறழ் நடத்தைகளும், அத்துமீறல்களும், பாலியல் சீண்டல்களும் சமுதாயத்தில் இருப்பதைக் காணமுடிகிறது.

இதனைக் கண்ட ரஞ்சிதம் மற்றும் உடன் பீடி சுற்றும் பெண்கள், வெகுண்டெழுகின்றனர்.

"ஏய் பால்பாண்டி நீ நெசமாவே மனுஷன்னா ரஞ்சிதத்த தொடு பார்க்கலாம். என்னடா நெனச்சே. பன்னிப்பயலே. ஒருத்தி இரண்டாவது கணையைத் தொடுத்தாள். இதையடுத்து எல்லாப் பெண்களும் முந்தியடித்துப் பேசினார்கள். ஒரு பொம்புளய, அதுவும் ஒத்த வீட்டு பொண்ண, அடிக்கவாறியே நீயுல்லாம் ஆம்புளையாடா. பீடிக் கம்பெனில நீ பெரிய வேலைக்காரன். நாங்க சின்ன வேலைக்காரிவ. எங்கள வராதன்னு நீ எப்படிடா சொல்லலாம்"[12] என்று ஒன்று கூடி எதிர்க்கின்றனர். இதுபோன்ற நிலைகளில் மகளிர் பொதுவுடைமைச் சிந்தனை கொண்டவர்களாய் செயல்பட வேண்டும்; துணிவுடன் போராட முன்வர வேண்டும்.

**பட்டினி :**

'ஒரு கோட்டுக்கு வெளியே' புதினத்தில், குட்டாம்பட்டியில் வசித்து வருபவன் அருணாசலம். பி.ஏ. படித்துவிட்டு வேலை தேடிக் கொண்டிருப்பவன். அவன் வசித்து வந்த ஊரில் பயங்கரமான வெள்ளம் வருகிறது. இதனால் ஊரே அடித்துச் செல்லும் நிலை ஏற்படுகிறது. இதனால் ஊரைக் காப்பாற்ற குளம் உடைபடுவதிலிருந்து தடுக்க உபரி நீரைத் திறந்து விடும்படி அருணாசலம் உண்ணாவிரதம் மேற்கொள்கிறான்.

"பயங்கரமான வெள்ளத்தால், நெல்லை மாவட்டமும், இதர மாவட்டங்கள் போல பலமாகப் பாதிக்கப்பட்டது. குட்டாம்பட்டிக் குளத்திற்கு, ராம நதியின் உபரி நீர் விரைவில் வெள்ளமாக வரும் என்று எதிர்பார்க்கப்பட்டதால், குளம் உடையாமல் இருக்க, மதகைத் திறக்கும்படி ஹரிஜனங்கள் சொன்னதை – அதனால் தங்கள் சேரி அழியும் என்று சொன்னதை – நிலபிரபுக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. இதை ஆட்சேபித்து, அருணாசலம், மதகருகே ஒரு கட்டிலைப்போட்டு படுத்துக்கொண்டு, சேரி மக்களின் பேச்சையும் கேட்காமல், சாகும்வரை அல்லது மதகுகள் திறக்கப்படும்வரை, இந்த இரண்டில் எது முன்னால் வருகிறதோ அதுவரை உண்ணாவிரதம் இருக்கப் போவதாக, படுத்துக்கொண்டே அறிவித்தான்."[13] என்பதால் அறியமுடிகிறது. அருணாசலம் ஊர் மக்கள் நலனுக்காக உண்ணாவிரதம் இருப்பதிலிருந்து அவனின் பொதுவுடைச் சிந்தனையை அறியமுடிகிறது. இவ்வுயரிய பண்பு அனைவரிடத்தும் மேலோங்க வேண்டும்.

**பிறருக்கு ஏற்படும் துன்பத்தை தடுத்தல் :**

'பாலைப்புறா' எனும் புதினத்தில், கலைவாணி மனோகர் என்பவனைத் திருமணம் செய்துகொள்கிறாள். இந்நிலையில் மனோகரால் அவளுக்கு எய்ட்ஸ் நோய் பரவுகிறது. இதனால் அவள் அவனை வெறுத்து, சுமதி என்பவளிடம் தற்காலிக உதவியாளராகப் பணிபுரிந்து வருகிறாள். அப்போது,

"மிஸ்டர் பத்மநாபன் இருக்காரா? நீங்கதானா. ஒங்களோட எதிர்கால மருமகன் ரகோத்தமன் எயட்ஸ் கிருமிகள் உள்ளவர் சார். கல்யாணம், கருமாந்திரத்தில முடியும் சார். நான் சொல்வதில் சந்தேகம் வந்தால், நம்பிக்கையான டாக்டர்கிட்டே அந்தப் பையனை டெஸ்ட் செய்து பாருங்க. என் பேரா? கோணசத்திரத்தில் இருக்கிற கலைவாணி. டாக்டர் சுமதியோட தற்காலிக உதவியாளர்"[14] என்று கூறி எய்ட்ஸ் நோய் உள்ள ஒருவனுக்கு ஒரு பெண்ணுடன் நடக்க இருந்த திருமணத்தைத் தடுத்து அப்பெண்ணின் வாழ்க்கையைக் காப்பாற்றுகிறாள். பிறகு, 'எய்ட்ஸ் திருமண தடுப்பு இயக்கம்' என்ற தன்னார்வ அமைப்பு ஒன்றை நடத்தி,

"ஐந்தாறு எய்ட்ஸ் கல்யாணத்தைத் தடுத்திருக்கோம். ஹெச்.ஐ.வி. பெண்களுக்கு வேலை கொடுத்திருக்கோம். பல நோயாளிகளுக்கு பயனுள்ள தொழில்களை நடத்தப்போறோம்.

நம்மகிட்ட யோசனை கேட்க எத்தனையோ பேர் காத்திருக்காங்க. நம்ம அமைப்போட பெயர், நாலு பக்கமும் இடிபடுது"[15] எனும் கூற்றால் ஒருவரிடம் உண்டாகும் பொதுவுடைமைச் சிந்தனை பலரையும் காப்பாற்றி நல்வழிப்படுத்தி வாழ வைக்கும் என்பதை அறியமுடிகிறது.

## தொகுப்புரை :

ஒரு மனிதனுக்கு கிடைக்கின்ற அனைத்து வசதிகளும் மற்றொரு மனிதனுக்கும் கிடைக்க வேண்டும் என்று கூறுவது பொதுவுடைமைச் சிந்தனை ஆகும்.

எங்கெல்லாம் அலுவலகங்களில் அதிகார துஷ்பிரயோகம் நடக்கிறதோ அதைத் தட்டிக் கேட்டல் வேண்டும். பிறர் துன்பம் போக்க போராடுதல் வேண்டும்.

அனைவருக்கும் அனைத்தும் கிடைக்க வேண்டியது பொதுவுடைமை. மனிதர்களுக்கிடையே நிகழும் பிரச்சினைகளுக்கு எதிராக ஒன்றுகூடி ஒற்றுமையுடன் போராடி நீதியை நிலைநாட்டுதல் வேண்டும். அனைவரிடமும் மதநல்லிணக்கமும் சகோதரத்துவமும் வளர வேண்டும். சமுதாயத்தில் நிகழும் பாலியல் சீண்டல், உழைப்புச் சுரண்டல் முதலியவற்றிற்கு பொதுநலத்துடன் போராட அனைவரும் முன் வருதல் வேண்டும்.

முதலாளி - தொழிலாளி இடையே உள்ள வர்க்கப்பிரிவினையை போக்கிட வேண்டும். ஒருவரின் நேர்மை சமுதாயத்தில் பொதுவுடைமைச் சிந்தனையை மேலும் வலுப்பெறச் செய்யும்.

அரசு / தனியார் அலுவலகங்களில் பணிபுரிவோர் நேர்மையோடும், மனிதநேயத்தோடும் நடந்து கொள்ளுதல் வேண்டும் ஆகிய பொதுவுடைமைச் சிந்தனைகளைத் தமது புதினங்களில் சு.சமுத்திரம் அவர்கள் பதிவு செய்துள்ளமையைக் காணமுடிகிறது.

### சான்றெண் விளக்கம் :

1. வெளிச்சத்தை நோக்கி, ப.43
2. மேலது, பக்.43-44
3. இல்லம் தோறும் இதயங்கள், ப.232
4. வாடாமல்லி, ப.251
5. நெருப்புத்தடயங்கள், பக்.288-289
6. மூட்டம், ப.79
7. தாழம்பூ, பக்.255-256
8. வளர்ப்புமகள், ப.107
9. மேலது, ப.107
10. சாமியாடிகள், ப.160
11. மேலது, ப.160
12. மேலது, பக்.160-161
13. ஒரு கோட்டுக்கு வெளியே, ப.152
14. பாலைப்புறா, பக்.271-272
15. மேலது, பக்.331-332

### துணைநூற் பட்டியல் :


1. அரங்க சுப்பையா, இலக்கியத் திறனாய்வு கொள்கைகள், பாவை பப்ளிகேஷன்ஸ், சென்னை – 600 014, பதிப்பு: 2007
2. சமுத்திரம் சு, ஒரு கோட்டுக்கு வெளியே, திருவரசு புத்தக நிலையம், 23, தீன தயாளு தெரு, தியாகராய நகர், சென்னை–600017, பதிப்பு:1977
3. சமுத்திரம். சு, வளர்ப்பு மகள், திருவரசு புத்தக நிலையம், 23, தீன தயாளு தெரு, தியாகராயநகர், சென்னை – 600017, பதிப்பு:1980
4. சமுத்திரம். சு, இல்லம் தோறும் இதயங்கள், கங்கை புத்தக நிலையம், 23, தீன தயாளு தெரு, தியாகராய நகர், சென்னை – 600017, பதிப்பு:1982
5. சமுத்திரம். சு, நெருப்புத் தடயங்கள், கங்கை புத்தக நிலையம், 23, தீன தயாளு தெரு, தியாகராய நகர், சென்னை – 600017, பதிப்பு:1983
6. சமுத்திரம். சு, வெளிச்சத்தை நோக்கி, திருவரசு புத்தக நிலையம், 23, தீன தயாளு தெரு, தியாகராய நகர், சென்னை – 600017, பதிப்பு:1989
7. சமுத்திரம். சு, நிழல் முகங்கள், ஏகலைவன் பதிப்பகம், இரண்டாவது குறுக்குத் தெரு, டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர், சென்னை– 600041, பதிப்பு:1991
8. சமுத்திரம். சு, சாமியாடிகள், திருவரசு புத்தக நிலையம், 13, தீன தயாளு தெரு, தியாகராய நகர், சென்னை – 60001, பதிப்பு:1991
9. சமுத்திரம். சு, தாழம்பூ, திருவரசு புத்தக நிலையம், 23, தீன தயாளு தெரு, தியாகராய நகர், சென்னை – 600017, பதிப்பு:1992
10. சமுத்திரம். சு, மூட்டம், ஏகலைவன் பதிப்பகம், 9, இரண்டாவது குறுக்குத் தெரு, டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர், சென்னை–600041, பதிப்பு:1994
11. சமுத்திரம். சு, வாடாமல்லி, பாவை பப்ளிகேஷன்ஸ், 142, ஜானி ஜான் கான் சாலை, இராயப்பேட்டை, சென்னை–600014, பதிப்பு: 1994
12. சமுத்திரம். சு, பாலைப்புறா, ஏகலைவன் பதிப்பகம், 9, இரண்டாவது குறுக்குத் தெரு, டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர், சென்னை – 600041, பதிப்பு:1998



●


**கட்டுரையாளர்: ம. ஹரிகிருஷ்ணன்**
முனைவர் பட்ட ஆய்வாளர் (முழு நேரம்),
முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை,
அரசு ஆடவர் கலைக்கல்லூரி, கிருஷ்ணகிரி.

**நெறியாளர்: முனைவர் அ.திலகவதி,**
இணைப்பேராசிரியர், முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை,
அரசு ஆடவர் கலைக்கல்லூரி, கிருஷ்ணகிரி.

கட்டுரை

# தமிழில் 'தாய்' நாவல் மொழிபெயர்ப்புகளும் அதற்குப் பிந்தைய தமிழ் நாவல் போக்குகளும்



*கார்க்கியின் படைப்புகள் பல தமிழுக்கு மொழிபெயர்க்கப் பட்டிருந்தாலும் அவரின் தாய் நாவலானது முக்கிய இடத்தைப் பெறுகிறது. தமிழ் மொழிபெயர்ப்பு வரலாற்றில் அதிகமுறை மொழியாக்கமும், பதிப்பும் செய்யப்பட்ட இரஷ்ய நாவல் 'தாய்' என்பது குறிப்பிடத்தக்கது. அம்மொழிபெயர்ப்புகளை அறிமுகம் செய்வதோடு, அதிக முறை மொழியாக்கம் செய்யப்பட்டதற்கான பின்புலத்தையும், மொழிபெயர்ப்பின் தாக்கத்தினால் தமிழ் நாவல் போக்கில் நிகழ்ந்துள்ள மாற்றங்களையும் இக்கட்டுரை ஆராய்கிறது.*

**தமிழ் மொழிபெயர்ப்பில் தாய் நாவல்**

தமிழில் தாய் நாவல் ஐந்து முறை மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது. இதன் முதல் மொழிபெயர்ப்பு காலனிய காலத்தில் ‘அன்னை (1946)’ எனும் பெயரில் ப.ராமஸ்வாமி என்பவரால் மொழியாக்கம் செய்யப்பட்டது. இதன் பிறகு இடதுசாரி இயக்கத்தைச் சார்ந்த மொழிபெயர்ப்பாளர் தொ.மு.சி.ரகுநாதனால் 1952ஆம் ஆண்டு மொழியாக்கம் செய்யப்பட்டு ஸ்டார் பிரசுரத்தின் வெளியீடாக வெளியானது. இந்நாவலை சோவியத் இரஷ்யாவின் முன்னேற்றப் பதிப்பகத்திற்காக தொ.மு.சி.ரகுநாதன் 1975ஆம் ஆண்டு மீண்டும் மொழியாக்கம் செய்துள்ளதையும் கவனத்தில்கொள்ள வேண்டும். இவ்விருமொழிபெயர்ப்புகளும் ‘தாய்’ என்ற தலைப்பிலேயே வெளியாகின. இருப்பினும் தொ.மு.சி.யின் முதல்

**கா.தங்கதுரை**
**த.ஜெகதீசன்**

மொழிபெயர்ப்பை ஒப்பிடுகையில் இரண்டாவது மொழிபெயர்ப்பு பல்வேறு திருத்தங்களுடன் வெளியிடப்பட்டுள்ளது நோக்கத்தக்கது. இவை தனியாக ஆய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டியவை.

முல்லை முத்தையாவின் மொழியாக்கம் 'அம்மா (1956)' எனும் பெயரில் இன்ப நிலைய வெளியீடாகவும், சிவனின் மொழியாக்கம் 'தாய் (2019)' எனும் பெயரில் கலா நிலைய வெளியீட்டிலும் வந்துள்ளன. தமிழ் மொழிபெயர்ப்புகளை மூல நாவலுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது, அவை சுருக்கமாக அமைந்துள்ளதை அறியமுடிகிறது. இறுதியாக சத்யாவின் மொழியாக்கத்தில் 'தாய்' நாவல் 2021ஆம் ஆண்டு பொன்னுலகத்தின் பதிப்பில் வெளியானது. இவற்றைத் தவிர கலைஞர் கருணாநிதியின் 'தாய் காவியம் (2004)' தழுவல் மொழிபெயர்ப்பாக அமைந்துள்ளது.

## தாய் நாவல் தமிழ்ச்சூழலில் தொடர்ந்து மொழிபெயர்க்கப்பட்டதற்கான காரணம்

காலனிய காலம் முதல் தற்காலம் வரை தாய் நாவலானது மொழிபெயர்ப்பில் ஆதிக்கம் செலுத்திவருகிறது. ஆங்கில அரசின் கடும் நெருக்கடிகளுக்கு மத்தியில் இந்நாவலை முதலில் மொழியாக்கம் செய்தவர் ப.ராமஸ்வாமி ஆவார். இந்தியச் சுதந்திரப் போராட்டத்தில் தீவிரமாக ஈடுபட்ட அவருக்கு மக்களிடையே காலனிய ஆட்சிக்கு எதிராகச் சுதந்திர உணர்வை ஊட்ட முற்போக்கு இலக்கியங்கள் தேவைப்பட்டன. அதன் அடிப்படையிலேயே ஆங்கிலமறிந்த ப.ராமஸ்வாமி பிற மொழி இலக்கியங்களையும், போராளிகளின் வாழ்க்கை வரலாறுகளையும் தமிழில் மொழிபெயர்ப்பு செய்தார். குறிப்பாகத் 'தான் பிரீன் (Dan Breen)' 'மைக்கேல் காலின்ஸ் (Michael Collins)' போன்ற போராளிகளின் வரலாற்றை ஆங்கில அரசின் தடையை மீறி மொழிபெயர்த்தார். இதனை,

"அயர்லாந்தில் விடுதலைப் போரில் ஈடுபட்டிருந்த சிலரைப் பற்றித் தமிழில் எழுத வேண்டிய அவசியம் எனக்கு ஏற்பட்டது. 1932ஆம் ஆண்டு முதல் இரண்டு வருடம் திருச்சி சிறையில் மூன்றாவது வகுப்புக் கைதிகளாக என்னோடு நூற்றுக்கணக்கான இளைஞர்கள் இருந்து வந்தனர். அவர்களில் ஆங்கிலப் படிப்பு இல்லாதவரே பெரும்பாலோர். அவர்களுக்காக நான் தமிழில் எழுதிய நூல்களிலே அயர்லாந்தைப் பற்றியவை மூன்று; 'மைக்கேல் காலின்ஸ்' சரித்திரம், டெரன்ஸ் மாக்ஸ்வினியின் 'சுதந்திரத்தின் தத்துவங்கள்', 'தான் பிரீன்' சரித்திரம். இந்த மூன்றில் முந்தியவை இரண்டும் முன்பே வெளிவந்துவிட்டன. 1947 வரை நம் நாடு அடிமைப்பட்டிருந்ததால், 'தான் பிரீன்' சரிதையை வெளியிட இயலவில்லை, ஏனெனில் இதற்கு ஆதாரமான மூல நூல் இந்திய நாட்டினுள் வரக் கூடாதென்று கடற் சுங்கச் சட்டத்தின்படி ஆங்கில அரசாங்கம் தடை செய்திருந்தது"[1]


எனத் தான் பிரீன், மைக்கேல் காலின்ஸ் ஆகிய நூல்களின் முன்னுரையில் குறிப்பிட்டுள்ளதன் மூலம் அறிந்துகொள்ளமுடிகிறது. இதன் தொடர்ச்சியாகவே அன்னை நாவலும் மொழியாக்கம் செய்யப்பட்டது. காலனிய ஆட்சிக்காலத்தில் 'தாய்' நாவலுக்கு இந்தியாவில் தடை விதிக்கப்பட்டிருந்ததையும், சுதந்திரப் போராட்ட வீரர்கள் இந்நாவலை இரகசியமாக வாசித்ததையும் 'சோவியத் இலக்கியம் பற்றி ஜீவா (2018)' எனும் நூலின் முன்னுரையில் இளவேனில் குறிப்பிட்டுள்ளதைக் கருத்தில் கொள்ள வேண்டும். எனினும் ப.ராமஸ்வாமி 'தாய்' நாவல் மொழிபெயர்ப்பில் ஈடுபட்டமைக்கான காரணத்தை முன்னுரையில் வெளிப்படையாகக் குறிப்பிடவில்லை. ஆனால் நாவலின் முன் பகுதியில்,

"இந்த நூலில் வரும் பேவலைப் போன்ற உண்மை ஊழியரான நண்பர் வே.வீரபாகு அவர்களுக்கும் எங்களோடு உழைத்துவந்த சகல தொண்டர்களுக்கும்"[2]

என விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு சமர்ப்பணம் செய்யும் குறிப்பு இடம்பெற்றுள்ளது.

இந்தியாவில் 1950களின் பிற்பகுதியில் இடதுசாரி இயக்கங்கள் பண்ணையடிமை முறைக்கு எதிராகத் தீவிரமான போராட்டத்தைக் கையிலெடுத்ததோடு, மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதன் பொருட்டு முற்போக்குச் சிந்தனை கொண்ட இலக்கியங்களை இரஷ்யாவிலிருந்து இறக்குமதி செய்தனர். அதே போல் முற்போக்கு இலக்கியங்களைப் படைக்க வேண்டிய தேவையும் தமிழ்ச்சூழலில் உருவானது. இதன் ஒரு பகுதியாக இடதுசாரி இயக்கத்தைச் சார்ந்த தொ.மு.சி.ரகுநாதன் 'தாய்' நாவலை மொழியாக்கம் செய்ததுடன், கார்க்கியைப் பின்பற்றி 'பஞ்சும் பசியும் (1953)' எனும் நாவலையும் தமிழில் எழுதினார். 'தாய்' நாவல் ஏற்கெனவே 'அன்னை' எனும் பெயரில் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ள நிலையில் அதை மீண்டும் மொழிபெயர்ப்பு செய்தமைக்கான காரணத்தை தொ.மு.சி.ரகுநாதன் 'முற்போக்கு இலக்கிய இயக்கங்கள் (1994)' எனும் நூலில்,

"ப.ரா. என்ற ப. ராமஸ்வாமி (இவர்தான் நாற்பதாம் ஆண்டுகளின் பிற்பகுதியில் மாக்சிம்




கார்க்கியின் 'மதர்' என்ற நாவலை 'அன்னை' என்ற தலைப்பில் சுருக்கி மொழிபெயர்த்து வெளியிட்டார்; தாய் என்ற தலைப்பில் நான் செய்தது முழுமையான மொழிபெயர்ப்பு"[3]

எனக் குறிப்பிட்டுள்ளார். ப.ராமஸ்வாமியும் தமது மொழிபெயர்ப்பில் சிறு பகுதிகள் விடுபட்டு இருப்பதை அன்னை நாவல் மொழிபெயர்ப்பு முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார். எனினும் பிற்காலங்களில் முழுமையாக மொழியாக்கம் செய்யவேண்டும் என்ற எண்ணம் ப.ராமஸ்வாமிக்கு இருந்துள்ளதையும் அம்முன்னுரையின் வழியாக அறியமுடிகிறது. ப. ராமஸ்வாமி மற்றும் தொ.மு.சி.ரகுநாதன் ஆகியோரின் மொழியாக்கத்திற்குப் பிறகு முல்லை முத்தையாவின் மொழிபெயர்ப்பு 'அம்மா (1956)' எனும் பெயரில் வெளிவந்தது. ஏற்கெனவே உள்ள மொழிபெயர்ப்பு நாவல்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது இம்மொழிபெயர்ப்பு 'தாய்' நாவலின் சுருக்கமாக அமைந்துள்ளது. குறைந்தவிலையில் இந்நாவலை மக்களிடம் கொண்டு சேர்க்கவேண்டும் என்ற நிலையில் இம்மொழியாக்கம் நடைபெற்றுள்ளதை 'அம்மா (1956)' நாவலின் பாராட்டுரையில் ப.ஜீவானந்தம்,





"கார்க்கியின் இந்த ஒப்பற்ற இலக்கியம் நண்பர் ப.ரா. வால் 'அன்னை' என்றும், தோழர் ரகுநாதனால் 'தாய்' என்றும் ஆங்கிலத்திலிருந்து முழுவடிவில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. 'அம்மா' மூலம் அன்பர் முல்லை முத்தையா சிறிய அளவில் ஆனால் கதைக்கோவை சிதையாமல், எளிய, இனிய நடையில், கார்க்கியின் நாவலைத் தமிழாக்கி, தமிழ் மக்களுக்கு அளிக்கிறார். அளவில் சுருங்கி விலையில் மலிந்து வருவதால் 'அம்மா' ஆயிரக்கணக்கான தமிழ்மக்களின் கரங்களை அலங்கரிப்பாள் என்பதில் ஐயமில்லை"[4]

எனக் குறிப்பிட்டுள்ளதன் மூலம் தெரிந்து கொள்ளமுடிகிறது.

ப.ராமஸ்வாமியின் மொழிபெயர்ப்பு ரூபாய் 25க்கும், ரகுநாதனின் மொழிபெயர்ப்பு ரூபாய் 8க்கும், முல்லை முத்தையாவின் மொழிபெயர்ப்பு ரூபாய் 2-க்கும் அன்றைய காலக்கட்டத்தில் விற்பனை செய்யப்பட்டதைக் கருத்தில் கொண்டு இம்முடிவுக்கு வரலாம்.

முல்லை முத்தையாவின் மொழிபெயர்ப்பைப் போல சிவனின் மொழிபெயர்ப்பும் 'தாய்' நாவலின் கதைச் சுருக்கமாக அமைந்துள்ளது. ப.ராமஸ்வாமி மற்றும் தொ.மு.சி.ரகுநாதன் போல அரசியல் வரலாற்றுப் பின்புலத்தில் 'தாய் (2019)' நாவல் மொழிபெயர்ப்பில் சிவன் ஈடுபட்டதாகத் தெரியவில்லை. மூன்று மொழியாக்கங்கள் இருக்கின்றபொழுது சிவன் ஏன் மொழிபெயர்ப்பில் ஈடுபட்டார் என்ற வினாவிற்கு நேரடியான சான்றாதாரங்கள் அவரின் மொழிபெயர்ப்பில் கிடைக்கவில்லை. ஆனால் சிவனின் மற்ற மொழிபெயர்ப்பு பணிகளைப் பார்க்கும்பொழுது உலகப் புகழ்பெற்ற புனைகதைகளைத் தமிழ் வாசகர்களுக்குச் சுருக்கமாக அறிமுகப்படுத்த வேண்டுமென்ற எண்ணத்தில் தாய் நாவலையும் மொழிபெயர்ப்பு செய்துள்ளதை விளங்கிக்கொள்ளமுடிகிறது. எடுத்துக்காட்டாக உலக இலக்கிய வரிசை எனும் பெயரில் தஸ்தாயெவ்ஸ்கி, ஹோமர், அலெக்ஸாண்டர் டூமாஸ், லியோ டால்ஸ்டாய், சார்லஸ் டார்வின், ஹெர்மன், ஜார்ஜ் எலியட் மற்றும் மார்க் ட்வைன் போன்றவர்களின் பல படைப்புகளை மொழிபெயர்ப்பு செய்துள்ளார்.




தமிழில் இறுதியாக சத்யாவின் மொழியாக்கத்தில்

'தாய்' நாவல் வெளியானது. இதற்கு முந்தைய மொழிபெயர்ப்புகளில் காணப்பட்ட குறைபாடுகள் இம்மொழியாக்கத்தில் சரி செய்யப்பட்டுள்ளன. பல மொழிபெயர்ப்புகளுக்கு மத்தியில் தாய் நாவலை மீண்டும் மொழியாக்கம் செய்ததற்கான காரணத்தை சத்யா மொழிபெயர்ப்பாளரின் குறிப்பில்,

"ஆகப்பெரிய வெற்றியடைந்த ஒரு புத்தகத்தை மீண்டும் மொழியாக்கம் செய்வது ஒரு பெரும் சிக்கல் நிறைந்த வேலை. அப்படி ஒன்றை வெளியே சொல்லுவதும் கூட பெரும் சங்கடத்தைக் கொடுக்கும், வெளியே சொல்லும்போதெல்லாம், 'புதுசா என்னத்தை கிழிக்கப் போற' என்ற கேள்விகள், பல்வேறு வடிவங்களில், பல்வேறு நாகரிகப் பூச்சுகளுடன் பளபளப்பாய் கேட்கப்பட்டன. அந்தக் கேள்விகளில் இம்மியளவும் பிழையில்லை. அந்தளவுக்கு 'தாய்' நாவல் முந்தைய தலைமுறையின் சொத்தாக மாறிப்போன ஒன்று. ஏன் கலைஞர்கூட 'தாய்' நாவலைத் தழுவி, 'இளைஞன்' என்ற படம் எடுத்தார். அப்படி இருக்கையில் 'தாய்' ஏன் மீண்டும் மொழிபெயர்க்கப்பட வேண்டும் என்ற கேள்வி எனக்குள்ளேயே கூட இருந்தது உண்மைதான். இருப்பினும் அறுபது வருடங்கள் கழித்து மீண்டும் 'தாய்' நாவலை மொழிபெயர்க்க அதன் உட்கருத்தும் அதைப் புதிய வாசகர்களுக்குக் கொண்டு சேர்க்க வேண்டும் என்ற பேராசையும்தான் காரணமாய் இருந்தது"[5]

எனக் குறிப்பிட்டுள்ளார். வளர்ந்து வரும் கால மாறுதல்களுக்கு ஏற்ப தமிழில் பிற மொழிகளின் தொடர்பால் புதிய சொற்கள் உருவாகிக் கொண்டு இருக்கின்றன. அறுபது ஆண்டுகளுக்கு முன்பு மொழிபெயர்ப்பில் பயன்படுத்திய பல சொற்கள் இன்று பயன்பாட்டில் இல்லை. இக்கால மாற்றத்திற்கு ஏற்ப இலக்கியங்களை மொழிபெயர்ப்பு செய்து வாசகர்களுக்கு அளிக்க வேண்டும் என்ற சத்யாவின் எண்ணம் வெளிப்படுகின்றது. மேலும் சத்யா இம்மொழிபெயர்ப்பில் ஈடுபட மற்றுமொரு காரணமாக அவர் ஏற்றுக்கொண்டிருக்கின்ற இடதுசாரியக் கொள்கையும் முக்கியக் காரணம் எனலாம்.

### 'தாய்' நாவல் மொழிபெயர்ப்புக்குப் பிந்தைய தமிழ் நாவல் போக்குகள்

தமிழில் 'தாய்' நாவல் மொழி பெயர்க்கப்பட்ட பின்னர், பல இடதுசாரி எழுத்தாளர்கள் கார்க்கியைப் பின்பற்றி சோசலிச எதார்த்தவாத நாவல்களைப் படைக்கத் தொடங்கினர். அவற்றுள் முதன்மையானவர்களாக தொ.மு.சி.ரகுநாதன், கு.சின்னப்ப பாரதி, டி.செல்வராஜ் போன்றோரைக் குறிப்பிடலாம். இப்படைப்புகள் கற்பனைவாதத்தை தவிர்த்து எதார்த்தவாதத்திற்கு முதலிடம் கொடுத்தது. சமூகத்தில் காணப்பட்ட விளிம்புநிலை மக்கள், தொழிலாளர்கள், விவசாயக் கூலிகள் இந்நாவல்களில் தலைமைக் கதாபாத்திரங்களாகத் திகழ்ந்தனர். இலக்கியம் என்பது சமூக எதார்த்தத்தைப் பிரதிபலிப்பதுடன், வர்க்கச் சார்புடையதாகவும் பிரச்சினைகளைக் கண்டறிந்து தீர்வைச் சுட்டுவதாகவும் இருக்க வேண்டும் என்ற கருத்து தமிழ் இலக்கியச் சூழலில் நிலைபெற்றது.

தமிழின் முதல் சோசலிச எதார்த்தவாத நாவல் 'பஞ்சும் பசியும்' ஆகும். இந்நாவலைப் படைத்துத் தமிழில் முற்போக்கு இலக்கியம் தோன்றக் காரணமாக இருந்தவர் 'தாய்' நாவலை இருமுறை மொழியாக்கம் செய்த தொ.மு.சி.ரகுநாதன் ஆவார். 1953ஆம் ஆண்டு வெளிவந்த இந்நாவல் அரசின் தவறான ஜவுளிக் கொள்கையாலும் தாதுலிங்க முதலியார் போன்ற பெருமுதலாளிகளின் சுரண்டலாலும் பாதிக்கப்பட்ட நெசவாளர்களின் வாழ்கையையும், அச்சுரண்டலுக்கு எதிரான போராட்டத்தையும் மையமாகக் கொண்டு படைக்கப்பட்டுள்ளது. இந்நாவலில் இடம் பெற்றுள்ள ஊர்வலக் காட்சி, 'தாய்' நாவலில் வரும் ஊர்வலக் காட்சியுடன் ஒத்துக் காணப்படுகிறது.

கு.சின்னப்ப பாரதியின் சர்க்கரை நாவல் ஏழை கரும்பு விவசாயிகள் மற்றும் கரும்பாலைத் தொழிலாளர்களின் மீதான முதலாளித்துவத்தின் சுரண்டலையும் அதற்கு எதிராக அவர்கள் ஒன்றிணைந்து போராடி உரிமைகளைப் பெறுவதையும் எடுத்துரைக்கிறது. தாகம் நாவல் நிலவுடைமை சமூகத்தின் கொடுமைகளைப் பிரதிபலிக்கின்றது. இக்கொடுமைக்கு எதிராக விவசாயக் கூலித் தொழிலாளர்கள் சாதிய ஏற்றத்தாழ்வுகளைக் கடந்து போராடுவதைக் காட்சிப்படுத்துகிறது. இப்படைப்புகள் கார்க்கியிடமிருந்து பெற்ற உந்துதலால் உருவானவை என்பதை,

"மகத்தான ரஷ்யப் புரட்சி உருவாக்கிய உலகப் பாட்டாளி வர்க்கத்தின் முன்மாதிரி இலக்கியக் கர்த்தாவாக மலர்ந்த கார்க்கி வகுத்த அந்தப் பாதை எமக்கு வழிகாட்டும் பாதை. அதனால்தான் இந்த மூன்று நாவல்களும் ஆங்கிலம், ஹிந்தி, தெலுங்கு, மலையாளம் போன்ற மொழிகளில் வரவேற்பைப் பெறுகின்றன"[6]

என கு. சின்னப்ப பாரதி 'நானும் எனது எழுத்தும் (2001)' எனும் நூலில் குறிப்பிடுகிறார். மேற்கு வங்கத்தில் உள்ள நிலக்கரிச் சுரங்கங்களில் கள ஆய்வு செய்து எழுதப்பட்ட நாவல் சுரங்கம் ஆகும். இந்நாவல் அம்மாநில மக்களின் பண்பாட்டைப் பிரதிபலிப்பதுடன், சுரங்கத் தொழிலாளர்கள் அனுபவிக்கும் கொடுமைகளை எடுத்துரைத்தது.

டி.செல்வராஜின் தோல் நாவல் திண்டுக்கல் மாவட்ட தோல் பதனிடும் தொழிலாளர்களின் துயரங்களையும், தலித் மக்கள் சாதிய அமைப்புகளால் ஒடுக்கப்படுவதையும் சித்தரிக்கின்றது. நெல்லை மாவட்ட தலித் விவசாயக் கூலி மக்களின் 'மரக்கால்' போராட்டத்தை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட நாவல் 'மலரும் சருகும்' ஆகும். இந்நாவல் காலம் காலமாக ஒடுக்கப்பட்ட தலித் மக்களின் வாழ்க்கை அனுபவங்களைப் பிரதிபலிப்பதுடன், அம்மக்களுக்கு எதிரான சாதிய சுரண்டலையும் வெளிக்காட்டுகிறது.

டி.செல்வராஜின் நாவல்கள் 'தாய்' நாவல் மொழிபெயர்ப்பு தாக்கத்தால் உருவானவை என்பதற்கான அகச்சான்றுகளை அந்நாவல்களில் காணமுடிகிறது. எடுத்துக்காட்டாக தோல் நாவலில் வரும் வேலாயுதம், இருதயசாமி ஆகியோர் சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் பொழுது அவர்கள் படிப்பதற்காக சங்கரன் அன்னை நாவல் மொழிபெயர்ப்பைக் கொண்டுவந்து கொடுக்கிறான். வேலாயுதம் சிறையில் பாவெலைப் பற்றியும், அவனது அன்னை மற்றும் தோழர்களைப் பற்றியும் எடுத்துரைப்பது இருதயசாமிக்குப் புது அனுபவமாகப் படுகின்றது.

பஞ்சும் பசியும் நாவலில் வரும் மணி, வடிவேலு முதலியார், சர்க்கரை நாவலில் வரும் வீரன், தோல் நாவலில் இடம் பெறும் ஓசோப்பு, தாகம் நாவலில் வரும் கந்தன், மாயாண்டி போன்ற கதாபாத்திரங்களில் 'தாய்' நாவலின் நாயகன் பாவெலின் சாயல் தென்படுகிறது. இவர்கள் அனைவரும் சாதாரண மக்களாக இருந்து இடதுசாரி இயக்கத் தோழர்களின் தொடர்பால் போராளிகளாக மாற்றம் அடைந்தவர்கள். இத்தகைய சான்றாதாரங்களைக் கொண்டு தாய் நாவல் மொழிபெயர்ப்புகளினால் தமிழில் சோசலிச எதார்த்தவாத நாவல்கள் தோற்றம் பெற்றது எனலாம்.

### சான்றெண் விளக்கம்


- *ப. ராமஸ்வாமி (மொ.பெ)., தான் பிரீன், 1953, ப.5.*
- *ப.ராமஸ்வாமி (மொ.பெ)., அன்னை, 1946, ப.3.*
- *தொ.மு.சி.ரகுநாதன்., முற்போக்கு இலக்கிய இயக்கங்கள், 1994, ப.22.*
- *முல்லை முத்தையா., அம்மா, 1956, ப.iv.*
- *சத்யா., தாய், 2021, முன்னுரை.*
- *நா. சந்திரசேகரன்., நானும் என் எழுத்தும், 2001, ப.72.*


### துணை நூல்கள்


- *ராமஸ்வாமி. ப (மொ.பெ)., அன்னை. ஸ்டார் பிரசுரம், திருச்சிராப்பள்ளி, 1946.*
- *ரகுநாதன், தொ.மு.சி (மொ.பெ)., தாய். நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2003.*
- *ரகுநாதன், தொ.மு.சி (மொ.பெ)., தாய். ஸ்டார் பிரசுரம், சென்னை, 1952.*
- *ரகுநாதன், தொ.மு.சி (மொ.பெ)., தாய். முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1975.*
- *முல்லை முத்தையா (மொ.பெ), அம்மா. இன்ப நிலையம், சென்னை, 1956.*
- *சிவன் (மொ.பெ), தாய். கலா நிலையம், சென்னை, 2019.*
- *சத்யா (மொ.பெ), தாய். பொன்னுலகம் புத்தக நிலையம், திருப்பூர், 2021.*
- *ராமஸ்வாமி. ப (மொ.பெ)., தான் பிரீன். மணிமேகலை பதிப்பகம், மதுரை, 1953.*
- *ராமஸ்வாமி. ப (மொ.பெ)., வாழ்க்கை. பழனியப்பா பிரதர்ஸ், சென்னை, 1956.*
- *சந்திரசேகரன். நா., நானும் என் எழுத்தும். உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 2001.*
- *ரகுநாதன். தொ.மு.சி., முற்போக்கு இலக்கிய இயக்கங்கள், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை: 1994.*


●


**கட்டுரையாளர்: கா.தங்கதுரை**
**முனைவர் பட்ட ஆய்வாளர்,**

**நெறியாளர்: த.ஜெகதீசன்**
**தமிழ் உதவிப் பேராசிரியர்,**
**இந்திய மொழிகள் துறை, பனாரஸ் இந்து பல்கலைக்கழகம்,**
**வாரணாசி, உத்திரப் பிரதேசம்.**

திறனாய்வு



# குடிநீராக விளங்கிய தாமிரபரணி தண்ணீர்





**மீ. பார்வதி**

**முனைவர் மு. கலாமாரி**


பொருநை நாடு தென்பாண்டி நாட்டின் நெஞ்சகம் ஆகும். இந்நாட்டில் இயற்கையின் அழகை வெளிக்காட்டும் வகையில், மலைகளும் வளமான அருவிகளும் ஆறுகளும், விளங்குகின்றன. திருநெல்வேலி மாவட்டத்தில், மேற்குத் தொடர்ச்சி மலையில் பாய்கின்ற பொருநை ஆறானது இம்மாவட்டத்தின் உயிராகவும் உயர்ந்த செல்வமாகவும் மதிக்கப் பெறுகின்றது. இந்த பொருநை ஆற்றுக்கு தண்பொருநை, தாமிரவருணி என்ற பெயர்களும் உண்டு. இதனை ஆசிரியர் கே.வே. பெருமாள் பொருநை வளம் என்ற நூலில் பொருநை ஆற்றின் சிறப்பு, கம்பராமாயணத்தில் பொருநை, இலக்கியத்தில் பொருநை, பொருநையின் புராணம், பொருநை நாடு ஆகியவை பற்றி மிகச் சிறப்பாக எடுத்துரைக்கிறார்.

## பொருநை ஆற்றின் சிறப்பு:

பொதிகை மலையில் தோன்றிய பொருநை நதியானது தவழ்ந்து அழகாக ஓடி வருகிறது. இதன் வருணனையை ஆசிரியர் கே.வே.பெருமாள் விளக்குகிறார். அவை,

**மந்தமா ருதம் வளர் வதோர் மலைய மென்றயுறையுஞ்**
**சந்த மால் வரை தவழ்ந்து இழி தரும் தாம்பிர வருணி**
**அந்தமா நதி தீர முற்றமைவுறு அழகார்**
**கந்தமா மரவனம் உளதென முகம் கரைந்தாய்** (1)

என்ற பாடல் வரிகளில் இளந்தென்றல் வீசுகின்ற அழகிய பெருமலையில் பொருநை ஆகிய தாமிர வருணியானது தரையில் இறங்கி ஓடுகின்ற பேராற்றின் கரையில் மாஞ்சோலை காணப்படுகிறது என்று இடம் பெற்றுள்ளது.

### கம்பராமாயணத்தில் பொருநை:

தென்பாண்டி நாட்டில் உள்ள பொதிகை மலையும், பொருநை ஆறும் மிகப் பழமை வாய்ந்தவையாகும். கம்பராமாயணத்தில் பொருநை ஆற்றின் பழமையினை ஆசிரியர் கே.வே. பெருமாள் எடுத்தாள்கிறார் அவை,

**"தென் தமிழ் நாட்டு அகன் பொதியில் திரு**
**முனிவன் தமிழ்ச் சங்கம் சேர்கிற்றிரேல்**

என்றும்

**அவன் உறைவிடம் ஆகும் ஆதலால்**
**அம்மலையை இறைஞ்சி ஏகி,**
**பொன் திணிந்த புனல் பெருகும் பொருநை**
**எனும் திருநதியும் பின்பு ஒழிய**
**அகன்று வளர் தடஞ்சாரல் மயேந்திரமா**
**நெடுவரையும் கடலும் காண்பீர்".[2]**

என்ற பாடல் வரிகளில், சுக்கிரீவன் தலைமையில் தெற்கு நோக்கி சீதையைத் தேடிச், செல்லும் அனுமனிடம், இராமன் "நீ எந்த வேலைக்காக அனுப்பப்படுகிறாய் என்பதை நன்கு உணர்வாய். நீ செல்லும் வழியில் பொருநை ஆறுபாயும் பொதிகை மலை உள்ளது. அகத்தியர் நடத்தும் தமிழ்ச் சங்கமும் உள்ளது. நீ அங்கு போனால் தமிழரின் சுவையில் மனதை பறிகொடுத்து விடுவாய் அதனால் அம்மலையைக் கடந்து, மயேந்திர மலைப்பக்கமாக செல்லுவாயாக" என்று கூறினார்.

### இலக்கியத்தில் பொருநை:

சங்க இலக்கியம், சிற்றிலக்கியம், நாலாயிரதிவ்யப்பிரபந்தம், திருவிளையாடல் புராணம், பெரியபுராணம் போன்றவற்றில் தன் பொருநை ஆறு இடம்பெறும் விதம் பற்றி கே.வே.பெருமாள், மிகச்சிறப்பாக விளக்குகிறார்.

சங்க இலக்கியங்களில் பொருநை என்றும் தண் ஆன் பொருநை என்றும் பெயர் பெற்றுள்ளது.

சேக்கிழார் ஆக்கிய பெரிய புராணத்திலே (திருநாவுக்கரசு நாயனார்) தண் பொருந்தம் புனல் நாடு என்று குறிப்பிடப்பெற்றுள்ளது.

பரஞ்சோதி முனிவர் ஆக்கிய திருவிளையாடற்புராணம், பொதிகை என்னும் மலை மடந்தை பெருகு தண் பொருநை என்றும் புனைந்துரைத்துள்ளது.

கம்பராமாயணத்தில் பொன் திணிந்த புனல் பெருகும் பொருநை என்னும் திருநதி என்று காட்டுகின்றது.

நம்மாழ்வார் அருளிய திருவாய் மொழியிலே இந்த ஆறு பொருநல் என்று வழங்கப்பெற்றுள்ளது.

முக்கூடற்பள்ளு என்னும் சிற்றிலக்கியத்திலே பொருநை ஆறு பெருகி வர புதுமை ஆடும் பள்ளீரே! என்று புலப்படுத்தப் பெற்றுள்ளது.

கலிங்கத்துப் பரணி என்னும் நூல் பொருநைக் கணவனை வாழ்த்தினவே என்று போற்றுகின்றது.

இராசராச சோழன் உலா பொருநை என்று புகழ்ந்துள்ளது.

மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் பொருநைத் துறைவன்,

பொற்பாவாய், புதுநீர் ஆடி அருளுகவே என்று புகன்றுள்ளது.

பகழிக் கூத்தர் வழங்கியுள்ள திருச்செந்தூர் பிள்ளைத்தமிழ் என்னும் நூல் தண்பொருநைப் பேராற்றிலே, தமிழ் நாகரிகம் மணக்கும் கருத்து புனைந்துரைக்கப் பெற்றுள்ளது.

இவ்வாறு பேரிலக்கியங்களும் சிற்றிலக்கியங்களும் தண் பொருநை ஆற்றினையும் நாட்டினையும், தமிழ் நாகரிகத்தின் பிறப்பிடமாக தமிழ் நாகரிகத்தின் பிறப்பிடமாக வரைந்து பறைசாற்றுகின்றன.

### புறநானூற்றில் பொருநை:

புறநானூற்றில் பொதிகை மலையின் சிறப்பினைப் பற்றி முரஞ்சியூர் முடிநாகராயர் விளக்குகிறார் அவை,

**"நடுக்(கு) இன்றி நிலையரோ....**
**பொன்கோட்டு இமயமும் பொதியமும் போன்றே"! [3]**

என்று ஆசிரியர் கே.வே. பெருமாள் புறநானூற்றுப் பாடலில் இடம்பெறும் பொதிகை மலையினைப் பற்றி எடுத்துரைக்கிறார்.

### பாரதியார் பாடலில் பொருநை:

பொருநை நதியினைப் பற்றி பாரதியார் கூறியதை ஆசிரியர் கே.வே. பெருமாள் கூறுகின்றார், அவை,

**"காவிரி தென்பெண்ணை பாலாறு-தமிழ்**
**கண்டதோர் வைகை பொருநைநதி -என"[4]**

என்ற பாடல் வரிகள் ஆகும்.

### பொருநையின் புராணம்:

பொருநை வளத்தின் ஆசிரியர் பொருநை நதி உருவான புராணக் கதையினை விளக்குகிறார்.

அகத்திய முனிவர் சிவபெருமானிடம் திருமணக் கோலத்தைக் காண வேண்டும் என்று வேண்டினார். அகத்தியரே தென்திசையில் உள்ள பொதியமலையில் தவம் புரிக, யாமே அங்கு வந்து எம் திருமணக்கோலத்தைக் காட்டுவோம் என்று கூறினார். தமக்கு தீர்த்தம் அருளுமாறு வேண்டிய அகத்தியருக்கு கங்கையின் தண்ணீரை கமண்டலத்தில் நிறையச்செய்தார் சிவபெருமான். அந்நீரோடு பொதிகை மலைக்கு வந்து தவம் புரிந்தார் அகத்தியர். பொதிகைமலைச் சாரலில் உள்ள பாபநாசத்திலே, சித்திரை முதல் நாளிலே'' இறைவன் அகத்திய முனிவருக்கு தம் திருமணக்கோலக் காட்சி அருளினார். கமண்டலத்தில் உள்ள நீரைப் பொதிகை மலையில் விடுமாறு பணித்தார். அதுவே தண்பொருநை ஆறாக மலைச்சாரல்களின் வழியே பாய்ந்து ஓடியது.''(5)

இந்த ஆற்று நீரில் மூழ்குகின்றவர்களின் பாவங்கள், கரும வினைகள் முதலிய தீமைகள் நீங்கிவிடும். இதுவே பொருநை நதி தோன்றிய புராணக்கதை ஆகும்.

### பொருநையில் மோட்சம்:

அத்தாள நல்லூரில் உள்ள கஜேந்திர வரதர் பெருமாள் கோயிலில் பொருநை ஆற்றங்கரையில் கஜேந்திரன் என்ற யானைக்கு மோட்சம் அளித்த திருமாலின் பெருமைகளைப் பற்றி கீழே காணலாம். அகத்திய மன்னரால் சாபமேற்ற இந்திரத்துய்மன் என்ற பாண்டிய மன்னன் யானையாக மாறினார். தேவலோகமுனிவர் சாபத்தால் கந்தருவன் முதலையாகி விட்டார். அத்தாள நல்லூரில் உள்ள பொருநை ஆற்றங்கரையில் இந்திரத்துய்மன் என்ற யானை குளித்துக் கொண்டிருக்கும் பொழுது, கந்தருவன் என்ற முதலை கவ்வியது, இதனை,

**"குஞ்சர ராசன் வந்து குழும்பிய பிடிகளோடு**
**மஞ்சன மாடி விழுந்து வண்டினம் மிழற்றும் செய்ய**
**பஞ்சத காலம் ரண்ணப் பற்றி திடங்கள் மாதோ(6)**

என்ற பாடல் வரிகள் விளக்குகிறது. யானையானது வேதனையால் பெருமாளை "ஆதிமூலமே'' என அழைத்தது. உடனே பெருமாள் கருட வாகனத்தில் தோன்றி முதலையினை கொன்று யானைக்கு மோட்சம் அளித்தது. இதனை,

**"வட்டமாய் நேமி தன்னை மலர் கணால் நோக்க மாயோன்**
**விட்டிகழ் ஒளியிற் சென்று விறல் கர(வு) இரு துண்டாக**
**வெட்டியே விடவாய்ச் செய்ய வெந்நிறல் முதலையாகப்**
**பட்ட அவ்வுருவம் நீங்க பழம் படியாகிற்றன்றே(7)**

என்ற பாடல் வரிகள் விளக்குகிறது.

### பொருநை நாடு:

பொருநை ஆறு புறப்படும் முதல் வட்டத்தை அம்பாசமுத்திரம் வட்டம் என்பர். இவ்வட்டத்தின் தெற்கு மேற்கு எல்லையாக மேற்குத் தொடர்ச்சி மலைகள் அமைந்துள்ளன. பெருங்கடல் போல நீரை உடைய குளத்தை சமுத்திரம் என்றனர். நாயக்க மன்னர் காலத்திலே இங்கு வந்து குடியேறிய "படைத்தலைவர்கள் பெயர்களால், பெருங்குளங்கள் பல ஆங்காங்கே அமைந்தன. இராவணன், அம்பா என்பவர்களுடைய பெயரால் தென்பாண்டி நாட்டிலே ஊர்கள் அமைந்தன. அவை முறையே இரவணசமுத்திரம், அம்பாசமுத்திரம் என வழங்கப் பெற்று வருகின்றன''.(8) இவ்வூர்களைச் சுற்றி பொருநை நதி பாய்கிறது என்று ஆசிரியர் கே.வே. பெருமாள் கூறுகிறார்.

கம்பராமாயணம், சங்க இலக்கியம், சிற்றிலக்கியங்கள் போன்றவற்றில் பொருநை நதி இடம் பெற்றுள்ளதையும், மேலும் இவ்விலக்கியங்களில் பொருநை நதியின் பங்கு அதிகளவில் இருந்துள்ளதையும், நதியின் சிறப்புகளையும், நாட்டின் சிறப்புகளையும் கே.வே. பெருமாளின் பொருநை வளம் என்ற நூலின் மூலம் அறிந்துகொள்ள முடிகின்றது. ஒரு நதி பல பெருமைகளோடு விளங்கியதையும், திருநெல்வேலி, தென்காசி மாவட்ட மக்களுக்கு பொருநை நதியாகிய தாமிரபரணி தண்ணீர் குடிநீராக விளங்கியதையும் இப்பகுதியின் மூலம் உணரமுடிகின்றது.

#### துணை நின்ற நூல்கள்


1. மதுரகவியின் அத்தாள நல்லூர் ஸ்தல மான்மியம் ப.எ.13
2. கம்பராமாயணம் நாட விட்ட படலம் பா.எ. 4477
3. பொருநை வளம் ப.எ.11
4. மேலது ப.எ.27
5. மேலது ப.எ.34
6. மதுரகவியின் அத்தாள நல்லூர் ஸ்தல மான்மியம் பா.எ.152
7. மேலது பா.எ.172
8. பொருநை வளம். ப.எ.72


●


**கட்டுரையாளர்: மீ. பார்வதி,**
முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை,
ஸ்ரீ பராசக்தி மகளிர் கல்லூரி, குற்றாலம்

**நெறியாளர்: முனைவர் மு.கலாமாரி,**
உதவிப்பேராசிரியர் (சு/பி), தமிழ்த்துறை,
ஸ்ரீ பராசக்தி மகளிர் கல்லூரி, குற்றாலம்.




Article

# A STUDY ON THE REPERCUSSION OF ECOLOGICAL DESTRUCTION AND ECONOMIC CONSTRUCTION IN AMITAV GHOH'S IBIS TRILOGY AND SA. KANDASAMI'S SAYAVANAM

**Ms K. Maheshini**
**&**
**Dr S. Jayanthi**

India is a rich nation that upholds ancient traditions and diverse customs. It features vast landscapes and varied vegetation across different terrains, which contribute to the nation's wealth. The geographical and climatic features of an area often determine the types of vegetation that serve as the primary food source for its inhabitants. Colonialism brings significant transformations to every aspect of India, including the cultivation of nonnative cash crops on Indian soil. These crops are purposefully imposed to boost Britain's economic growth. However, the imbalance between cultivating subsistence crops and cash crops leads to famine. The Ibis Trilogy by Amitav Ghosh explores the effects of colonization, focusing on how the British use Indian land to grow opium as a trade monopoly. While the opium trade enriches the British economy and benefits some Indian traders, it devastates both Chinese and Indian land. Similarly, Sa. Kandasamy, in his




Sayavanam, examines the effects of colonialism, highlighting the destruction of forests to build a sugarcane mill. This forces local farmers to cultivate sugarcane instead of their traditional crops. This article aims to study the impact of these agricultural shifts and the resulting changes in the lives of people, which lead to widespread suffering. It provides a comparative analysis of the texts and characters in the Ibis Trilogy and Sayavanam, focusing on the transformations they undergo.

**Introduction**

Amitav Ghosh is a prolific writer of English literature whose works primarily focus on the colonial impacts on people and the environment. He received numerous awards for his literary achievements, including the Ananda Puraskar and the Sahitya Akademi Award for The Shadow Lines and the Arthur C. Clarke Award for The Calcutta Chromosome. In 2007, the Government of India honoured him with the Padma Shri, and he was later awarded the Lifetime Achievement Award during the Mumbai Literary Festival. In 2018, he became the first Indian writer to receive the Jnanpith Award. The Ibis Trilogy by Amitav Ghosh examines the opium trade that devastates China's economy. Through these three expansive narratives, the trilogy explores the opium trade and the opium war, employing diverse characters to depict suffering, wartime events, power dynamics and exploitation. Ghosh highlights humanity's greed and demeaning behavior toward fellow beings.

Sa. Kandasamy is a renowned Tamil writer and documentary filmmaker who won the Sahitya Akademi Award for his novel Visaranai Commission in 1998. His debut novel, Sayavanam, illustrates the consequences of forest destruction. The story portrays how a self-sufficient village faces hardship due to its altered needs. Through this work, Kandasamy warns of future disasters stemming from human errors. Sayavanam features a straightforward plot without twists or turns, enabling the author to clearly identify human flaws and present them in a casual manner. The novel underscores the greed underlying human actions, with its characters demonstrating how the British colonize not only the land but also the minds of the native people. With his lucid writing style, Sa. Kandasamy effectively conveys these flaws to his readers and cautions against repeating such mistakes in the novel's concluding section.

**Discussion**

Literature serves as a vital medium for shaping lives and documenting various facets of society, culture and history. Amitav Ghosh's Ibis Trilogy, comprising Sea of Poppies (2008), River of Smoke (2011) and Flood of Fire (2015), provides a compelling exploration of colonial exploitation, caste-based societal structures, untouchability, ecological destruction, male domination and migration caused by systemic biases. The trilogy focuses on the First Opium War (1839-1842), where Ghosh examines the struggles of Indian traders, impoverished villagers and Indian soldiers caught in the upheavals of colonialism.

Sea of Poppies begins with the key character Deeti, who begins her journey as a farm worker in the opium fields of Ghazipur, a village located between Bihar and Uttar Pradesh. The narrative reveals how the people of Ghazipur are coerced into cultivating opium, abandoning their traditional crops such as wheat, cereals and pulses. Through this depiction, Ghosh underscores the devastating socio-economic and environmental consequences of colonial policies, offering a poignant critique of their enduring impact. "As those toothsome winter crops diminished in size, the factory's craving for opium seemed to never be fulfilled" (Ghosh, 29). With these lines, Ghosh highlights the Britishers drive to expand trade and amass greater profits. The British

extract opium from poppy plants and export it to China, driven by their relentless pursuit of economic dominance. Factory workers, however, endure severe health issues due to the hazardous working conditions. Amitav Ghosh vividly describes the dire state of the factories, illustrating the oppressive and exploitative environment imposed by colonial powers as “The air inside was hot and fetid, like that of a closed kitchen, except that the smell was not of spices and oil, but of liquid opium mixed with the dull stench of sweat...she discovered, bare-bodied men, sunk deep in tanks of opium” (Ghosh, 94-95).

Deeti’s husband Hukum Singh is a former soldier of the British army and is currently working in the opium factory. Dr. Sujatha points, “The opium factory looms like a demon in the lives of the workers and their families and becomes the very symbol of colonial oppression” (Sujatha, 137). Hukum Singh succumbs to the effects of excessive opium consumption, leaving his wife, Deeti, in a vulnerable position. After his death, Deeti faces the threat of being forced into sati to avoid exploitation by her husband’s brother. Kalua, a low-caste man from a neighboring village, helps her escape, and together they board the Ibis-a ship transporting slaves and indentured laborers from various British-controlled regions to Mauritius to work in British colonies. Zachary Reid, a black man fleeing American prejudice, also finds himself aboard the Ibis, seeking his destiny. The ship carries a mix of characters, including Serang Ali, a recruiter who enlists laborers under his control and Baboo Nob Kissin, a man driven by his quest for fortune, who joins the voyage on the Ibis. Ghosh intricately weaves their stories to illustrate the intersecting lives shaped by colonialism and its exploitative systems.

The Ibis sails from Calcutta to Mauritius, carrying slaves, their leaders and the captain of the ship. The term "Poppies" in the title of the novel Sea of Poppies refers to characters who are separated from their native lands. Ahmed states, “Ghosh portrays the characters as poppy seeds, emanating in large numbers from the field to form a sea, where every single seed is uncertain about its future” (Ahmed, 128). Throughout the voyage, the characters develop strong relationships, exchanging their personal stories. However, they eventually stage



a mutiny after enduring harsh treatment from the ship's officers. The ship's chief, Sirdar, and Mr. John Crocole are killed during the mutiny, and Zachary Reid and Serang Ali assume leadership of the ship. After surviving a fierce storm, the ship finally reaches Mauritius.

River of Smoke, the next in the trilogy, introduces a variety of characters, including Deeti and her shipmates in Mauritius. It also focuses on two additional ships: Anahita, which carries opium to China for trade and is owned by Bahram Modi, an opium merchant from Bombay, and Redruth, which transports medicinal plants and is owned by Mr. Penrose Fitcher, a botanist searching for the medical plant Golden Camelia in China. This part of the trilogy offers a detailed exploration of the traders' businesses, their travels, and their illicit dealings in China.

The plot centers around Bahram Modi, an opium merchant, Mr. Penrose, and the laws implemented by the Chinese government to abolish the opium trade. Ghosh portrays the devastating effects of opium consumption in China, emphasizing the pollution of the Pearl River, where many trade ships dock. The clear river becomes muddied due to

the disposal of opium balls into it: "...when the opium melts the sluices are opened and opium is allowed to drain into the river" (Ghosh, 534). Bahram's second wife, Chi-mei, is killed by a robbery gang, and his illicit son heads to Singapore in search of fortune. Eventually, opium traders are banned from entering China, and one of them is arrested and strangled to death. Overcome by the loss in trade, Bahram commits suicide by drowning himself in the river.

The final volume of the Ibis Trilogy is Flood of Fire. The story begins with the notes of Havildar Kesri Singh, an army officer and Deeti's brother. The narrative progresses with an investigation into a murder aboard the Ibis ship. The novel unfolds in three phases, which includes Shireen Bai's journey to China in search of her husband Bahram Modi's grave, Kesri Singh's experiences in the British army, and Zachary Reid's work at Mr. Burnham's palace alongside his involvement in the opium trade.

The central theme of the novel is to highlight the First Opium War between the British and China. All the characters ultimately converge in China, and through detailed descriptions of the war, Ghosh questions the reasons behind the mass casualties on both sides. His vivid portrayal of the war's brutality is captured in this passage: "Plastered against the light-coloured stone of the walls, in bright, bloody splashes, were clumps of tissue and fragments of bone. Here and there splattered brains could be seen dribbling down like smashed egg-yolks" (Ghosh, 471). The novel concludes with the British victory, leading to China's surrender of key territories for free trade and the payment of a six-million-dollar penalty to the British government.

The plot of the novel Sayavanam takes place in a small self-sustained village in Thanjavur. The villagers grow various crops for their own use, with paddy being the major cultivation. They follow a barter system to fulfill all their needs, and they are unfamiliar with money, relying solely on bartering. The village is home to a vast forest, owned by the wealthy Sambamoorthy Iyer. Chidambaram, the protagonist of the novel, comes from Sri Lanka, buys the forest from Iyer, and plans to establish a sugarcane mill. This idea strikes the villagers as unusual, as they cannot imagine life beyond their basic needs.

The villagers are curious about Chidambaram, a young, energetic man with new ideas, and his dynamic actions astonish them. He begins by clearing the forest using manual labor, but when this proves difficult, he sets fire to the entire forest. Once the forest is reduced to ashes, he starts building the sugarcane mill. He brings in numerous workers, as well as large machines and motors, and ultimately succeeds in constructing the mill. His sugar becomes famous, and he begins to earn money, using it as a medium for fulfilling his needs. Chidambaram introduces the concept of money to the villagers, and as a result, they experience significant changes in every aspect of their lives. Sa. Kandasami intricately explores the profound effects of these changes brought about by Chidambaram's actions.

A comparative analysis of Amitav Ghosh's Ibis Trilogy and Sa. Kandasami's Sayavanam reveals certain similar themes, particularly the shift toward new businesses or trades aimed at earning money, without regard for the morality or dangerous consequences associated with these actions. Mr. Bahram seeks to earn money through the opium trade. He owns a ship named Anahita, which is named after the water goddess. The ship is built by his father-in-law, a renowned shipbuilder in Bombay. Bahram marries Shireenbai, a woman from a wealthy Parsi family, and aims to prove his worth by earning money through the opium trade. However, his father-in-law vehemently rejects the idea, as he believes it is immoral. He states, "What? Selling opium overseas? That's just gambling..." (Ghosh, 50). He views earning money through the opium trade, which destroys lives, as a sin and condemns Bahram's plan.

In contrast, Bahram Modi argues that there is no space for sin when one works hard to earn money through trade. Angela captures this shift in values, stating, "Giving more importance in earning money, the new world order promotes any illegal practices to acquire wealth" (Angela, 785). Similarly, in Sayavanam, Sivanandi Thevar expresses his reluctance to sell land to Chidambaram. He warns Sambamoorthy Iyer that selling the forest to Chidambaram will enable him to do whatever he wishes, and he predicts that Chidambaram will bring significant changes to the village's traditional way of life.

The most crucial part of the novel Sayavanam is the forest fire. As Chidambaram finds it difficult to destroy the forest, he sets it on fire to make his task easier. The forest is a biodiversity hotspot, home to numerous animals, birds, and reptiles. The fire kills every living being within it. The forest can be considered a critical part of the ecosystem, balancing the food chain of the jungle's inhabitants. Chidambaram witnesses the death of various creatures, some of which attempt to escape the flames. Monkeys, foxes and birds flee the forest, aware of the danger, while most of the other beings perish in the fire. An injured crow emerges from the fire, its body badly burnt. It stumbles near Chidambaram, who picks it up with its legs and throws it back into the flames. Driven by curiosity, he retrieves it again with a sharp, long knife and watches it keenly as it dies. An injured snake also emerges from the fire, scaring him. None of these scenes evoke sympathy for the natural world; instead, they seem to satisfy him, as he is about to begin constructing his factory.

Once the fire is subdued by the rain, Chidambaram and Sivanandi Thevar visit the area and witness the devastation: dead animals, birds, and trees. Sivanandi Thevar is shocked to find a large cow burned alive. His heart fills with sorrow as he tells Chidambaram that the fire has killed all the living beings of the forest. However, Chidambaram remains unmoved by the horrific scenes. Chidambaram's heartlessness can be compared to the British East India Company's imposition of opium and the opium war waged on China. Despite being aware of the harmful effects of opium in both India and China, they never cease their trade.

Amitav Ghosh portrays the devastating effects of war in Flood of Fire through the perspective of Havildar Kesri Singh, a Naik in the army. Ghosh vividly describes the bloodshed on the battlefield through Kesri Singh's eyes: "The sickened Kesri in all his years of soldiering he had never seen a slaughter like this one. On some, the clothes were still burning..." (Ghosh, 470). Meanwhile, Shireen Bai, who travels to China in search of her husband's tomb, is distressed by the sounds of gunshots. Through these descriptions of destruction, both authors highlight the crucial role of exploitation and the pursuit of money, leaving a lasting impression on readers.

The British use Indian land as a resource for their income, forcing Indian farmers to cultivate cash crops such as opium and indigo. Through his writings, Ghosh highlights the immense changes that occur in villages, emphasizing that "the material which was freely available to the people earlier has now become expensive due to the change in the cultivation from food crops to cash crops" (Khan, 4240). Amitav Ghosh through his works shows how the British monopoly method harms both Indians and Chinese. Indian farmers are forcibly prohibited from cultivating their traditional crops and are instead ordered to grow opium, which leads to widespread famine that claims millions of lives in India. On the other hand, opium causes severe destruction to the economy by making people sick and addicted, while British and Indian traders grow richer from this trade.

In a similar way, the novel Sayavanam marks the beginning of monopoly. Sayavanam is a small village where agriculture is the primary occupation. Experienced farmers in the village claim that the land yields more paddy, and they recall the losses they suffered due to cash crops like sugarcane when Chidambaram arrives with the idea of building a sugarcane mill. The farmers of the village cultivate subsistence crops, which become their wealth. They fulfill all other needs through paddy grains instead of money. The village of Ghazipur can also be compared to the village of Sayavanam. Through the words of Ghosh,

In the old days, the fields would be heavy with wheat in the winter, and after the spring harvest, the straw would be used to repair the damage of the year before. But now, with the sahibs forcing everyone to grow poppy, no one had thatch to spare - it had to be brought at the market, from people lived faraway villages, and the expense was such that people put off their repairs as long a they possibly could (Ghosh, 29)

**it is evident that both the villages lost their self sustenance.**

Once Chidambaram starts his factory, some farmers decide to grow sugarcane on their own farms. They gain hope from Sivanandi Thevar's decision to cultivate sugarcane to help Chidambaram, as it shows good growth. This can be aligned with Ghosh's portrayal wherein inspired by the economic success of Mr. Bahram and Mr. Burnham, Zachary Reid

also become involved in the opium trade to earn money. This leads him to accumulate substantial wealth, boosting his confidence to continue the trade. The people of Sayavanam are indirectly forced by Chidambaram's actions to cultivate sugarcane on their farms, just as the people of Ghazipur are directed to cultivate opium under British rule.

In the end of the novel Flood of Fire, the British capture Hong Kong and begin building their trade. Meanwhile, the traders, after the war, rush to acquire land left behind by the Chinese people. In Sayavanam, towards the end of the novel, Chidambaram opens a grocery store. After destroying the forest, which had been a source for all basic needs, the people of the village struggle to find quality products like tamarind etc.. To address this, Chidambaram brings grocery items from other regions and sells them in the village. While his sugar is praised by all, the other products in his store are criticized for their low quality. The last line of the novel ends with the complaint of an old woman about his destructive actions, which led to the loss of quality products. She complains about the poor-quality tamarind he sells in his store, and he reassures her that he will send her a good one soon. She responds, "You have burned everything in the forest, then how will you send me the good one?" (Kandasamy, 239).

### Conclusion

Both Sayavanam and Ibis Trilogy are published during the post-colonial period. Although Ghosh's Ibis Trilogy explores various themes such as colonization, exploitation, love, relationships, war, suffering and caste-based discrimination in India, it also delves into the impact of monopoly, the loss of traditional crops and food scarcity. On the other hand, Sa. Kandasami dedicates his entire novel to highlighting the profound changes that occur in a small village. Both authors commemorate the losses resulting from human desires that exceed basic needs. They conclude their works with a parallel message emphasizing the human tendency to prioritize economic growth without regard for its consequences. Through their narratives, both Ghosh and Kandasami vividly illustrate the flaws in human actions that lead to the destruction of ecosystems in pursuit of economic stability.


### Acknowledgement for Funding

Ms. K. Maheshini is a recipient of Indian Council of Social Science Research Doctoral Fellowship. This article is largely an outcome of her doctoral work sponsored by ICSSR. However, the responsibility for the facts stated, opinions expressed and the conclusions drawn is entirely that of the author.


### Works Cited


- Ghosh, Amitav. Sea of Poppies. Penguin Publishers, 2008.
- Ghosh, Amitav. Flood of Fire. Penguin Publishers, 2011.
- Ghosh, Amitav. River of Smoke. Penguin Publishers, 2015.
- Kandasamy, Sa. Sayavanam. Bookventure, 1968.
- Ahmed, Sufian. Amitav Ghosh's Novels: National Narratives, Cross-Cultural Connections
- and Postcolonial Modernity. Sarup Publishers. 2019.
- Angela, Lerince Baby. "Neo-Colonialism: in Amitav Ghosh's River of Smoke." International
- Journal of Creative Research Thoughts, Vol. 9, no.11, 2021, pp. 779-787.
- Khan, P. Basheer, and R. Thahiya Afzal. "In The Shadow of Opium: Amitav Ghosh Sea of
- Poppies." Think India Journal. Vol. 22, no.4, 2019, pp. 4238-4242.
- Sujatha, A. "Opium and India in Sea of Poppies: A Socio-Environmental Study." The Fiction
- of Amitav Ghosh: A Critical Commentary. Atlantic Publishers, 2013.


●



**K. Maheshini**
Research Scholar
Research Department of English
Sri S Ramasamy Naidu Memorial College, Sattur
(Affiliated to Madurai Kamaraj University, Madurai)

**Dr S. Jayanthi**
Research Supervisor & Head
Research Department of English
Sri S Ramasamy Naidu Memorial College, Sattur
(Affiliated to Madurai Kamaraj University, Madurai)


# நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் புதிய வெளியீடுகள்




₹ 200/-




₹ 100/-




₹ 100/-




₹ 200/-


Published by **Shanmugam Saravanan** on behalf of **New Century Reader's Sangam**
at 16 (142), Jani Jhan Khan Road, Royapettah, Chennai - 600 014 and Printed by **A.Sivakumar** at **Pavai Printers (P) Ltd.**,
16 (142), Jani Jhan Khan Road, Royapettah, Chennai - 600 014. Editor: **T.Stalin Gunasekaran**

New Centurian Ungal Noolagam (Tamil English - Bilingual Monthly) Registered with RNI No :TNBIL/2009/28728. Postal Regn No.TN/CH(C)/601/2025-2027. WPP No: TN/PMG(CCR)WPP-673/2025-2027
Date of publication 1-7th of every month Posted at Egmore RMS / 1 Patrika Channel
If undelivered, please return to: New Centurian Ungal Noolagam,
16 (142), Jani Jhan khan road, Royapettah, Chennai - 14.

# நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின்

## முன் வெளியீட்டுத் திட்டம்

# தோழர் தமிழ்ஒளி ஆக்கங்கள்




**தோழர் தமிழ்ஒளி (1925 – 1965) நூற்றாண்டுச் சிறப்பு வெளியீடு**

**2400 பக்கங்கள்**

விலை ~~ரூ.3000/-~~

முன் வெளியீட்டுத் திட்டத்தில்

**ரூ.1500/- மட்டுமே!**

(தபால் செலவு உட்பட)

1/8 டெம்மி அளவு தரமான தாள் கெட்டி அட்டை வடிவமைப்புடன்

முன்வெளியீட்டுத் திட்டத்தில் பணம் செலுத்திப் பதிவு செய்துகொள்ளலாம்

## நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,

41-பி,சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 050.
☎ 044 - 26251968, 26258410, 48601884 www.ncbhpublisher.in | email: info@ncbh.in